
# 2013 அவ்யக்த முரளி



பொருளடக்கம் - 11

**18.01.2013** தற்போது பிரம்மாபாபாவிற்குச் சமமாக சம்பன்னம் மற்றும் சம்பூர்ணம் ஆவதற்காக எடுத்து வைக்கும் அடியை, உற்சாகம் ஆர்வத்தோடு வேகப்படுத்துங்கள்; இதற்காக விசேஷத் திட்டம் தீட்டுங்கள் -இதுவே பாப்தாதாவின் ஆசை!

**02.02.2013** பாபாவின் அன்பு சிநேகத்தில் மூழ்கி, சக்திகளின் மூலம் மனதை கட்டுபடுத்தி, சதா மனதை வென்றவர்களாக, உலகை வென்றவர்களாக ஆகுக!

**20.02.2013** கர்மயோகி வாழ்க்கையில் தீவிர முயற்சி மூலமாக ஒவ்வொரு பாடத்திலும் எப்பொழுதும் திருப்தியாக மற்றும் குஷியாக இருங்கள், தன்னுடைய குஷி நிறைந்த, தெய்வீக குணங்கள் நிறைந்த முகம் மூலமாக குஷியை அனுபவம் செய்வியுங்கள்!

**09.03.2013** பிரம்மாபாபாவுக்குச் சமமாக ஃபரிஷ்தா நிலையில் இருந்து, நமது மகிழ்ச்சி நிறைந்த முகத்தின் மூலம் அனைவருக்கும் குஷியினுடைய அனுபவத்தை செய்வியுங்கள், என்னென்ன வீணான எண்ணங்கள் இன்னும் இருக்கின்றனவோ அவைகளை பிறந்த நாள் பரிசாக பாபாவிற்குத் தந்து விடுங்கள்! (சிவ ஜெயந்தி)

**22.03.2013** பகவான் மற்றும் பாக்கியத்தினுடைய நினைவின் மூலமாக சதா மகிழ்ச்சியுடன் இருங்கள், பிறருக்கும் மகிழ்ச்சியூட்டுங்கள், வீணான விசயங்களை கடந்து (ஹோலி) போனவைகளாக்கி, ஹோலி கொண்டாடுங்கள்!

**05.04.2013** சுப பாவனையுடன் ஒருவர், மற்றவருக்கு உதவிகரமாக ஆகி, தடைகளற்று விளங்க வேண்டும் மேலும் அனைவரையும் தடைகளற்றவராக ஆக்கி, சதா குஷியோடு இருக்க வேண்டும், அனைவரையும் குஷி படுத்த வேண்டும்!

**24.10.2013** தற்கால சூழ்நிலைக்கு ஏற்ப மனதின் சக்தியால் சக்திவாய்ந்த ஒளிக்கதிர்களை உலகிற்கு வழங்கும் சேவை செய்யுங்கள் -தன்னுடைய உள்ளுணர்வு மூலமாக பிறருடைய உள்ளுணர்வுகளை மாற்றம் செய்யுங்கள்!

**15.11.2013** எந்தவொரு விஷயம் (சோதனை) வந்தாலும் அதை பாபாவிடம் கொடுத்து விட்டு புன்சிரிப்புடன் இருங்கள்!

**30.11.2013** வீடியோ கான்ஃபரன்ஸ்'ங்!

**15.12.2013** அன்பான நினைவுகள்!

**31.12.2013** பழைய வருடத்திற்கு விடை கொடுத்து விட்டு கூடவே சொப்பனத்தில் கூட என்ன பலவினம் இருந்ததோ அதனை விடுவது மற்றும் உற்சாகம், ஆர்வத்தோடு நற்குணங்களை தாரணை செய்வதற்கான மன உறுதி நிறைந்த சங்கல்பம் செய்து எப்பொழுதும் ஆஹா! ஆஹா! என்று வாழ வேண்டும், தினமும் அந்த சங்கல்பத்தை அமிர்தவேளையில் மீண்டும் மீண்டும், நினைத்து வந்தால் பாப்தாதாவினுடைய அதிகபட்ச உதவி கிடைக்கும்!

தனிப்பட்ட சந்திப்புகள் -பார்ட்டிகளுடன் etc

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂

# **18.01.2013 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்**

# தற்போது பிரம்மாபாபாவிற்குச் சமமாக சம்பன்னம் மற்றும் சம்பூர்ணம் ஆவதற்காக எடுத்து வைக்கும் அடியை, உற்சாகம் ஆர்வத்தோடு வேகப்படுத்துங்கள்; இதற்காக விசேஷத் திட்டம் தீட்டுங்கள் -இதுவே பாப்தாதாவின் ஆசை!

இன்று பாப்தாதா தனது இனிமையிலும் இனிமையான, மிக அன்பான குழந்தைகளைப் பார்த்து குஷி அடைந்துக் கொண்டிருக்கின்றார். அனைவரது உள்ளத்திலிருந்தும் ஆஹா பாபா! ஆஹா என்று வெளிப்படுகிறது. மேலும் பாபாவினுடைய வாயிலிருந்தும் ஆஹா குழந்தைகளே! ஆஹா! இதே வார்த்தைகள் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இன்று நாலா புறங்களிலுமுள்ள குழந்தைகளைப் பாபா பார்த்துக் கொண்டிருக்கின்றார். அனைவருடைய மனதிலும் பிரம்மாபாபாவின் மீதான சினேகத்தின் ஜொலிப்பு தென்பட்டுக் கொண்டிருக்கின்றது. அனைவரது மனதிலும் அன்பின் அலைகள் தென்படுகின்றன. பாபாவினுடைய மனதிலும் ஒவ்வொரு குழந்தையின் பொருட்டும் அன்பின் அலைகள் பிரவாகமாய் ஓடிக் கொண்டிருக்கின்றன. இந்த அன்பு அலௌகீகமான அன்பாகும். பெரும்பான்மையான குழந்தைகள் அன்பின் சக்தியின் மூலமாகவே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் என்பதை பாப்தாதா பார்த்தார். பாபாவிற்கும் ஒவ்வொரு குழந்தையின் மீதும் அன்பு வந்து கொண்டிருக்கின்றது. மேலும் உள்ளப்பூர்வமாக ஒவ்வொரு குழந்தையின் பொருட்டும் இனிமையான குழந்தாய், அன்பான

குழந்தாய், என்னும் வார்த்தைகள் வெளியாகின்றன. ஒவ்வொரு குழந்தையையும் பாபா மூன்று சிம்மாசனங்களின் எஜமானர்களாக ஆக்கியிருக்கின்றார். தெரியுமா முழு கல்பத்திலும் எந்த ஒரு ஆத்மாவும் மூன்று பீடங்களின் எஜமானர்களாக ஆக முடியாது ஆனால் நீங்கள் சிரேஷ்ட ஆத்மாக்கள் மூன்று பீடங்களின் எஜமானர்களாக ஆகி, எவ்வளவு ஆன்மீக அன்பில், போதையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றீர்கள்! ஒவ்வொரு வரும் தன்னைத் தான் கேட்டுக் கொள்ளுங்கள்- இந்த அளவு குஷி, இந்த அளவு ஆன்மீகப் போதை சதா நினைவில் இருக்கின்றதா? சதா என்னும் வார்த்தை சதா நினைவில் இருக்கின்றதா? ஏனெனில் பாப்தாதாவிற்கு அவ்வப்போது என்கிற வார்த்தை நன்றாக இருப்பதில்லை.

இன்று அனைவரும் எதிரில் அமர்ந்திருந்தாலும் சரி, அல்லது அவரவர்களது சென்டர்களில் அமர்ந்திருந்தாலும் சரி, ஆனால் பாபாவோ பார்த்துக் கொண்டு தான் இருக்கின்றார். தூரத்தில் இருந்தாலும் பாபாவிற்கு அருகாமையிலேயே இருக்கின்றீர்கள். ஆக பாப்தாதாவும் பார்த்தார். ஒவ்வொரு குழந்தையும் இன்று விசேஷமாக பிரம்மாபாபாவின் சினேகத்தில் மூழ்கியிருக்கின்றனர். சினேகம் என்பது கஷ்டமான விசயங்களைக் கூட எளிதாக்கி விடுவதாகும். ஆக பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் மீதும் அதிகபட்சமாக அன்பு செலுத்துகின்றார். ஒருவர் புருஷார்த்தியாகக் கூட இருக்கலாம் ஆனாலும் பாபாவின் குழந்தைதானே! ஆக இன்று பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் வாயிலிருந்தும் சதா என்கிற வார்த்தையே வெளிப்படட்டும் என்று விரும்புகின்றார். இது நடக்குமா? இப்பொழுதிலிருந்தே சதா என்ற வார்த்தை எளிதானது தான். லட்சியம் வைக்கும் பொழுது லட்சணம் வந்தே தீரும். பாப்தாதா உதவியாளராக இருக்கின்றார் என்று எண்ணுபவர்கள் கை உயர்த்துங்கள் (அனைவரும் உயர்த்துகின்றனர்) ஆஹா குழந்தைகளே ஆஹா கை தட்டுங்கள் இதற்கு!

பாப்தாதாவும் எதிரில் இருக்கும் குழந்தைகளைப் பார்த்து மட்டும் கூறுவதில்லை. நாலா புறங்களிலும் உள்ள குழந்தைகளைப் பார்த்து ஆஹா ஆஹா என் அருமை குழந்தைகளே ஆஹா! என்று அன்போடு கூறுகிறார். பாப்தாதாவோடு அன்பு செலுத்துவதில் நம்பர்-1 ஆக

இருக்கும் பெரும்பான்மையான குழந்தைகள் போன்று சதா வெற்றியாளர்கள் என்ற இந்த வார்த்தையும் அவ்வப்போது வெளிப்படட்டும். இது நடக்கக்கூடுமா? முடியுமா? இதில் கைத் தூக்குங்கள். உயரமாக உயர்த்துங்கள், கை அசையுங்கள்! கைகள் எல்லாம் நன்றாகத்தான் அசைகின்றன! பாப்தாதா குழந்தைகளின் தைரியத்தைப் பார்த்து குஷி அடைகின்றார். ஒவ்வொரு குழந்தையோடும் பாபாவின் இரண்டு பாபாவின், பாப்தாதா இருவரின் உள்ளத்து அன்பு சதா இருக்கும்! போகப்போக சற்று மாயாவோடு சண்டை ஏற்பட்டாலும் பாபாவின் அன்பு ஒரு போதும் குறைந்து விடாது. மேலும் பாப்தாதா, அதிகப்படியான சகயோகம், அன்டைக் கொடுத்து உயரே தூக்குங்கள் என்று கூடவே இருக்கும் குழந்தைகளுக்குக் கூறுகின்றார். பாபா தற்போது இதையே விரும்புகின்றார் -சமயத்தை எல்லோரும் அறிவீர்கள். காலம் எங்கு சென்றுக் கொண்டிருக்கின்றது என்பதையும் அனைவரும் அறிவீர்கள். ஆக தற்போதைய சமயத்தைப் பார்த்து பாப்தாதாவின் திடீரென்று என்னும் விசயங்களை நினைவில் கொண்டு வாருங்கள். பாப்தாதாவிற்கு உள்ளத்தில் இதே ஆசை தான் -ஒரு குழந்தை கூட பின்னால் தங்கியிருக்கக்கூடாது. கூடவே இருக்க வேண்டும். கூடவே திரும்பிச் செல்ல வேண்டும். கூடவே இருப்பது என்றால் ஸ்தூலமாக அல்ல, உள்ளத்தால் சதா ஸ்ரீமத்படி நடத்தல், இதுவே சதா கூடவே இருப்பதாகும். ஆக தற்போது சமய அனுசாரம் எப்படி அன்பு ஏற்படுகின்றதோ அப்போது கூடவே இருக்க வேண்டும் என்று எண்ணுகின்றனர். ஸ்தூல ரீதியாக கூடவே வாழ்வது என்பது முடியாது ஆனால் பாபா என்ன விரும்புகின்றாரோ, குடும்பம் முழுவதும் என்ன விரும்புகின்றதோ அதில் சமமாய் மற்றும் துணையாகி நடக்க வேண்டும். இதுவே கூடவே இருப்பதாகும்.

ஆக எப்படி இன்றைய தினம் பாப்தாதாவிடம் அன்பின் அலைகள் நாலாப்பக்கத்திலிருந்தும் ஒவ்வொரு குழந்தையினுடையதும் வந்து சேர்ந்தததோ அவ்வாறு பாப்தாதாவின் சுப ஆசை, தினமும் அமிர்தவேளையில் இருந்து இரவு வரை எண்ணம், சொல், செயல் மூலம் என்ன காரியங்கள் செய்கின்றீர்களோ அதில் சோதனை செய்யுங்கள். பாபா சொல்வதும் நான் செய்வதும் சமமாய் இருக்கிறதா? இது அவ்வளவு கஷ்டமாக இல்லையே? ஏனெனில், இரவு படுக்கைக்குச் செல்லும் முன் தினமும் தனது செயல்பாட்டினை சோதனை செய்து

வருவீர்கள்தான் பாபா இப்பொழுது விரும்புகின்றார் -குழந்தைகளாகிய நீங்கள் சுயமாக சம்பன்னமாகி காலத்தை அருகாமையில் கொண்டு வாருங்கள். வாருங்கள் குழந்தைகளே சேர்ந்தே செல்வோம். நமது இராஜ்யத்தில் என்று பிரம்மாபாபாவும் அழைத்துக் கொண்டிருக்கின்றார். ஆத்மாக்களுக்கும் முக்தியின் நுழைவாயிலை திறக்கச் செய்து முக்தியின் பாகத்தை நடிக்கச் செய்யுங்கள். சிலருக்கு இராஜ்யத்தில் பாகம், சிலருக்கு முக்தி தாமத்தில் பாகம்!

ஆக இன்றைய நாளில் அமிர்தவேளையில் இருந்து சினேகத்தினுடைய மாலைகள் அனைத்து தரப்பிலிருந்தும் அதிகமாக வந்து சேர்ந்தன. அவ்வாறு அனுப்பியவர்களுக்கு பாப்தாதா வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றார். இப்போது என்ன செய்ய வேண்டும்? இப்பொழுதோ பாப்தாதா மற்றும் உங்களது விருப்பம் இதுவே தான். அனைவரும் சம்பன்னமாகவும், சம்பூர்ணமாகவும் ஆகி விட வேண்டும். இந்த முயற்சியை வேகப்படுத்துங்கள். உங்களுக்கும் விரும்பம்தானே தமது சகோதர சகோதரிகளின் துக்கம் அசாந்தியைக் கேட்பது நன்றாக இல்லை அல்லவா இப்பொழுது எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து வேறு விஷயங்களுக்கு நேரம் ஒதுக்காது. இந்த திட்டத்தைத் தீட்டுங்கள்.

நாலா புறங்களிலும் சம்பன்னம் மற்றும் சம்பூர்ணம் ஆவதற்கான உற்சாகம் ஆர்வம் ஏற்படட்டும் பிரம்மாபாபா இதையே விரும்புகிறார். எனது ஒவ்வொரு குழந்தையும் எனக்கு சமமாக சம்பன்னமாக ஆகட்டும். பிரம்மாபாபாவின் இந்த ஆசையை பூர்த்தி செய்வீர்களா? ஆக இன்று பிரம்மாபாபா நாலா புறங்களிலுள்ள குழந்தைகளின் மீது சிநேகம் மற்றும் சக்திகளின் அலைகள் மற்றும் சுப சங்கல்பங்களின் அலைகளைப் பரப்பிக் கொண்டி ருந்தார். பாபாவும் கூட பிரம்மாபாபா மீதான குழந்தைகளின் அன்பை பார்த்து இன்று மலர்களைத் தூவும் நாளல்லவா. ஆக, பாபாவும் சுப ஆசைகளின் பூக்களாகிய சொன்னதும் செய்வது இந்த நம்பிக்கை மட்டுமின்றி, ஆனால் தீவிர புருஷார்த்தத்தின் பூக்களை நாலா புறங்களிலுள்ள குழந்தைகள் உங்கள் மீது தூவிக் கொண்டிருந்தனர். நல்லது.

பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் அது புதியதாய் வந்திருந்தாலும் சரி, முதல் தடவையாக வந்ததுள்ளவர்கள் எழுந்திருங்கள். பெரும்

பகுதியாக, பாதிக்கு மேல் புதியவர்களே வந்துள்ளனர். வந்திருப்பவர்களுக்கு பாப்தாதாவின் மிக மிக அன்பு நினைவுகள் உரித்தாகுக! பாப்தாதாவிற்கு மட்டற்ற மகிழ்ச்சி ஆனால் அற்புதங்களை செய்து காண்பிக்க வேண்டும்! நல்லது ஒவ்வொரு குழந்தையும் எதிரிலேயே தென்பட்டுக் கொண்டிருக்கிறது. இங்கே இருந்தாலும் சரி கடைசியில் இருந்தாலும் சரி, எதிரிலேயே தென்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆக ஒவ்வொரு குழந்தைக்கும் பாப்தாதாவின் அன்பு நினைவுகள் தற்போது மாற்றத்தை வேக வேகமாக கொண்டு வந்தே ஆக வேண்டும். வந்துள்ளீர்கள் அதற்காக வாழ்த்துக்கள், தற்போது முயற்சி (புருஷார்த்தம்) செய்து எண்ணிக்கையில் முன்னால் வந்து, வாழ்த்துக்களைப் பெற வேண்டும் நல்லது! அமருங்கள்.

சேவை முறை பஞ்சாப் மண்டலம்: வாருங்கள் பரவாயில்லை நல்லது! பஞ்சாபின் மீது பிரம்மாபாபாவிற்கு மிகுந்த அன்பு இருந்தது. பஞ்சாபிலேயே பல முறை சுற்றி வந்துள்ளார். எல்லா இடங்களுக்கும் செல்லவில்லை பிரம்மாபாபா ஆனால் ஒரு சில இடங்களுக்குச் சென்றுள்ளார் அதிலும் குறிப்பாக பஞ்சாபில் சுற்றி வந்துள்ளார் மற்றும் பஞ்சாபிற்கு தன்னுடைய நேரடியான வரதானங்களைத் தந்துள்ளார். மேலும் பஞ்சாபினுடைய விசேஷம் என்னவென்றால், குமாரிகள் மற்றும் டீச்சர்கள் அநேகம் பேரை தந்துள்ளது. மிகவும் தைரியசாலிகள் பயப்படுபவர்கள் அல்ல. சரிதானே டீச்சர்களே! வீரமிக்கவர்கள்தானே. பயப்படுபவர்கள் அல்ல, இல்லை! இறுதியில் எவ்வளவு பெரியவர்களாக இருந்தாலும் சரி என்னவாக இருந்தாலும் கடைசியில் வெற்றி என்பது சிவ சக்திகளுக்கே என்று கூறியே ஆக வேண்டும். நல்லது ஒவ்வொருவரையும் சேவையில் பாப்தாதா பார்க்கின்றார். நன்றாக செய்கின்றனர். செய்து கொண்டும் இருப்பர் ஆனால் அனைத்து மண்டலங்களுக்கும் பாப்தாதா கூறிய ஒரு விசயம் சான்றிதழ் பெறுவதற்கான அந்த விசயம் இது வரை எந்த மண்டலமும் பெறவில்லை. தற்போது பஞ்சாப் நம்பர்-1'ல் செல்ல வேண்டும். ஒருவர் கூற பிற அனைவரும் அன்போடு செய்ய வேண்டும். மேலும் எப்படி அன்றாட ஸ்தூல காரியங்களில் ஒருவர் பிறருக்கு துணையாக இருக்கின்றீர்களோ அவ்வாறே சம்ஸ்காரங்களில் ஒன்றுபட்டு செல்வதிலும் வெளிப்படையான பலனை காண்பியுங்கள். சரிதானா தற்போது அந்த நம்பர் இதுவரை வரவில்லை, எந்த மண்டலமும் இந்த

விசயத்தில் நல்ல முடிவை கொண்டு வர முடியவில்லை. பஞ்சாப் செய்யுமா? டீச்சர்கள் கை உயர்த்துங்கள், டீச்சர்கள் அதிகம்பேர் உள்ளனர்! மிக நல்லது பாப்தாதாவிற்கு மிக மகிழ்ச்சி!

இரட்டை வெளிநாட்டினர்: வெளிநாட்டினர் ஆனால் பாப்தாதா வெளிநாட்டு குழந்தை களினுடைய உற்சாகம், ஆர்வத்தைப் பார்த்து குஷி அடைகிறார். பாப்தாதாவிற்கு மிக மகிழ்ச்சி ஏனெனில், மதுபனிற்கு வந்து ஒவ்வொருவரும் தங்களது புருஷார்த்தத்தில் கூடுதலாக ஏதோ ஒன்றினைச் சேர்க்கின்றனர். நீங்கள் யாரெல்லாம் இப்போது வந்திருக்கின்றீர்களோ அனைவரும் ஏதோ ஒரு விசயத்தில் விசேஷமாக கவனம் செலுத்தியுள்ளீர்கள்தானே! இனிமேல் கொண்டு இதை பேசக் கூடாது -இதை பேசலாம். இரண்டிற்கும் உள்ள தெளிவான விளக்கத்தை எடுத்துச் செல்கிறீர்கள். மேலும் பாப்தாதா பார்த்தார் கவனம் செலுத்துகின்றனர். மேலும் நிமித்தமாய் இருக்கிறவர்களும், (டீச்சர்ஸ்) கவனப்படுத்துகிறார்கள் எனவே, பாப்தாதா மகிழ்ச்சி அடைகிறார். கவனம் கொடுத்து அநேகர் தங்களை மாற்றியும் கொள்கிறார்கள் இந்த ஒரு ரிசல்ட்டை பாப்தாதா பார்த்தார். மேற்கொண்டு இந்த கவனத்தையும் தர வேண்டும். அதாவது, மதுபனிற்கு வருவது என்றால் ஏதேனும் ஒரு விசயத்தில் முன்னேற்றம் அடைவது. ஆக நீங்கள் அனைவரும் என்ன செய்துள்ளீர்கள்? கை உயர்த்துங்கள். ஏதேனும் மாற்றத்தைக் கொண்டு வந்த பிறகே திரும்பிச் செல்ல வேண்டும் சரியா? சம்மதமா? பாப்தாதாவிற்கும் உங்கள் மீது மிகுந்த அன்பு ஏனெனில் பாப்தாதா பார்த்தார், இரட்டை வெளிநாட்டினர் அநேக குழந்தைகள் தீவிர புருஷார்த்தம் நன்றாக செய்கின்றனர். பாப்தாதாவிற்கும் இது மகிழ்ச்சிதான். மேலும் முன்வரிசையில் நம்பர் எடுத்துக் கொண்டே இருங்கள். ஏதோ நடந்து கொண்டிருக்கிறோம் அப்படி அல்ல. எந்த நம்பரில் வருகிறோம்? இதுவே முக்கியம். வருகிறோம். தியான வகுப்பிற்கு வந்து கொண்டிருக்கிறோம் அப்படியல்ல! ஒவ்வொரு நாளும் என்ன முன்னேற்றம் கண்டீர்கள்? முரளி கேட்பது, தாரணை செய்வது இதனுடைய நிரூபணம் என்ன? மாற்றத்தைக் கொண்டு வருவது ஆக, நல்லது பாப்தாதாவிற்கும் மிகுந்த மகிழ்ச்சி. மாற்றம் செய்கின்றீர்கள். எதிர்காலத்திலேயும் செய்து கொண்டே இருப்பீர்கள். நல்லது கை அசையுங்கள் பாப்தாதா அனைவரையும் பார்த்துக் கொண்டிருக்கின்றார் ஏனெனில், இதில் கூட

(எதிரில் உள்ள டிவி) தென்பட்டுக் கொண்டிருக்கிறது. நாடகத்தின் பிரகாரம் பாருங்கள் குழந்தைகள் வந்தனர். அவர்களுக்கு முன்பு 100-ஆண்டுகளுக்கு முன்னர் இந்த அறிவியலி ன் முன்னேற்றம் ஏற்பட ஆரம்பித்தது. ஆக, இப்பொழுது கூட பாருங்கள். இந்த விஞ்ஞானம் உங்களுடைய உதவிக்கு வந்து கொண்டிருக்கிறது. சரிதானா நல்லது! அனைத்து குழந்தைகளுக்கும், பின்னால் அமர்ந்திருக்கக்கூடிய அனைத்து குழந்தைகளும் கூட அவ்வாறே புரிந்து கொள்ளுங்கள், அதாவது, பாப்தாதாவிற்கும் எதிரிலேயே அமர்ந்திருக்கிறோம் மேலும் பாப்தாதா எனக்கு அன்பு நினைவுகளை தந்து கொண்டிருக்கின்றார்.

கல்கத்தாகாரர்கள் அனைத்து இடங்களிலும் பூக்களால் அலங்காரம் செய்துள்ளார்கள்: நன்றாக செய்கின்றனர். மேலும் மனப் பூர்வமாக செய்கின்றனர். மிகுந்த முயற்சியும் செய்கின்றனர். எனவே இவர்களுக்கு முக்கியமாக பாப்தாதாவின் தரப்பிலிருந்து இனிப்பு வழங்குங்கள். 6-6 பழங்கள் இவர்களுக்குத் தாருங்கள். யாரெல்லாம் மிகுந்த உழைப்பைத் தந்தார்களோ அவர்களுக்கு பழம் என்பது கிடைக்க வேண்டுமல்லவா! மற்றபடி நல்லது மனப்பூர்வமாக செய்கின்றனர். மேலும் மனதிற்கும் நன்றாக இருக்கின்றது. வாழ்த்துக்கள். முதலில் இங்கே வந்தது ஒன்று, அடுத்து சேவையும் செய்தீர்கள். இரண்டிற்கும் வாழ்த்துக்கள், நல்லது.

தற்போது நாலா புறங்களிலுள்ள குழந்தைகள் அவர்களை பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கிறார். அவர்களும் பாப்தாதாவை பார்த்துக் கொண்டிருக்கின்றனர். ஆக அனைவருக்கும் மிக மிக தீவிர புருஷார்த்தி, நினைத்தல் மற்றும் அதனை உடனேயே நடைமுறை செய்தல், இதுதான் தீவிர புருஷார்த்தம் என்று அழைக்கப்படுகிறது. ஆக, யாரெல்லாம் தீவிர புருஷார்த்தி குழந்தைகளோ அந்த ஒவ்வொருவருக்கும் பாப்தாதா தீவிர புருஷார்த்தத்தின் இலட்சியத்தின் வாழ்த்துக்களை கொடுக்கிறார். மேலும் கூடவே முன்னேறிச் செல்வதற்கான வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறார். நல்லது.

இன்று அனைவரோடும் சந்தித்து ஆகி விட்டது. ஒவ்வொருவரையும் எதிரிலேயே அமரச் செய்து சந்திக்க முடிவதில்லை ஆனால்

ஒவ்வொருவரையும் தூரத்தில் அமர்ந்தபடியே அருகாமையில் அனுபவம் செய்து, அன்பு நினைவுகளைக் கூறிக் கொள்கிறார். நல்லது.

அடுத்து என்ன செய்ய வேண்டும். பாப்தாதா தாதி ஜானகிஜி அவர்களுக்கு மலர் மாலையை அணிவித்தார்: நான் என்ன செய்வது, எல்லோரும் நன்றாகவே செய்து கொண்டிருக்கின்றனர். யாரெல்லாம் நிமித்தமாக இருக்கின்றனரோ அவர்கள் அனைவரும் நன்றாகவே செய்து கொண்டிருக்கின்றனர். கேட்டீர்களா? (தாதி ஜானகிஜி ஒரு சில சகோதர, சகோதரிகளைப் பற்றி (ஆரோக்கியம்) பாபாவுக்கு நினைவு உள்ளது) அவர்களுக்கு சொல்லுங்கள், பாப்தாதா அமிர்தவேளையில் சுற்றி வருகிறார்; அப்பொழுது இவர்களையும் பார்வையிடுகிறார் (நாராயணன் தாதா பிரம்மாபாபாவின் மகன் மருத்துவமனையில் உள்ளார்), சேவை கவனமாக செய்ய வேண்டும் மேலும் அன்பு நினைவுகளையும் கூற வேண்டும்.

மோகினி தீதி அஹமதாபாத் மருத்துவமனையிலிருந்து அன்பு நினைவுகளை அனுப்பியுள்ளார். எவ்வளவுதான் நோய் இருந்தாலும் பாப்தாதாவின் நினைவு இருந்தால் நோய் கூட விலகி விடும். எவ்வளவு முயற்சி செய்து நினைவில் இருக்கின்றனரோ நோய் பாதியாக குறைந்து போகிறது. எப்படி ஒரு மருந்து போல. இந்த நினைவு ஆகும். ஆக, செய்து கொண்டிருக்கின்றனர். செய்து கொண்டும் இருப்பர். நல்லது! இவ்வளவு தூரம் பொருத்துக் கொள்ளக் கூடிய தைரியம் இருக்கிறது. நல்லது சரியாகி விடும்.

நிர்மல் சாந்தா தீதி அறையில் உள்ளார்: இப்பொழுது கூட அறையில் இருந்து கொண்டு கேட்டுக் கொண்டுதானிருப்பார். அவர் நினைவு செய்கிறார். மேலும் பாபா அன்பு நினைவுகளை அனுப்புகிறார். நாராயணனுக்கு பாப்தாதாவின் தரப்பிலிருந்து இனிப்பு அனுப்பி வையுங்கள். அனைவருக்கும் பாப்தாதாவின் நினைவு கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். நல்லது.

டில்லிகாரர்கள் கூட நன்றாக முயற்சி செய்து கொண்டிருக்கின்றனர் (பிரிஜ் மோகன் சகோதரர் சிவ ஜெயந்தி நிகழ்ச்சிகள் பற்றி கூறினார்): எல்லோரும் ஒற்றுமையாக செய்யும்பொழுது நல்ல முறையில்

பரவுகிறது. நல்லது. மூலைமுடுக்கெல்லாம் செய்து ஆக வேண்டி உள்ளது ஆனால் ஒன்றாகக் கூடி செய்யும்பொழுது நாலா புறங்களிலும் பரவுகிறது நல்லது. அனைவருக்கும் ஒவ்வொரு டில்லிகாரரும் புரிந்து கொள்ளட்டும் நமக்கு அன்பு நினைவு. கிடைத்தது என்று!

ரமேஷ் சகோதரருடன்: ஆரோக்கியம் நன்றாக உள்ளதா? மிக நன்று (ஸ்டுடியோவின்) சேவையை அதிகரிப்பது எவ்வாறு? அதற்கு ஒரு குரூப்பை ஏற்பாடு செய்யுங்கள். சேவையினுடைய ஒரு குழுவை தயார் செய்யுங்கள். அதன் தலைமையாக யாரையாவது நிமித்தமாக வையுங்கள். பிறகு முடிவைப் பற்றி கேளுங்கள். என்ன நினைத்தீர்களோ அதை செய்ய வேண்டும். ஏதேனும் பிரச்சனை எழுந்தால் அதையும் தீர்வு செய்யுங்கள். இரவில் 5-நிமிடமாவது அமர்ந்து அவர்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவியுங்கள். அவர்கள் உற்சாகத்தில் வரட்டும் முயற்சி என்பது செய்துதானே ஆக வேண்டும். நல்லது! அனைவருக்கும் நினைவுகளைக் கூறவும்.

பாப்தாதாவின் அனைத்து குழந்தைகளுக்கும் யக்ஞ நிவாசிகள் மீது மிகுந்த அன்பு உண்டு. பாப்தாதாவின் நிமித்தமாக இருக்கக் கூடிய குழந்தைகள் அவர்கள் தாதி மார்கள் நிமித்தமாக இருக்கிறார்கள், அவர்களுக்கும் பாப்தாதா விசேஷ ஆசீர்வாதங்களை வழங்குகின்றார். ஆசீர்வாதங்களின் மூலமாகவே அவர்கள் நடந்து கொண்டிருக்கின்றார்கள். மேலும் நடத்தவும் செய்கிறார்கள். விசேஷமான ஆசீர்வாதம் யாரெல்லாம் நிமித்தமாக இருக்கிறார்களோ அவர்களுக்கு, அவர்கள் சகோதரர்களாக இருந்தாலும் சரி, சகோதரிகளாக இருந்தாலும் சரி, எந்தவொரு காரியத்திற்கும் நிமித்தமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு விசேஷமான ஆசீர்வாதம் கிடைத்துக் கொண்டே இருக்கும். நல்லது.

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 02.02.2013 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பாபாவின் அன்பு சிநேகத்தில் மூழ்கி, சக்திகளின் மூலம் மனதை கட்டுபடுத்தி, சதா மனதை வென்றவர்களாக, உலகை வென்றவர்களாக ஆகுக!

இன்று பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் பார்த்து புன்சிரித்துக் கொண்டிருக்கின்றார். ஒவ்வொரு குழந்தையும், எதிரில் இருந்தாலும் சரி, அல்லது துாரத்திலிருந்தாலும் சரி, பாபாவின் அன்பு சிநேகத்தில் மூழ்கி இருக்கின்றனர். பாப்தாதாவும் ஒவ்வொரு குழந்தையினுடைய சிநேகத்தைப் பார்த்து புன்சிரிக்கின்றனர். ஒவ்வொரு குழந்தையின் முகத்திலும் சிநேகம் நிறைந்திருக்கின்றது. மேலும் பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் பார்த்து, அன்பிலே மூழ்கி இருக்கும் குழந்தையைப் பார்த்து சிநேகத்தில் திளைத்திருக்கும் குழந்தைகளைப் பார்த்து குஷி அடைகின்றனர். ஒவ்வொரு குழந்தையிடமும் மூன்று வரதானங்களைப் பார்த்தனர். ஒன்று தந்தையின் ரூபத்தில் ஆஸ்தியின் வரதானம், இரண்டாவது ஆசிரியரின் ரூபத்தில் சிரேஷ்டமான அறிவுரைகளின் வரதானம், மூன்றாவது குருவின் ரூபத்தில் வரதானங்களின் வரதானம். மூன்று வரதானங்களின் சொரூபத்தைப் பார்த்து மலர்ச்சி அடைந்து கொண்டிருந்தனர். இங்கே எதிரில் அமர்ந்திருந்தாலும் சரி அல்லது துாரத்தில் அமர்ந்திருந்தாலும் சரி ஒவ்வொரு குழந்தையும் சிநேகத்தில் மூழ்கிப் போயிருந்தனர். பாபாவும் குழந்தைகளின் சிநேகத்தில் மூழ்கி இருக்கிறார். இந்த சிநேகம் ஒவ்வொரு குழந்தையையும் அன்பிலே முழுவதுமாய் மூழ்கிப் போன அனுபவத்தை செய்வித்துக் கொண்டிருந்தது. இந்த சிநேகம் அசரீரி ஆவதற்கான நல்ல ஒரு சாதனம் ஆகும்.

பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் பார்த்து குஷி அடைகின்றனர். என்ன பாடலைப் பாடினார்? ஆஹா! குழந்தாய், ஆஹா! இந்த சிநேகமானது அசரீரி ஆக்கக்கூடியது. பாபா குழந்தைகளைப் பார்த்து என்ன கூறுகிறார் ஆஹா! குழந்தைகளே ஆஹா! சதா இந்த சிநேகத்தில் இணைந்தே இருங்கள். இந்த பரமாத்ம சிநேகம் ஒவ்வொரு குழந்தையையும் பரமாத்மா அன்பிலே மூழ்கச் செய்வதாகும். பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் கண்களிலும் அவரவர்களின் பாக்கியத்தைப் பார்த்து கொண்டிருக்கின்றனர். இந்த ஒரு பிறவியில் 21-பிறவிகளுக்கான பாக்கியத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றனர். ஒவ்வொருவரின் மனதில் பரமாத்மாவின் அன்பு அனுபவமாகிக் கொண்டிருக்கின்றது. இந்த பரமாத்மாவின் அன்பு இந்த ஒரு பிறவியில் அந்தளவு சிரேஷ்டமாக ஆக்குகிறது, அதன் மூலம் ஆத்மா அன்பிலே மூழ்கிப் போய் அசரீரி ஆகி தனது வீடாகிய பரந்தாமம் செல்லும், கூடவே தனது இராஜ்யத்தின் அதிகார உரிமையையும் எடுத்து செல்லும்.

இன்று பாப்தாதா குழந்தைக்கு விசேஷ வரதானத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றனர். சதா பாப்தாதாவினுடைய சிநேகத்தில் ஒருங்கிணைந்து மனதை வென்று உலகை வென்றவர்களாக ஆக வேண்டும். சதா மனதின் எஜமானர்களாகி மனதை வென்றவர்களாக ஆகுக! மனதின் எஜமானன் ஆவது என்பது மிகவும் கடினம் என்று பலர் நினைக்கின்றனர் ஆனால் பாப்தாதா கூறுகிறார் -மனதை எனது மனம் என்று கூறுகிறீர்கள் அல்லவா, எப்படி என்றால் கர்ம இந்திரியங்களை எனது என்று கூறுகிறீர்கள், அப்பொழுது அந்த உடல் உறுப்புக்கள் (கர்ம இந்திரியங்கள்) ஒவ்வொரு காரியத்தையும் செய்கின்றன. அது போன்றே மனதை வென்று உலகத்தை வெல்வதும் கடினம் அல்ல. இன்று ஒவ்வொரு குழந்தையையும் பாபா மனதை வென்றவர்களாகவும், உலகை வென்றவர்களாகவும் ஆக்கிட விரும்புகின்றனர். மனதை சக்தியின் மூலம் கட்டுப்படுத்தி மனதை வென்றவர்கள் ஆக வேண்டும். பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் இன்று சதா மனதின் எஜமானர்களாகவும், மனதை வென்று உலகை வென்றவர்களாகவும் ஆக்கிட விரும்புகின்றார். என்னுடையது, இந்த என்னுடையது என்பதின் எஜமானன் நான் ஆவேன், எப்படி விரும்புகின்றேனோ எஜமானன் ஆகி மனதை நடத்தி செல்வது இதன்

மூலம் குஷியாக இருப்பீர்கள். எப்படி கை, கால்களை கட்டளையிட்டு நடத்துகிறீர்கள். ஏனெனில், இவையெல்லாம் என்னுடையது, அது போன்றே மனதையும் சக்தி சொரூபமாகி நடத்த முடியும் ஆனால் எஜமானன் ஆகி நடத்துனீர்கள் என்றால், மனதை வென்று உலகை வென்றவர்கள் ஆவீர்கள். இந்த சங்கமயுக நேரத்தில் பரமாத்மா பாபாவின் மூலம் வரதானங்கள் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. வரத்தை வழங்கும் வள்ளல் ஒவ்வொரு குழந்தைக்கும் வரதானங்களின் மூலம் பையை நிரப்புகிறார். ஒரு பிறவியில் பல பிறவிகளின் எதிர்காலத்தை அமைத்துக் கொள்ள முடியும்.

இன்று பாப்தாதா அநேக குழந்தைகள் தங்களது வீட்டை வந்து சேர்ந்துள்ளனர் என்பதை பார்த்துக் கொண்டிருக்கின்றார். பாப்தாதா அனைவருக்கும் மிக அன்புடன் மற்றும் சக்தியின் ரூபத்தில் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறார். கூடவே வரதானங்களையும் வழங்குகிறார். வரதானம் என்பது என்ன? சதா சக்தி சொரூப ஆத்மாவாகி இந்த கர்மேந்திரியங்களை நடத்தக் கூடிய மாஸ்டர் ஆகி, மனதை வென்று உலகை வென்றவர்களாகி சதா குஷியோடு இருப்பது மற்றும் குஷியை பிறருக்கும் வழங்குவது. ஏனெனில், இந்த உலக ஆத்மாவுக்கு தம் தம் காரியங்களை செய்து கொண்டு குஷியாக இருப்பதற்குப் பதிலாக பல்வேறு சூழ்நிலைகளுக்கு உட்பட்டவர்களாக வாழ்கின்றனர். இவ்வாறு உட்பட்ட நிலையை மாற்றி, உறுதியான நிலையிலிருங்கள். குஷியைப் பரப்புங்கள். உலகச் சூழ்நிலையை என்னவோ பார்த்துக் கொண்டுதானிருக்கின்றீர்கள் ஆனால் தன்னை அப்பாற்பட்டு விலகியிருப்பவர்களாகவும், பாபாவின் அன்பிற்குரியவர்களாகவும் ஆகி, அந்த அன்பிலேயே மூழ்கிப் போயிருங்கள். நல்லது.

இன்று முதல் முறையாக வந்திருப்பவர்கள் கை உயர்த்துங்கள், அதாவது விசேஷ அழைப்பின் பேரில் வந்திருப்பவர்கள், எழுந்திருங்கள். (முக்கிய நபர்களின் பூங்கொத்து, குழுவினர்) பாப்தாதா குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார். உங்களது வீட்டை வந்தடைந்துள்ளீர்கள், உங்களுடைய வீடாக உணர்கிறீர்கள் அல்லவா? அப்படியென்றால் கை உயாத்துங்கள். பாப்தாதாவும் குஷி அடைந்து, குழந்தைகளைப் பார்த்து பாடலும் பாடுகிறார். ஆஹா குழந்தைகளே

ஆஹா! ஏனெனில் இன்று உலகிற்குத் தேவை அவர்களது குஷி நிறைந்த வாழ்க்கை. ஒவ்வொருவரும் அநேக ஆத்மாக்களுக்கு அறிமுகத்தைக் கொடுத்து எப்படி பாரத தேசம் உன்னதமாக இருந்ததோ (சத்யுகம்) அது போன்று ஆக்க வேண்டும். பாப்தாதாவிற்கும் குஷிதான். உங்கள் அனைவருக்கும் கூட உங்களது இந்த பரந்த குடும்பத்தைப் பார்த்து மகிழ்ச்சிதானே. இதோ, இரண்டு கைகளையும் உயர்த்துகிறார்கள். மிகவும் நன்று. தமது சொந்த வீட்டிற்கு வந்துள்ளனர், தாமாகவே தமது குடும்பத்தினரை சந்திக்க! ஒருபோதும் குஷியை இழக்கக்கூடாது என்கின்ற இந்த வரதானத்தை பாப்தாதா வழங்குகிறார். குஷியாக இருக்க வேண்டும், குஷியைப் பரப்ப வேண்டும்.

**சேவையின் முறை கர்நாடகா, 11000-பேர் வந்துள்ளனர்:** பாப்தாதா இவ்வளவு அனைத்து குழந்தைகளையும் பார்த்து ஆஹா குழந்தாய்! ஆஹா! என்கின்ற பாடலைப் பாடுகிறார். ஒவ்வொரு மண்டலமும் தனது மண்டலத்தை முன்னேறச் செய்வதற்காக முயற்சி செய்து கொண்டிருப்பதை பாப்தாதா பார்க்கின்றார். இப்படி ஒவ்வொரு மண்டலமாக வருவது என்கின்ற இந்த வழக்கம் கூட ஒவ்வொரு குழந்தைக்கும் வாய்ப்பை அளிக்கிறது. அதிக எண்ணிக்கையிலும் வர முடிகிறது. பாப்தாதாவும் ஒவ்வொரு குழந்தையையும் பார்த்து குஷி அடைகிறார். இக்கூட்டத்தில் பாதிக்கு மேல் இந்த மண்டலத்திலிருந்து வந்துள்ளனர். பாப்தாதா கர்நாடகா மண்டலத்திற்கு விசேஷமான வரதானத்தைத் தருகிறார். சதா ஒருவர் பிறரோடு இணைந்து அற்புதங்களை செய்து கொண்டிருப்பர். எந்த ஒரு நிகழ்ச்சியைச் செய்தாலும் அற்புதமாக செய்யுங்கள். பாப்தாதாவிற்கு கர்நாடக மண்டலம் மிக அன்பாக ஏன் இருக்கிறது? ஏனெனில் கர்நாடகத்தில் சேவையானது மிக விஸ்தாரமாக நன்றாக அதிகரித்துக் கொண்டிருக்கிறது. அதிகரிக்கும். கர்நாடக மண்டலத்தினருக்கு பாப்தாதா இந்த வரதானத்தைக் கொடுக்கிறார், சதா குஷி குஷியோடு கர்நாடகத்தில் அனைத்து சகோதர சகோதரிகளுக்கும் பரமாத்மாவின் செய்தியை அவசியம் அடையச் செய்யுங்கள். எவரும் தெரியாமலிருந்து விடக்கூடாது. பாப்தாதா குஷியாக இருக்கிறார். சேவையும் செய்து கொண்டிருக்கின்றீர்கள். மேலும் செய்து கொண்டே இருப்பீர்கள். நல்லது! கர்நாடக மண்டலத்திலிருந்து முதல் முறையாக

வந்திருப்பவர்கள் எழுந்து நில்லுங்கள். தங்களது சொந்த வீட்டில் வந்துள்ளீர்கள், ஆனால் பாப்தாதாவிடம் இருந்து முழு ஆஸ்தி அடைந்து முழு வாரிசாகிச் செல்ல வேண்டும். பாப்தாதா குஷி அடைகிறார். இப்பொழுது டீச்சர்கள், பாப்தாதா கூறியபடி மனதை வென்று உலகை வென்று, மனதின் எஜமானர்களாகி இருக்கும் இந்த பட்டத்தை அவசியம் பெற்றுச் செல்ல வேண்டும். மனதை வென்றோர் உலகை வென்றோர்.

**இரட்டை வெளி நாட்டினர்:** இரட்டை வெளிநாட்டினர், இவ்வாறு வெளிநாட்டினரை பாப்தாதா கூறுவதில்லை. இரட்டை புருஷார்த்திகள் என்றே கூறுகிறார். மேலும் பாப்தாதா பார்க்கிறார். வெளிநாட்டினர் புருஷார்த்தத்தில் விசேஷ கவனம் செலுத்துகின்றனர். பாப்தாதா, வந்திருக்கும் வெளிநாட்டினரைப் பார்த்து மிக அதிக வரதானங்களை வழங்குகின்றார். சதா முன்னேறிக் கொண்டே இருட்பர் மேலும் அநேகருக்கு பாப்தாதாவின் வரதானங்களை வழங்குவர். பாப்தாதா பார்த்தார். சேவையில் ஆர்வம் மிக நன்றாக உள்ளது. கூடவே சுயம் தன்னை முன்னேறச் செய்யும் முயற்சியும் (புருஷார்த்தம்) மிக நன்றாகவே நடக்கிறது. எனவே பாப்தாதா விசேஷமாக இரட்டை அன்பை வழங்குகிறார். யார் எங்கிருந்தாலும் தன் மீது கவனம் செலுத்தி டென்ஷன் இல்லாது இருக்கின்றனர். பாப்தாதாவும் குஷியாக இருக்கிறார், முன்னேறுகிறீர்கள் மேலும் முன்னேறிக் கொண்டே இருப்பீர்கள். ஒரே ஒரு பாபா, அவரைத் தவிர வேறு எவருமில்லை. இந்த முயற்சியில் அதிக கவனம் உள்ளது. மேலும் கவனம் (அட்டென்ஷன்) டென்ஷனைக் குறைக்கிறது. ஆக பாப்தாதா இரட்டை வெளிநாட்டினருக்கு இரட்டை அன்பை கொடுக்கின்றார்.

ஆக அனைவரும் மேற்கொண்டு என்ன லட்சியத்தை மேற்கொள்வீர்கள். தானும் சக்திசாலியாகி பிறருக்கும் பாப்தாதாவின் அறிமுகத்தை தந்து வாரிசாக்கும் சேவை செய்வீர்கள் என்று அனைவரும் லட்சியம் கொள்ள வேண்டும். தற்போது ஒவ்வொரு சென்டரும் தம்மிடம் வர இருக்கும் சகோதர சகோதரிகளை வாரிசுகளாக மாற்றுங்கள். வாரிசு தரமானவர்கள் என்றால், எப்பொழுதும் பாபாவின் கூடவே துணையாக இருந்து

தாமும் நடக்க வேண்டும் இன்னும் பல பேரையும் பாபாவின் துணையாக ஆக்க வேண்டும். பாப்தாதாவிற்கு மிக்க மகிழ்ச்சி, நாலா புறமும் சேவை நன்றாக அதிகரித்துக் கொண்டே போகிறது. ஒவ்வொருவருக்கும் உற்சாகம் ஆர்வம் உள்ளது. டில்லியில் பெரியதொரு ஒரு நிகழ்ச்சியை செய்துள்ளதை பாப்தாதா கேள்வியுற்றார். அவ்வாறே இந்த சிவராத்திரியில் ஒவ்வொரு மண்டலமும் குறைந்தபட்சம் தங்களது நகரத்தில் சிவராத்திரி அன்று சிவபாபாவின் குறைந்தபட்சம் ஒரு சிலரையாவது பாபாவின் குழந்தைகளாக்க வேண்டும். நிகழ்ச்சி என்னவோ அனைவருமே செய்கின்றனர் ஆனால் ஒவ்வொரு நிகழ்ச்சியின் மூலமாகவும் வாரிசுகளாக எத்தனை பேரை ஆக்கியுள்ளீர்கள், சமீபத்தில் எத்தனை பேரை கொண்டு வந்துள்ளீர்கள். இந்த ஒரு ரிசல்ட்டையும் பாருங்கள். மற்றபடி அனைவருமே இன்று பாப்தாதா கூறியபடி மனதை வென்றவர்களாகவும், உலகை வென்றவர்களாகவும் நிச்சயமாக ஆக வேண்டும். மனதின் வீணான சங்கல்பங்களை நீக்கி விட்டு வீணானவைகளுக்கு விடை கொடுத்து விடுங்கள். இல்லையென்றால், அந்த வீணான சங்கல்பங்களும் நேரத்தை வீணடித்து விடும். ஆக இன்றைய பாடம் மனதை வென்று உலகை வென்றவர்களாக ஆகியே தீர வேண்டும். எனது மனம், எனது என்பதற்கு மேலாக இராஜ்யம் நடக்கிறது. ஆக ஒவ்வொருவரும் இந்த சொரூபத்தை தனதாக்கிக் கொள்ளுங்கள் மேலும் பிறருக்கும் உதவி அளியுங்கள். வந்திருக்கக்கூடிய விருந்தினர். பாப்தாதா குஷியடைகிறார், உங்களது வீட்டைப் பார்த்து விட்டீர்கள், மேற்கொண்டு என்ன செய்யப் போகிறீர்கள்? அடுத்த முறை வரும்போது வெறும் விருந்தாளியல்ல. வீட்டில் உள்ளவராகி பிறரையும் அவ்வாறு மாற்றுவீர்கள். சம்மதம்தானா, கை உயர்த்துங்கள். பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கின்றார், நல்லது. இப்பொழுது வெறும் விருந்தாளியல்ல, வீட்டின் எஜமானர், பாலகர்களாகவும் அதே சமயம் எஜமானர்களாகவும் உள்ளீர்கள். சும்மா வந்து போவோர் தம்மை விருந்தினராக மட்டுமே நினைப்பார்களா அல்லது வீட்டின் பாலகன் நிலையிலிருந்து வீட்டின் எஜமானர்கள் என்று தம்மை உணர்வார்களா? யார் யார் தம்மை பாலக நிலையிலிருந்து எஜமானர்கள் என்று உணருகிறார்களோ அவர்கள் கை உயர்த்துங்கள். பாப்தாதா ஆயிரம் மடங்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறார். மிகவும் நன்றாயிருக்கிறது. வாருங்கள்,

விதவிதமான குரூப்பாக உள்ளீர்கள். பிறரது சேவைக்காக நிமித்தமாய் உள்ளவர்கள் எழுந்திரியுங்கள். (சபையில் சாமியார்களும், சன்னியாசிகளும் அமர்ந்துள்ளனர்). பாப்தாதாவின் மிக அன்பானவர்கள் நீங்கள் எனவே பிறரையும் பாப்தாதாவின் அன்பிற்குரியவர்களாக ஆகுங்கள். நல்லது! நீங்களும் உங்களது அனுபவத்தின் மூலம் அநேகரை அனுபவியாக ஆக்கக்கூடியவர்கள்.

கும்பமேளாவில் (அலஹாபாத்) மிக நன்றாக சேவை நடந்து கொண்டிருக்கிறது. பாப்தாதாவும் கேட்டறிந்தார். யார் அந்த சேவைக்கு நிமித்தமாயிருக்கிறார்களோ (மனோரமா சகோதரி) அவர்களுக்கு பாப்தாதா கோடி கோடியான அன்பைத் தெரிவித்துக் கொள்கிறார். அனைவருமே மிக நன்றாக சேவை செய்து கொண்டிருக்கின்றனர். பாப்தாதா குழந்தையை நினைவு செய்கிறார். ஏனெனில் நினைவு செய்யும்போது குழந்தையிடம் உற்சாகம், ஆர்வம் பெருகுகிறது மேலும் அந்த உற்சாகம், ஆர்வத்தோடு சேவையும் செய்கிறது. இந்த சமாச்சாரம் பாப்தாதாவிற்கு கிடைத்துக் கொண்டிருக்கிறது.

நல்லது! அனைவரும் இங்கிருந்து திரும்பிய பிறகு என்ன செய்வீர்கள் ? உங்களைப் போன்று பிறரையும் ஆக்குவீர்கள்தானே! ஒவ்வொருவருக்கும் இந்த சங்கல்பம் இருக்க வேண்டும். உங்களை அறியாதவர்களுக்கும் அறிமுகத்தை தாருங்கள். நீங்கள் எங்களுக்கு கூறவே இல்லையே என்று உங்கள் மீது அவர்கள் புகார் செய்து விடக்கூடாது. உங்கள் புகாரை இல்லாதாக்கி விடுங்கள். யாரெல்லாம் தொடர்பிலிருக்கின்றார்களோ அவர்களுக்கு செய்தியைக் கூறுவது உங்களது கடமையாகும். அக்கம் பக்கத்தார் தெரிந்தவர்கள் ஆகியோர் நமக்கு இவ்வளவு விசயம் தெரியாதே என்று புகார் கூறி விடக்கூடாது. நிகழ்ச்சிகள் செய்கிறீர்கள், நல்லதுதான், சிவராத்திரியில் குறைந்தபட்சம் இதாவது தெரியட்டும். சிவபரமாத்மாவின் காரியம் நடந்து கொண்டிருக்கிறது என்று உங்களுக்கு தெரிந்தவர்களுக்காவது தெரியட்டும். நீங்கள் எங்களுக்கு கூறவே இல்லையே என்று அவர்கள் புகார் செய்து விடக்கூடாது. ஏனெனில் காலத்தின் மீது நம்பிக்கையே இல்லை. எது நடந்தாலும் அது திடீர் என நடந்து முடிந்து விடும். இந்த திடீரென்று என்கிற விசயம் அனைவருடைய கவனத்திலும் இருக்க வேண்டும் உங்களுடைய எதிர்காலத்தையும் பிறருடைய

எதிர்காலத்தையும் நல்லதாக ஆக்கிக் கொள்ள விரும்புகிறீர்களா? அதற்கான வாய்ப்பு தற்போது ஆகும். பாப்தாதா ஒவ்வொரு குழந்தைக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறார் ஆனால் வேகத்தை இன்னும் அதிகப்படுத்துங்கள். நாலா புறங்களிலும் உள்ள குழந்தைகளைப் பாப்தாதா பார்த்தார். எவ்வளவு நினைவில் அமர்ந்திருக்கின்றனர். மேலும் பாப்தாதாவும் அனைத்து இடங்களுக்கும் சுற்றி வந்து அன்பைச் செலுத்துகிறார். கூடவே வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறார். நாலா புறங்களிலும் உள்ள உற்சாகம் மிக நன்றாக உள்ளது. தற்போது துக்கத்திலிருந்து பிறரை விடுவியுங்கள். நம்முடைய இராஜ்யத்தை சீக்கிரமாக வரவழையுங்கள். ஆக அனைத்து குழந்தைகளுக்கும் வெளிநாட்டினர் ஆனாலும் சரி, உள்நாட்டினர் ஆனாலும் சரி, கிராமங்களிலிருந்து வந்தாலும் சரி, ஒவ்வொரு குழந்தைக்கும் பாப்தாதா மிக மிக அதிகமான நினைவுகளையும், அன்பையும் வழங்குகிறார்.

**தாதி ஜானகிஜியுடன்:** (பாபா எங்களை உருக வைத்து விடுகிறீர்கள்) இன்னும் அதிகம் சேவை செய்வீர்கள். செய்து கொண்டுதானிருக்கிறீர்கள், மேலும் செய்வீர்கள். சேவைக்காக நிமித்தமாயிருக்கிறீர்கள். சரீரம் அப்படியே போய்க் கொண்டிருக்கும், நன்றாகவே இருக்கும்.

**மோகினி சகோதரி** மருத்துவ மனையில் உள்ளார். நல்லது கணக்கு வழக்கை முடித்து கொண்டிருக்கிறீர்கள் மேலும் டபுள் புருஷார்த்தம் செய்து முன்னேறிச் செல்வீர்கள். ஒவ்வொருவரும் முன்னேறி செல்லத்தான் வேண்டும். பாப்தாதா மிக அதிகமான அன்பை வழங்கிக் கொண்டிருக்கின்றார் (மோகினி சகோதரியுடன் அவரது உதவிக்கான சேவாதாரிகளும் அன்பு நினைவுகளை தந்துள்ளனர்). சேவாதாரிகள் மிக அன்பாக சேவை செய்துள்ளனர் அவர்களுக்கும் வாழ்த்துக்கள், ஆனால் அப்புறம் கூட இவ்வாறு தடைகளற்று இருப்பதற்கு தயார் செய்து கொள்ள வேண்டும், எதுவுமே நடக்காதது போன்று !

**பரதாதியுடன் (நிர்மல் சாந்தா தாதிஜி- பிரம்மாபாபாவின் லௌகீக மகள்)** நன்றாயிருக்கிறீர்களா? உங்களது முகம் பாபாவை நினைவூட்டுகிறது.

நீங்கள் பேசினாலும் சரி, பேசாவிட்டாலும் சரி, ஆனால் உங்களுடைய முகம் சேவை செய்து கொண்டுதானிருக்கிறது.

நிர்வயர் சகோதரருடன்: இன்னும் சேவை செய்ய வேண்டும் உங்களுக்கு விடுதலை கிடையாது. இவர்கள் அனைவரும் நிமித்தமானவர்கள் சேவைக்கான வாய்ப்பு இன்னும் அதிகம் உள்ளது. செய்யுங்கள் மிக நன்றாக விமர்சையாக செய்யுங்கள் (நீங்கள் துணையாக இருந்தால் செய்தே தீருவோம்) செய்தே ஆக வேண்டும்.

குஞ்ச் தாதி அவர்களும் அஹமதாபாத் மருத்துவமனையிலிருந்து நினைவுகளைக் கூறுகிறார்: அவருக்கு நினைவைக் கூறுங்கள், ஆரம்ப காலத்திலிருந்தே பாபாவுக்கு மிக செல்லமாக இருந்தவர். இப்பொழுது கூட அந்த அன்பும் செல்லமும் தான் சரீரத்தை காப்பாற்றிக் கொண்டு வருகிறது. பாப்தாதாவினுடைய பார்வை உள்ளது. சேவை நன்றாக செய்துள்ளார். (உள் நாடு. வெளிநாடுகளிலிருந்து மிக அதிகமான சகோதர சகோதரிகள் அன்பு நினைவுகளை அனுப்பியுள்ளனர்). யாரெல்லாம் நினைவுகளை அனுப்புயுள்ளனரோ பலகோடி மடங்கு அன்பினை பதிலாக அளிக்கிறோம், நல்லது.

பிரிஜ்மோகன் சகோதரருடன்: திட்டத்தை மிக நன்றாக செய்துள்ளீர்கள், எளிதுதானே! அனைவருமே குஷி அடைகின்றனர். அஹிம்சையின் நல்லதொரு தலைப்பை எடுத்துள்ளீர்கள், ஏனெனில் அஹிம்சையை பெரும்பான்மையோர் மதிக்கின்றனர். அஹிம்சை என்பதைக் கேட்டு மேலும் கவனம் செலுத்துவர்.

ரமேஷ் சகோதரருடன்: (மகளிர் பாதுகாப்பு பேரணி சிவராத்திரியின் போது நடத்துவோம்) நல்லது. ஒற்றுமையுடன் ஒலியை அதிகப்படுத்துங்கள். இந்த முறை அனைத்து சென்டர்களும் ஒன்றாகச் சேர்ந்து உற்சாகம், ஆர்வத்துடன் சேவை செய்யுங்கள். தற்போதைய தலைப்பு என்னவோ அதை எடுத்துக் கொள்ளுங்கள். எப்படி நீங்கள் நினைக்கிறீர்களோ அது நன்றாகவே உள்ளது. நாலா புறமும் இம்மாதிரி தலைப்புகளை வையுங்கள். அப்பொழுது உலகத்தின் வாயுமண்டலத்தை சரி செய்ய இவர்கள் விரும்புகிறார்கள் என்று அனைவரும் புரிந்து கொள்ளட்டும். மேலும் தற்காலத்தில் பிரம்மா

குமாரிகள் மீது அனைவருக்கும் அன்பு மரியாதை உள்ளது. முன்பு அவர்கள் கூறினார்கள் இல்லையா? இப்பொழுது அன்பு மரியாதை உள்ளது. சேவையைப் பார்த்து, முன்னேற்றத்தைப் பார்த்து இப்பொழுது குஷியும் அடைகின்றனர். (ரமேஷ் சகோதரருக்கு 80-வது பிறந்த நாள்) வாழ்த்துக்கள்!

**டாக்டர் பனாரசி சகோதரருடன்:** உங்களைப் போன்று ஒருவரை துணைக்கு நீங்கள் வைத்துக் கொள்ளவில்லை. இப்பொழுது கூட அவ்வாறு ஏற்படுத்திக் கொள்ளவில்லை. நீங்கள் உங்களைப் போன்று ஒருவரை துணையாக நீங்கள் ஆக்கிக் கொண்டிருக்க வேண்டும். ஏனெனில், நீங்கள் வெளியே சென்றால் இங்கு கவனித்துக் கொள்ள எவருமே இல்லை. நோயாளிகளுக்கு சமாதானம் கிடைப்பதில்லை. (பிரதாப் சகோதரர் உள்ளார்). பிரதாப் சகோதரரோ அவருடைய வேலையில் இருக்கிறார். ஒய்வாக இல்லை. சரிதானா ! ஓம் சாந்தி!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 20.02.2013 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# கர்மயோகி வாழ்க்கையில் தீவிர முயற்சி மூலமாக ஒவ்வொரு பாடத்திலும் எப்பொழுதும் திருப்தியாக மற்றும் குஷியாக இருங்கள், தன்னுடைய குஷி நிறைந்த, தெய்வீக குணங்கள் நிறைந்த முகம் மூலமாக குஷியை அனுபவம் செய்வியுங்கள்!

இன்று பாப்தாதா பொக்கிஷங்களினால் நிரம்பிய தன்னுடைய குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறார். தொடக்கத்திலிருந்து எத்தனை பொக்கிஷங்கள் கிடைத் திருக்கின்றன. முதல் பொக்கிஷமாக ஞானத்தின் பொக்கிஷம் கிடைத்திருக்கிறது. அதன் மூலம் அனைத்து குழந்தைகளும் அவர்களே நிரம்பியவர்கள் ஆகி மற்றவர்களையும் பொக்கிஷத்தினால் நிரப்பிக் கொண்டிருக்கிறார்கள். ஞானத்தின் பொக்கிஷம், ஒவ்வொருவரின் சிக்க வைக்கக்கூடிய பந்தனத்திலிருந்து விடுவித்து பந்தனம், துக்கம், அமைதியின்மையிலிருந்து விடுவிக்கக்கூடியது, இரண்டாவது பொக்கிஷம் யோகாவினுடையது, அதன் மூலம் அதிக சக்திகள் பிராப்தியாகியிருக்கின்றன. மூன்றாவது தாரணையின் பொக்கிஷம் ஆகும். அதன் மூலம் மிகுந்த குணங்களின் பிராப்தி ஆகியிருக்கிறது, ஆனால் அனைத்தையும் விட உயர்ந்த பொக்கிஷம் இந்த சங்கமயுக நேரத்தின் பொக்கிஷம் ஆகும். இதனுடைய மகத்துவம் மிக அதிகமானது ஏனென்றால் சங்கமயுக நேரத்தில் தான் தந்தை சிவபாபா, தந்தை ரூபத்திலும், ஆசிரியர் ரூபத்திலும், சத்குரு ரூபத்திலும் கிடைக்கிறார். இந்த சங்கம யுகத்தின் ஒரு பிறவியில்

21-பிறவிகளுக்கான ஆஸ்தி கிடைக்கிறது. அந்த ஆஸ்தியில் ஒவ்வொரு பிறவியிலும் துக்கம், அமைதியின்மை இருக்காது, கூடவே சம்மந்தத்தில் என்ன பரிவாரம் கிடைக்கிறதோ அந்த பரிவாரம் கூட விலகிய மற்றும் அன்பானது. ஒவ்வொருவரின் மூலமாக ஈஸ்வரிய அன்பு கிடைக்கிறது, அந்த மாதிரியான ஈஸ்வரிய அன்பு முழுக் கல்பத்திலும் கிடைக்க முடியாது. அப்படி அனைத்து பொக்கிஷங்களினால் நிரம்பியவராக ஆகியிருக்கிறீர்கள் தான் இல்லையா? ஆகியிருக்கிறீர்களா? கையை உயர்த்துங்கள்.

அப்படி இன்று பாப்தாதா பொக்கிஷங்களின் அதிபதி நிரம்பிய குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். உள்ளத்திலிருந்து என்ன வெளியாகிறது? ஆஹா குழந்தைகளே ஆஹா ஒவ்வொரு குழந்தையும் தந்தையின் அன்பிற்குரியவர் ஆகி விட்டார். குழந்தைகளோ அதிகமாக இருக்கிறார்கள். பல இடங்களில் அமர்ந்து சந்திப்பையும் செய்து கொண்டிருக்கிறார்கள். பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் ஆனால் பாப்தாதா இன்று நாலா புறத்திலுமுள்ள தொலைதூரம் வரை பொக்கிஷங்களால் நிரம்பிய தன்னுடைய குழந்தைகளைப் பார்த்து குஷியடைந்து கொண்டிருக்கிறார். மேலும் குழந்தைகளும் பொக்கிஷங்களைப் பார்த்து குஷியாக இருக்கிறார்கள்.

எப்பொழுதும் பிராப்திகளின் போதையில் குஷியாக இருக்கிறார்கள். தந்தையும் குழந்தைகளைப் பார்த்து, குழந்தைகளின் சௌபாக்கியத்தைப் பார்த்து குஷியடைந்து கொண்டிருக்கிறார். பாருங்கள். இன்று கூட அனைவரும் மிகுந்த குஷியோடு ஓடி வந்து சேர்ந்து விட்டார்கள் என்றும் பாப்தாதா கேள்விப்பட்டார் (25,000-த்தையும் விட அதிகமான சகோதர சகோதரிகள் வந்து சேர்ந்து விட்டார்கள்). மேலும் எண்ணிக்கை அதிகமான காரணத்தினால் அனேக குழந்தைகள் டென்டில் (கூடாரம்) தூங்க வேண்டியதாக இருந்தது என்ற இந்த செய்தியையும் கேள்விப்பட்டார். பாப்தாதாவும் அனைத்து பக்கங்களிலுமுள்ள டென்டையும் பார்த்தார், ஆனால் இந்த குரூப்பின் ஒரு விசேஷம் இருக்கிறது. யாராக இருந்தாலும் பெரியவரானாலும் அல்லது சிறியவரானாலும், விசேஷமானவரானாலும் அல்லது சாதாரணமானவரானாலும் அனைவரும் டென்டில் தூங்கவில்லை, ஆனால் குஷி என்ற படுக்கையில் தூங்குகிறார்கள் என்று தந்தை

பார்த்தார். அனைவரின் உள்ளத்தில் ஆஹா பாபா ஆஹா என்ற பாடல் தான் ஒலிக்கிறது. சிலருக்கு சிரமமும் இருக்கிறது ஆனால் எங்கு அன்பு இருக்கிறதோ அங்கு தரையில் படுத்து தூங்கினாலும் குஷிகளின் மெத்தையில் இருக்கிறார். எனவே பாப்தாதா இந்த குருப்பிற்கு விசேஷமாக பாராட்டுக்கள் தெரிவிக்கிறார். அனைவரின் முகங்களும் குஷியாக இருப்பதாக தென்படுகிறது. அனைவரும் நல்ல ஊக்கம் உற்சாகத்தில் வகுப்புகள் கேட்கிறார்கள். பாப்தாதா அனைத்தையும் கேட்கிறார். இங்கு எந்தெந்த ஜோன் (மண்டலம்) வந்திருக்கிறதோ அந்தந்த ஜோனின் முக்கிய தலைமையாக இருப்பவர்கள் எழுந்திருங்கள். நீங்கள் அழைத்து வந்திருக்கும் சகோதர சகோதரிகள் குஷியாக இருக்கிறார்களா? குஷியாக இருக்கிறார்கள் என்றால் கையை உயர்த்துங்கள். நல்லது. பாப்தாதாவும் குஷியாக இருக்கிறார். மேலும் விசேஷமாக உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள் தெரிவிக்கிறார். யாருக்காவது வரும் நாட்களுக்காகவோ பாப்தாதா கவனத்தை ஈர்ப்பார் ஆனால் பாப்தாதா வந்திருக்கும் அனைத்து குழந்தைகளின் சகித்துக் கொள்ளும் சக்தியைப் பார்த்து ஒவ்வொரு குழந்தைகள் உங்களுக்கு பல கோடி மடங்கு அன்பு கொடுக்கிறார். இப்பொழுது எந்தெந்த குழந்தைகள் வந்திருக்கிறார்களோ அந்த அனைத்து குழந்தைகள் தன்னுடைய சகித்துக் கொள்ளும் சக்தி, குஷியாக இருப்பதின் நல்ல ஒரு ரிகார்ட்டை காண்பித்தார்கள். யாராவது நோயுற்றவர் ஆனாரா, ஆனாரா? ஒரிரண்டு பேரோ பொதுவாக ஆவார்கள் தான் ஆனால் பாப்தாதா விசேஷமாக அந்த குழந்தைகளின் சகித்துக் கொள்ளும் சக்திக்கு, பரிசாக உள்ளத்திலிருந்து மிகுந்த அன்பு கொடுக்கிறார். இப்பொழுது மேலே என்ன செய்ய வேண்டும்

சேவை முறை வங்காளம், பீகார், ஒரிசா, நேபாள், தமிழ்நாடு **-18,000** பேர் வந்திருக்கிறார்கள்: இப்பொழுது பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் தீவிரமாக முயற்சி செய்பவராக பார்க்க விரும்புகிறார். தீவிரமாக முயற்சி செய்பவர் என்றால் அனைத்து பாடங்களிலும் தான் செய்யும் முயற்சி திருப்தியாக இருக்க வேண்டும். மேலும் இப்பொழுது நேரத்திற்கு தகுந்தாற் போல் ஒவ்வொரு குழந்தையின் முகத்தில் சக்திகள் மற்றும் குஷி தென்பட வேண்டும் என்று ஒவ்வொரு குழந்தையிடமிருந்து இதைத் தான் விரும்புகிறார். ஏனென்றால் ஒவ்வொரு நாளும் உலகத்தில் துக்கமோ அதிகரிக்கத்

தான் செய்யும் ஆனால் அந்த மாதிரி துக்கமான நேரத்தில் உங்களுடைய குஷி நிறைந்த தெய்வீக குணங்கள் நிறைந்த முகத்தைப் பார்த்து அவர்களுக்கு கொஞ்ச நேரத்திற்காகவும் குஷியின் அனுபவம் ஆகட்டும், ஒவ்வொரு குழந்தையின் முகம் மூலம் அந்த ஈஸ்வரிய அன்பு, தெய்வீக அன்பு, தைரியத்தை அதிகரிக்கும் அன்பு மற்றும் குஷியாக இருப்பதின் அனுபவம் ஆகட்டும். அனேக குழந்தைகள் பொதுவாகவோ நாங்கள் குஷியாக இருக்கிறோம் ஆனால் கர்மயோகி வாழ்க்கையில் காரியம் செய்யும் போது கொஞ்சம் வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது என்று கூறுகிறார்கள். காரியம் செய்யும் பொழுது வித்தியாசம் வரக்கூடாது. காரியம் செய்து கொண்டிருக்கும் போதும் நான் கர்மயோகி ஆத்மா ஆவேன் என்ற கவனம் எப்பொழுதும் இருக்கட்டும். நான் உடலின் அதிபதி, உடலை இயக்குபவன். அப்படி ஒவ்வொரு நேரமும் காரியம் செய்தாலும் அல்லது செய்யாவிட்டாலும் ஆனால் காரியம் செய்யும் நேரத்திலும் நான் காரியத்தை செய்விப்பவன் ஆத்மா ஆவேன் என்று நினையுங்கள். மேலும் நீங்கள் எப்படிப்பட்ட ஆத்மாக்கள்? தந்தை யின் செல்லமான குழந்தைகள், பரமாத்மாவின் அன்பிற்குரியவர்கள். அப்படி அதிபதி ஆகி இவ்வுடலை இயக்கும் ஆத்மா ஆவேன். எப்பொழுதும் தந்தையின் நினைவு உள்ளத்தில் நிரம்பியிருக்கட்டும். எனவே நான் கர்மயோகி ஆகி காரியம் செய்து கொண்டிருக்கிறேனா என்று ஒவ்வொருவரும் சோதனை செய்யுங்கள். கர்மயோகியாக இருக்கிறேன் என்றால் யோகா தந்தையுடன் இருக்கிறது. தந்தையோ ஃபாலோ ஃபாதர் என்று எப்பொழுதும் கூறுகிறார். தந்தை நம்முடன் இருக்கிறார் என்றால் இந்த குரூப் என்ன செய்யும்? இப்பொழுது அவரவர்களின் இடத்திற்குச் சென்று தன்னுடைய முகம் மூலம் அந்த மாதிரி குஷியான முகத்தின் அனுபவம் செய்விக்க வேண்டும். ஏனென்றால் இன்று உலகில் குஷி இப்பொழுது குறைந்து கொண்டே இருக்கிறது. மேலும் உங்களுடைய முகம், அவர்களுக்கு குஷியை அனுபவம் செய்விக்கட்டும். வரும் நாட்களிலோ துக்கம், அசாந்தியோ அதிகரிக்கத்தான் செய்யும். இவ்வளவு கேட்பதற்கும், ஏழு நாள் பாடம் எடுப்பதற்கும் யாருக்கும் நேரம் இருக்காது ஆனால் உங்களுடைய முகம் அவர்களுக்கு குஷியின் அனுபவம் செய்விக்கட்டும். செய்ய முடியும் தான் இல்லையா? முடியுமா? கையை உயர்த்துங்கள். ஒருவேளை இவ்வளவு ஒவ்வொரு முகமும் ஒவ்வொரு இடங்களிலும் குஷியை கொடுக்க வேண்டும்

என்ற லட்சியத்தை வைக்க வேண்டும். எப்பொழுதும் குஷியாக, சில நேரம் மட்டும் இல்லை. ஏனென்றால் குஷியின் விசேஷமே. மற்ற பொருட்களை எவ்வளவு மற்றவர்களுக்கு கொடுப்பீர்களோ அது உங்களிடம் குறையும். உங்களிடம் இரண்டு பொருட்கள் இருக்கின்றன. அதிலிருந்து ஒன்றை கொடுத்தீர்கள் என்றால் ஒன்று குறைந்து விடும் ஆனால் முழு உலகில் ஒருவேளை நீங்கள் குஷியை கொடுத்தீர்கள் என்றால் அது குறையுமா? அல்லது அதிகரிக்குமா? அந்த மாதிரியான குஷி உங்களிடம் இருக்கிறது. எனவே அனைத்து ஆத்மாக்களுக்கும் இப்பொழுது குஷியை கொடுத்துக் கொண்டே இருங்கள். இதில் இரண்டு லாபம் இருக்கிறது. உங்களுடைய குஷியும் அதிகரிக்கும், அவர்களுக்கும் குஷி அதிகரிக்கும்.

அப்படி இன்று குஷி கொடுக்க வேண்டும் என்ற இந்த விசேஷ காரியத்தை நினைவு வைத்துக் கொள்ளுங்கள். ஒருவேளை உங்களிடம் குஷி அகன்று விடுகிறது. ஏதோ ஒரு விஷயத்தினால் குஷி அகன்று விடுகிறது என்றால் நீங்கள் தந்தையிடமிருந்து குஷியைப் பெற்று நீங்களும் குஷியாக இருங்கள், மற்றவர்களுக்கும் குஷியை கொடுங்கள். அப்படியானால் இப்பொழுது அனைவரும் என்ன செய்வீர்கள்? ஏற்கனவே கூறியிருக்கிறோம் தீவிர முயற்சி யாளர் ஆகுங்கள், சென்று கொண்டிருக்கிறேன் என்றில்லாமல், பறந்து கொண்டிருக்கிறேன் என்றிருக்க வேண்டும் மேலும் சில நேரம் அதாவது எப்பொழுதாவது என்ற இந்த வார்த்தையை அகற்றி விடுங்கள். குஷி இருக்கிறது என்று கூறுகிறார்கள் மேலும் எப்பொழுதாவது அகன்று விடுகிறது என்றும் கூறுகிறார்கள். எனவே எப்பொழுதாவது என்ற வார்த்தையை நிரந்தரமாக இங்கேயே விட்டுச் செல்லுங்கள். விட முடியுமா? விடுவீர்களா? கையை உயர்த்துங்கள். விடுவீர்களா? அனைத்து குழந்தைகளுக்கும் இப்பொழுதிலிருந்தே எப்பொழுதும் குஷியாக இருப்பதற்காக பாப்தாதா வாழ்த்துக்கள் கூறுகிறார். பிறகு சில நேரம், எப்பொழுதாவது என்ற வார்த்தையை கூறாதீர்கள். நிரந்தரமாக இருங்கள். அப்படி அனைவரும் குஷியாக இருக்கிறீர்கள் இல்லையா? குஷியாக இருக்கிறீர்களா? எப்பொழுதும் குஷியாக இருப்போம் என்ற இது தான் தைரியம், துக்கம், அசாந்தி கூட கொஞ்சம் எப்பொழுதாவது வருகிறது தான் இல்லையா, இந்த தடவை அதையும் இங்கேயே விட்டுச் செல்வோம், உடன் எடுத்துச் செல்ல மாட்டோம் என்று

தைரியம் இருக்கிறது என்று யார் நினைக்கிறீர்களோ அவர்கள் இரண்டு கைகளை தூக்குங்கள். பாப்தாதா மிகுந்த குஷியடைகிறார். தைரியம் உள்ள குழந்தைகளுக்கு தந்தையின் உதவியோ இருக்கவே இருக்கிறது. அப்படி பெரிய ஜோன் வந்திருக்கிறது. இல்லையா. பார்த்து பாப்தாதாவும் குஷியடைகிறார். கொஞ்சம் சிரமம் இருந்தது ஆனால் வந்தோ விட்டார்கள். பாப்தாதாவிற்கும் குழந்தைகளை சந்தித்து குஷி ஏற்படுகிறது. மேலும் ஆஹா குழந்தைகளே ஆஹா என்ற பாடலைத் தான் பாப்தாதா எப்பொழுதும் பாடுகிறார். நல்லது. இப்பொழுது ஒவ்வொரு ஜோனையும் எழச் சொல்லுங்கள்.

தமிழ்நாடு மண்டலம்: தமிழ்நாட்டிற்கு பாப்தாதா விசேஷ வரதானம் கொடுக்கிறார். எந்தக் காரியம் செய்தாலும் காரியம் செய்வதற்கு முன்பு விசேஷமாக காரியத்தின் வெற்றிக்காக எப்பொழுதும் தந்தையிடமிருந்து வெற்றி அடைவதற்கான வரதானத்தைப் பெற்று, பாப்தாதாவின் வரம் பெற்றவராகி அந்த காரியத்தை செய்தீர்கள் என்றால் வெற்றி உங்களுடைய பிறப்புரிமை ஆகி விடும். காரியம் செய்த பிறகு இல்லை! முதலில் வரதானத்தைப் பெற்று பின்பு காரியம் செய்தீர்கள் என்றால் வெற்றி உங்களுடன் இருப்பதாக ஆகி விடும். நல்லது.

பெரும்பான்மையான ஜோன் சேவையில் நல்ல ஊக்கம், உற்சாகத்தில் முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள் என்று பாப்தாதா பார்த்தார். மேலும் எவ்வளவு சேவையில் பிஸியாக இருக்கிறார்களோ அவ்வளவு நேரம் சக்தி கிடைப்பதினால் தடையற்றவர்களாக இருக்கிறார்கள். ஒருவேளை ஏதாவது தடை வந்தாலும் கூட வெற்றியாளர் ஆகி அதை அகற்றியும் விடுகிறார்கள். அனைத்து ஜோன்களும் முயற்சி நன்றாக செய்து கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு ஜோனின் லட்சியத்தைப் பார்த்து பாப்தாதா குஷியடைகிறார் மேலும் எப்பொழுதும் குஷி யடைந்து கொண்டே இருப்பார்கள். நல்லது.

நேபாள்: பாப்தாதா இந்த ஜோனின் ரிசல்ட்டைப் பார்த்தும் குஷி அடைகிறார். சேவைக் கான ஊக்கம் நன்றாக இருக்கிறது. எனவே நிரந்தரமாக சகயோகம் கொடுப்பதற்கு, முன்னேற்றம் அடைவதற்கு, வரம் பெற்றவராக ஆவதற்கு வாழ்த்துக்கள் கொடுக்கிறார். வளர்ந்து

கொண்டே இருங்கள், வளரச் செய்து கொண்டே இருங்கள். எப்பொழுதும் பாப்தாதா உடன் இருக்கிறார். அனைவரும் குஷியாக இருக்கிறீர்களா? இருக்கிறீர்களா? நல்லது வளர்ச்சி இருக்கிறது, மேலும் வளர்ச்சி ஏற்பட்டுக் கொண்டே இருக்கும்.

வங்காளம், பீகார், ஒரிசா, அசாம் இந்த ஜோனும் சேவையில் மற்றும் மாணவர்களை பெருகச் செய்வதில் நன்கு முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறார்கள். மேலும் தைரியம் வைப்பதற்கான வரதானம் இவர்களுக்கு விசேஷமாக இருக்கிறது என்று பாப்தாதா பார்த்தார். தைரியம் இருக்கும் காரணத்தினால், தந்தையின் உதவியும் இருக்கிறது. மேலும் வரும் காலத்திலும் இருக்கும். பாப்தாதா குஷி அடைகிறார் மேலும் கூடவே எப்பொழுதும் அமிர்த வேளையில் சுற்றி வந்து கொண்டே இருப்போம். ஒவ்வொரு சேவை நிலையங்களை வளர்ச்சி அடையச் செய்வதற்கு நல்ல முறையை பின்பற்றுகிறார்கள் என்று பாப்தாதா பார்த்தார். விசேஷமாக தைரியம் இருப்பதால் பாப்தாதா எப்பொழுது வரதானம் கொடுக்கிறார்.

ஸ்பார்க், வியாபார துறை, விளையாட்டுத்துறை, கல்விதுறை மற்றும் செய்தியாளர் (மீடியா) துறையினர்: பாதி ஹாலில் இவர்கள் தான் தென்படுகிறார்கள். அனைவரும் கையை அசையுங்கள். பாருங்கள் எவ்வளவு பேர் இருக்கிறார்கள். பாதி ஹாலிலோ நீங்கள் தான் இருக்கிறீர்கள். நல்லது தான். ஒவ்வொரு விங்கிலும் ஊக்கம், உற்சாகம் இருக்கிறது. மேலும் ஊக்கம் உற்சாகத்தின் காரணமாக சேவைக்கான வாய்ப்பையும் நல்லவைகளாக உருவாக்குகிறார்கள் ஆனால் பாப்தாதா ஒரு விஷயத்தை இப்பொழுதும் கூற வேண்டியது இருக்கிறது. ஒவ்வொரு விங்கும் இப்பொழுது வரை முக்கியமாக பொறுப்பாளர் ஆகியிருப்பவர்கள் நல்ல நல்ல உதவி செய்பவர்களை உருவாக்கியிருக்கிறார்கள். எனவே எப்பொழுதிலிருந்து விங் ஸ்தாபனை செய்யப்பட்டது. மேலும் இதுவரை யார் யார் பொறுப்பாளர் ஆகியிருக்கிறார் என்ற லிஸ்ட்டை முதலில் அனுப்புங்கள். பின்பு மீட்டிங் வைக்கலாம். யார் யார் உருவாகியிருக்கிறார்கள், இதில் எந்த குரூப் அதிகமாக இருக்கிறது. பின்பு வேறு. வேறு தொழிலைச் சேர்ந்தவர்களுக்கும் தனியாக மீட்டிங் வைப்போம். முதலில் லிஸ்டை அனுப்புங்கள். ஒவ்வொருவரும் ரெகுலர் மாணவர்களாக எத்தனை

டேர்களை உருவாக்கியிருக்கிறார்கள். எவ்வளவு தொடர்பில் இருப்பவர்களாக ஆக்கியிருக்கிறார்கள். எத்தனை பேரை சகயோகிகளாக ஆக்கியிருக்கிறார்கள் என்ற இந்த லிஸ்ட் ஒவ்வொரு விங்கிலிருந்தும் வர வேண்டும். சகயோகியாக ஆகியிருந்தாலும் கூட சயோகியின் லிஸ்டும் வர வேண்டும். அப்பொழுது ஜோனின் ரிசல்ட் அனைவருக்கும் தெரிய வந்து விடும். நல்ல விஷயம் தான் இல்லையா. செய்வீர்களா? லிஸ்ட்டை எழுத வேண்டியதாக இருக்கும். அதன் பிறகு உங்களுக்கு புரோகிராம் கிடைக்கும். ஏனென்றால் கடுமையாக உழைக்கவோ செய்கிறார்கள். விங்கைச் சேர்ந்தவர்கள் அவரவர்களுடைய துறையின் சேவையை நன்றாக செய்து கொண்டிருக்கிறார்கள். ரிசல்ட்டும் நல்லதாக இருக்கிறது என்று பாப்தாதா பார்த்தார். மேலும் பாப்தாதா குஷியும் அடைகிறார். மிக நன்றாக இருக்கிறது. நன்றாக இருக்கும். மேலும் உங்களுடைய ரிசல்ட்டைப் பார்த்து மற்றவர்களும் முன்னேறு வார்கள். அனைவருக்கும் மிகுந்த அன்பு நினைவுகள் உரித்தாகுக.

<u>இரட்டை வெளிநாட்டினர்:</u> இப்பொழுதோ வெளிநாட்டினரின் ஒரு நல்ல குழு பார்க்கத் தென்படுகிறது. வெளிநாட்டினர் பாப்தாதாவின் பட்டத்தை உறுதிசெய்ததைப் பார்த்து பாப்தாதா விற்கு குஷி ஏற்படுகிறது. ஏனென்றால் எதுவரை பாரதத்தின் சேவை மட்டும் இருந்ததோ அப்பொழுது உலக சேவாதாரி என்ற பட்டத்தை வைக்க முடியாமல் இருந்தது ஆனால் வெளிநாட்டின் சேவையின் காரணமாக உலக சேவகன் என்ற தந்தையின் பெயர் நிரூபணமாகி விட்டது. மேலும் பெரும்பான்மையான வெளிநாட்டினரின் ஒரு விசேஷம் பாப்தாதாவிற்கு மிகவும் பிடித்திருக்கிறது; அது அவர்கள் முன்பு தன்னுடைய கலாச்சாரத்தை மாற்றுவதில் கடினம் என்று நினைத்தார்கள் ஆனால் இப்பொழுதைய ரிசல்ட்டில் அனைவரும் பிராமண கலாச்சாரத்தின் பழக்கம் உள்ளவர்கள் ஆகி விட்டார்கள். மாற்றும் சக்தியை மிக நன்றாக வெளிப்படுத்தினார்கள். இதற்காக அனைத்து இரட்டை வெளிநாட்டு குழந்தைகளுக்கு பாப்தாதா வாழ்த்துக்கள் கொடுக்கிறார்.

நாலா புறங்களிலுமுள்ள வெளிநாட்டினர் அவரவர்களுடைய பகுதிகளையும் சேவையில் வளர்ச்சி அடைய செய்து

கொண்டிருக்கிறார்கள். சிறு சிறு இடங்கள் மேலும் கூட கவனம் கொடுக்கிறார்கள். மேலும் சுயமுன்னேற்றத்திற்காக கவனம் இருக்கிறது. மேலும் அவர்களுக்குள் என்ன நிகழ்ச்சிகளைத் தயாரிக்கிறார்கள், மதுபன்னில் நடந்த மீட்டிங் ஆகிய இவையும் பாப்தாதாவிற்கு பிடித்திருக்கிறது. இப்பொழுது கூட இவ்வளவு பேர் வந்திருக்கிறார்கள் என்றால் ஒவ்வொரு குழந்தையையும் பார்த்து பாப்தாதா குஷி அடைகிறார். மேலும் ஆஹா இரட்டை முயற்சியாளர்களே ஆஹா என்ற பாடலை தந்தையுடன் சேர்ந்து அனைத்து பிராமணர்களும் பாடுகிறார்கள். பாப்தாதா திருப்தியாக இருக்கிறார். மேலும் திருப்திமணிகள் நீங்களும் முன்னேற்றம் செய்து கொண்டிருக்கிறீர்கள், முன்னேறிக் கொண்டே இருப்பீர்கள். ஓம் சாந்தி.

இப்பொழுது வந்திருக்கும் குழுவும் நல்ல திட்டத்தை உருவாக்கி இருக்கிறார்கள். தன்னுடைய நிலை மற்றும் சேவையின் வளர்ச்சி இரண்டிற்கான திட்டம் பாப்தாதாவிடம் இருக்கிறது. கவனம் இருக்கிறது மேலும், முன்னேறுவதற்கான ஊக்கமும் இருக்கிறது. எனவே பாப்தாதா குஷியடைகிறார். குஷியடைகிறார், குஷியடைகிறார். நல்லது.

நாலா புறங்களிலுமுள்ள பாரதம் மற்றும் வெளிநாட்டைச் சேர்ந்த குழந்தைகளுக்கு நாலா புறங்களிலுமுள்ள குழந்தைகளை பாப்தாதா பார்க்கிறார். எவ்வளவு ஊக்கம், உற்சாகத்துடன் நேரம் மாறியிருந்த போதிலும் மிகவும் அன்போடு பாபாவை சந்தித்துக் கொண்டே இருக்கிறார்கள். நேரத்தின் வித்தியாசம் இருந்த போதிலும் ஊக்கத்துடன் வருகிறார்கள். எனவே பாப்தாதா குஷியடைகிறார். வளர்ச்சியும் இருக்கிறது. மேலும் வளர்ச்சி ஏற்பட்டுக் கொண்டே இருக்கும் என்ற இந்த வரதானத்தை பாப்தாதா கொடுக்கிறார். நன்றாக சேவை செய்து கொண்டிருக்கிறார்கள். ஜனக், (ஜானகி தாதி) குழந்தை அதற்கு பொறுப்பாளராக இருக்கிறார். நல்ல கவனம் கொடுக்கிறார். பொறுப்பாளராக உடன் இருப்பவர்களும் குறைந்தவர்கள் இல்லை என்று பாப்தாதா பார்த்தார், அப்படி யாரெல்லாம் பொறுப்பாளராக இருக்கிறார்களோ. அவர்களுக்கு விசேஷமாக பாப்தாதா அன்பு நினைவுகளை கொடுக்கிறார். மேலும் கிடைத்துக் கொண்டே இருக்கும்.

**ரத்தன் மோகினி தாதியுடன்:** நீங்கள் பொறுப்புடன் செய்து கொண்டிருக்கிறீர்கள். அதற்கான பலன் உங்களுக்கு விரைவிலேயே கிடைக்கும். பாப்தாதா குஷியடைகிறார்.

**தாதி ஜானகியுடன்:** அனைத்தையும் செய்து கொண்டிருக்கிறீர்கள். (குல்சார் தாதி மிகவும் நல்லவர்) உங்களுக்குள் நல்ல நண்பர்களாக இருக்கிறீர்கள். மோகினி சகோதரியுடன் வாழ்த்துக்கள், (அடுத்த தடவை ஓடி வருவேன்) அப்படி ஆகும். பெரிய விஷயம் ஒன்றும் இல்லை. (பாப்தாதாவிற்கு பூச்செண்டு வழங்கினார்) நான் உங்களுக்கு கொடுக்கிறேன்.

**நிர்மல் சாந்தா தாதியுடன்:** மிக நன்றாக புன்முறுவலிக்கிறீர்கள். சேவையின் பலம் மற்றும் தன்னுடைய முயற்சியின் பலனை அனுபவித்துக் கொண்டிருக்கிறீர்கள். நன்றாக செய்து கொண்டிருக்கிறீர்கள். உங்களுடைய ஜோனைச் சேர்ந்தவர்களை பார்த்தீர்களா. சந்தித்தீர்களா? ஆம். ஜோனைச் சேர்ந்தவர்களை சந்தியுங்கள்.

**டாக்டர் குப்தா அவர்களுடன்:** நல்லது, சேவை என்றால் பலன் (பிராப்தி). சேவை இல்லை, பிராப்தி, ஆகும்.

**நிர்வயர் சகோதரருடன்:** அதிசயக் காரியம் செய்தீர்கள். மற்றும் தந்தையின் உதவி இருந்தது, நல்லது. உங்களுடைய தைரியம் பிரிஜ்மோஹன் சகோதரருடன் (டில்லியில் பெரிய நிகழ்ச்சி செய்து கொண்டிருக்கிறோம். இரண்டு தாதிகளும் வர வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். நாங்கள் டென்ட் அமைத்துக் கொண்டிருக்கிறோம். அந்த நேரம் புயல் வரப்போகிறது என்ற செய்தி வந்திருக்கிறது) நாடகத்தைப் பாருங்கள். பார்வையாளராகி அனைவரும் கவலையற்றிருங்கள். என்ன நடக்க வேண்டுமோ அது நடக்கும் ஆனால் நீங்கள் பாதுகாப்பாக இருங்கள். முன்பாகவே தெரியும் இல்லையா. அதற்கான ஏற்பாடு செய்து கொள்ளுங்கள். (சகோதரி சாந்தி நோயுற்று இருக்கிறார். அவர் தன்னுடைய நினைவை அனுப்பியிருக்கிறார்) முக்கியமாக அவருக்கு பாப்தாதா தரப்பிலிருந்து அன்பு நினைவுகள் கொடுங்கள். (ருக்மணி தாதியும் தன்னுடைய அன்பை

அனுப்பியிருக்கிறார்க்ள்) டில்லிக்கு நல்ல சேவை செய்திருக்கிறார்கள். அவர்களுக்கும் அன்பு கொடுங்கள். (சகோதரி ஆஷா மற்றும் அவர்களுடன் இருப்பவர்கள் மிக நன்றாக சேவை செய்து கொண்டிருக்கிறார்கள்) சேவையில் ஊக்கமோ அனைவருடையதும் நன்றாக இருக்கிறது. அனைவரும் ஒருங்கிணைந்து செய்து கொண்டிருக்கிறார்கள். இதற்காக பாராட்டுக்கள். (பெரிய நிகழ்ச்சிக்காக ஏதாவது பிரேரணை) யார் வந்தாலும் அவர்கள் ஏதாவது அடைந்து செல்லட்டும், இது தான் பிரேரணை என்ன அடைந்து செல்ல வேண்டும்? வாயுமண்டலத்திலிருந்து அமைதியின் வைப்ரேஷன், முன்னேற்றம் அடைவதற்கான வைப்ரேஷன் பெற்றுச் செல்லட்டும். கேட்கவோ செய்கிறார்கள். நன்றாக பிடித்தும் இருக்கிறது ஆனால் நன்றாக ஆவதற்கான பிரேரணையை பெற்றுச் செல்லட்டும். முயற்சியோ இது தான்.

**ரமேஷ் சகோதரருடன்:** உங்களுடைய சேவையைப் பற்றி பாப்தாதா கேள்விப்படுகிறார். நன்றாகச் செய்து கொண்டிருக்கிறீர்கள், நடந்து கொண்டே இருக்கும். என்ன திட்டம் உருவாக்கிக் கொண்டிருக்கிறீர்களோ அதை நடைமுறையில் செய்து செய்து வளர்ந்து கொண்டே இருக்கும். பாப்தாதா அனைவருக்கும் அன்பு நினைவைக் கொடுக்கிறார். அனைவரிடமும் கொண்டு சேருங்கள். நன்றாக இருக்கிறது. சேவைக்கான ஊக்கம் நாலா புறங்களிலும் நன்றாக இருக்கிறது என்று பாப்தாதா பார்க்கிறார். இதில் இதை மட்டும் சேர்த்துக் கொள்ளுங்கள். என்னென்ன நிகழ்ச்சி நடக்கிறதோ அதில் வாரிசு உருவாக வேண்டும் சகயோகி உருவாக வேண்டும். மேலும் எதிர்காலத்திலும் அவர்களுடன் தொடர்பை வைத்து முன்னேற்றம் அடையச் செய்து கொண்டே இருக்க வேண்டும். எப்பொழுது அவர்கள் முன்னேற்றம் அடைகிறார்கள் என்றால் அவர்கள் பின்னால் அவர்களை முன்னேற்றம் அடையச் செய்து கொண்டே இருந்தீர்கள் என்றால், முன்னேற்றம் அடைந்து விடுவார்கள்.

**பூபால் சகோதரருடன்:** அனைத்தும் நன்றாக நடந்து கொண்டிருக்கிறது.

**மிருத்யுஞ்சய் சகோதரர்:** பாப்தாதாவிடம் போபால் பல்கலைகழகத்தின் வைஸ் சேன்சிலர் (துணை வேந்தர்) பண்புகள் நிறைந்த கல்வி

தொடங்குவதற்காக ஒப்பந்தம் கையெழுத்திட்டிருக்கிறார் என்பதை கூறினார். நல்லது. ஊக்கம் உற்சாகத்தை காண்பித்திருக்கிறார். பாப்தாதாவும் கேள்விப்பட்டார் மேலும் அதற்காக முன்பாகவே வாழ்த்துக்கள் கொடுக்கிறோம். அனேக ஆத்மாக்களுக்கு நன்மை ஏற்படும்.

பாப்தாதா பட்டனை அழுத்தி அகோலா சேவை நிலையத்தின் புதுக்கட்டித்தை திறந்து வைத்தார்! அனைவரின் ஊக்கம் நன்றாக இருக்கிறது. எங்கு ஊக்கம் உற்சாகம் இருக்கிறதோ அங்கு அவசியம் வளர்ச்சி இருக்கிறது.

தங்கும் வசதி செய்து தரும் சேவாதாரிகளுடன்: மிக நன்றாக கவனித்தீர்கள். அனைவரும் திருப்தியாக இருக்கிறார்கள். யாருக்கும் எந்த புகாரும் இல்லை. இந்த கவனத்தை நன்றாக வைத்தீர்கள். இதற்காக வாழ்த்துக்கள்.

அஹமதாபாத்தில் குஞ்ச் தாதி நோயுற்றிருக்கிறார்கள்: அவர்களுக்கு விசேஷமாக பாப்தாதாவின் தரப்பிலிருந்து டோலி அனுப்பி வையுங்கள். தைரியம் உள்ளவர், தந்தையின் உதவியும் இருக்கிறது. முதலில் கொஞ்சம் தொலைதூரத்திலிருந்தார்கள் இல்லையா. அதனால் நோயும் அதிகரித்து விட்டது. அவரை கவனித்துக் கொள்பவர்கள் அவ்வளவு திறமை நிறைந்தவர்கள் அல்ல. இப்பொழுது இங்கே (அஹமதாபாத்தில்) வந்திருக்கிறார் இல்லையா. சரியாகி விடுவார்கள்.

நேஹா சகோதரியுடன்: (அனைவருக்கும் மிகுந்த அன்போடு சேவை செய்கிறார்கள்) உங்களுடைய சேவை மேல் பாப்தாதாவும் திருப்தியாக இருக்கிறார். எனவே தன்னை திருப்திமணி என்று தெரிந்து கொள்ளுங்கள். உங்களுடைய பட்டமே திருப்திமணி ஆகும்.

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

## 09.03.2013 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## பிரம்மாபாபாவுக்குச் சமமாக ஃபரிஷ்தா நிலையில் இருந்து, நமது மகிழ்ச்சி நிறைந்த முகத்தின் மூலம் அனைவருக்கும் குஷியினுடைய அனுபவத்தை செய்வியுங்கள், என்னென்ன வீணான எண்ணங்கள் இன்னும் இருக்கின்றனவோ அவைகளை பிறந்த நாள் பரிசாக பாபாவிற்குத் தந்து விடுங்கள்! (சிவ ஜெயந்தி)

இன்று பாப்தாதா, குழந்தைகளுக்கு தனது பிறந்த நாள் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறார். ஒவ்வொரு குழந்தையின் கண்களில் பாபாவின் மற்றும் தனது பிறப்பின் குஷி தென்பட்டுக் கொண்டிருக்கிறது. இன்றைய பிறந்த நாளானது மிகவும் தனிப்பட்டது மற்றும் அன்பானது. இந்த அற்புதமான பிறந்த நாள் தந்தை மற்றும் குழந்தைகளுக்கு சேர்ந்தே உள்ளது. ஏனெனில் பாபா வந்திருப்பதே யக்ஞத்தை படைப்பதற்காக வந்துள்ளார் மற்றும் யக்ஞத்திற்கு பிராமணர்களே வேண்டும். எனவே பாபா மற்றும் குழந்தைகளின் பிறந்த நாள் சேர்ந்தே உள்ளது. இந்த ஜெயந்தி உலகத்தை மாற்றும் ஜெயந்தி எனவே தந்தை குழந்தைகளுக்கு மிக அன்போடு வாழ்த்துக்களைக் தெரிவிக்கிறார். ஏனெனில் இந்த ஜெயந்தியானது விஷ்வ மாற்றத்திற்கான ஜெயந்தியாகும். முதன் முதலில் குழந்தைகள் பாபாவின் கூடவே உறுதிமொழி எடுத்து இருக்கின்றனர். உலகத்தில் நிலவுகின்ற அறியாமை இருளை பிரகாசமாக மாற்றியே தீர வேண்டும்.

பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் நெற்றியில் பிரகாசித்துக் கொண்டிருக்கக் கூடிய ஒளியைப் பர்த்துக் கொண்டிருக்கிறார். இந்த ஒளியானது பிற அனைத்து ஆத்மாக்களையும் பிரகாசிக்கச் செய்ய வேண்டும். இந்த உலகத்தை இருளிலிருந்து வெளிச்சத்தை நோக்கி கொண்டு வந்து கொண்டிருக்கிறது. இன்றைய தினம் பாப்தாதா குழந்தைகளிடம் இதையே விரும்புகிறார், அதாவது ஒவ்வொரு குழந்தையும் தனது முகத்தின் மூலம் ஆத்மாக்களை பிரகாசிக்கச் செய்ய வேண்டும். இந்த வாழ்க்கையில் சதா குஷியாக இருப்பதற்கான செய்தியைக் கொடுக்க வேண்டும். இன்றைய தினத்தில் பாப்தாதா ஒவ்வொரு குழந்தையிடமிருந்தும் இதையே விரும்புகிறார். ஒவ்வொரு ஆத்மாவுக்கும் சுகம், சாந்தியின் அனுபவம் ஏற்பட வேண்டும். ஒவ்வொரு குழந்தையும் ஃபரிஸ்தாவாகி உலகத்திலும் ஃபரிஸ்தா நிலையின் அனுபவத்தை செய்விக்க வேண்டும்.

ஆக இன்று நீங்கள் அனைவரும் பாபாவின் பிறந்த நாளைக் கொண்டாட வந்துள்ளீர்களா? அல்லது உங்களது பிறந்த நாளைக் கொண்டாட வந்துள்ளீர்களா? பாபாவினுடைய உறுதிமொழி யாவது: சதா கூடவே இருப்போம். கூடவே திரும்பச் செல்வோம், கூடவே இராஜ்யத்திலும் வருவோம். இன்று அமிர்தவேளை அனைத்து குழந்தைகளுக்கும் வைரம் போன்ற ஒரு வார்த்தையைக் கூறினார். அந்த வைரமான வார்த்தையானது. எனது பாபா. இந்த வைரம் போன்ற வார்த்தையை அனைவருமே குறித்துக் கொண்டுள்ளனர். என்ன நடந்தாலும் சரி, என்னுடைய பாபா, இனிமையான பாபா, அன்பான பாபா, என்று நினைவு வந்தால் அனைத்து துக்கங்களும், சுகமாக மாறி விடும். இன்றைய நாளில் ஒவ்வொரு குழந்தையும் பாபாவுக்குச் சமமாக ஃபரிஸ்தா ரூபத்தில் இருப்பதற்கான சிரேஷ்ட சங்கல்பத்தை செய்ய வேண்டும். ஆக இன்று குறிப்பாக பாபாவிற்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்க வந்துள்ளீர்களா? அல்லது பெற்றுச் செல்ல வந்துள்ளீர்களா? பிறந்த நாள் அன்று பரிசும் கொடுக்கப்படுவதுண்டு. ஆக பாப்தாதா இன்று குழந்தைகளாகிய உங்கள் அனைவரிடமிருந்தும் எந்த ஒரு பரிசைப் பெற விரும்புகிறார். இன்றைய நாளில் வீணான எண்ணங்கள் இன்னும் என்ன இருக்கின்றனவோ அதனை பிறந்த நாள் பரிசாக தந்து விடுங்கள். ஏனெனில் இந்த வீணான எண்ணங்கள் அதிகமான நேரத்தை வீணாக்கு

கின்றது. ஆக இந்த பரிசை தர முடியுமா? தர முடியுமா? அவ்வாறு தர முடியும் என்றால் கை உயர்த்துங்கள். ஏனெனில் வீணான சங்கல்பங்களை நிறைய நேரத்தை வீணடிக்கிறீர்கள். இது குஷியினுடைய அனுபவத்தை செய்ய விடாது. அனைவருடைய முகமும் எப்பொழுதுமே குஷி நிறைந்ததாகவே இருக்க வேண்டும் என்றே பாப்தாதா விரும்புகிறார். யார் பார்த்தாலும் சரி உங்களுடைய முகம் அவர்களுக்கு பிரேரணை தர வேண்டும். அதாவது, நாமும் இவ்வாறு ஆக வேண்டும் என்று.

ஆக இன்றைய தினம் இந்த சங்கல்பத்தை செய்யுங்கள், சதா நமது முகமானது ஃப்ரிஸ்தாவைப் போன்று தென்பட வேண்டும், எப்படி பிரம்மாபாபாவினுடைய முகம் இருந்ததோ அவ்வாறு! எவ்வளவுதான் பொறுப்புகள் இருந்தாலும் சதா அவரது முகமானது ஃபரிஸ்தா ரூபமாகவே தென்பட்டதைப் பார்த்தோம். பாப்தாதா இதையே விரும்புகிறார். ஒவ்வொரு குழந்தையும் ஃபரிஸ்தா ரூபமாக ஆவதற்காக பிரம்மாபாபாவைப் பின்பற்ற வேண்டும். எந்த காரியத்தை செய்தாலும் சரி, பிரம்மாபாபா இந்த காரியத்தை செய்வாரா? என்று சோதனை செய்யுங்கள். ஆக இன்று விசேஷமாக பிரம்மாபாபா என்னுடைய பாபா, இனிமையான பாபா. அன்பான பாபா என்னும் வைரமான பரிசை வழங்குகிறார். இன்றைய நாளில் சதா ஒவ்வொரு அடியும் பிரம்மாபாபாவைப் பின்பற்றுங்கள். சதா பிரகாசிக்கும் முகத்தோடு விளங்குங்கள். ஒரே வினாடியில் இப்பொழுது தன்னை பிரம்மாபாபாவிற்குச் சமமமாக கவலையற்ற இராஜாவாக ஆக்க முடியுமா? இப்பொழுது அனைவரும் தன்னை கவலையற்ற இராஜாவின் நிலையில் ஸ்திரமாயிருந்து அனுபவம் செய்து பாருங்கள். கவலையற்று இருக்கிறீர்களா அல்லது இன்னும் ஏதேனும் கவலை இருக்கிறதா? யார் கவலையற்ற இராஜாவாக அனுபவம் செய்தார்களோ அவர்கள் கை உயர்த்துங்கள். (அனைவருமே கை உயர்த்தினர்) மிகவும் நன்று. அனைவருமே இந்த லட்சியத்தை வையுங்கள். என்ன அடி எடுத்து வைக்கிறீர்களோ பாபாவை பின்பற்றினோமா? எவ்வளவு தான் காரிய விவகாரம் இருந்தாலும் பிரம்மாபாபா சதா நிரந்தரமாக ஃபரிஸ்தா ரூபத்தில் இருந்தார். பிரம்மாபாபா எவ்வளவு பொறுப்புள்ளவராயிருந்தாலும் அவர் எப்படி பற்றற்றும் அன்போடும் இருந்து காண்பித்தார். ஆக இன்றைய நாள் என்ன ஒரு சைகையை

நமக்கு காண்பிக்கிறார். சதா பற்றற்று மற்றும் அனைவர் மீதும் அன்போடு இருப்பது.

பாப்தாதா ஒவ்வொரு குழந்தைக்கும் இன்றைய நாளில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறார். இன்றைய நாள் அனைவரும் சிரேஷ்டமான சங்கல்பங்களை மேற்கொள்ளுங்கள். எந்த காரியத்தை செய்தாலும் அதில் ஒவ்வொரு அடியும் பிரம்மாபாபாவைப் பின்பற்றுவோம். குஷியிலிருப்போம் மற்றும் குஷியை பிறருக்கும் வழங்குவோம். இன்று பாப்தாதா இதுமாதிரி பற்றற்ற மற்றும் அன்பான ஜெயந்தியின் பரிசை அனைவருக்கும் வழங்குகிறார் -சதா பிரம்மாபாபாவிற்குச் சமமாக ஃபரிஸ்தா ஆகுங்கள்!

எந்த ஒரு மண்டலம் வந்துள்ளது. (சேவையினுடைய முறை இந்தூர் மற்றும் போபால் மண்டலம்): இந்தூர் மண்டலம்: பாப்தாதா பார்த்தார் ஒவ்வொரு மண்டலமும் விருத்தியடைந்து கொண்டே இருக்கிறது. மேலும் அனைவரும் புருஷார்த்தத்திலும் முன்னேறிக் கொண்டே செல்கின்றன. ஆக புருஷார்த்தத்தின் வெற்றிக்கான வாழ்த்துக்களை பாப்தாதா மண்டலம் முழுவதற்கும் வழங்குகிறார். இவ்வாறே இன்னும் முன்னேறிக் கொண்டு செல்வீர்கள். இதற்காக பாப்தாதா மிக முன்பாகவே வரதானத்தை வழங்கிக் கொண்டிருக்கின்றார். நல்லது பாப்தாதா குழந்தைகளினுடைய தைரியத்தைப் பார்த்து மகிழ்ச்சியடைகிறார். இப்பொழுதும் கூட பாப்தாதாவின் அன்பினால் முன்னேறிக் கொண்டே செல்வீர்கள். இதுவும் பாப்தாதாவினுடைய சினேகம் மற்றும் வரதானமும் கூடவே இருக்கிறது, வளர்ந்துக் கொண்டே இருப்பீர்கள். வளர்த்து கொண்டே இருப்பீர்கள். பாப்தாதா பார்த்தார் - இந்நாட்களில் ஒவ்வொருவருடைய மனதிலும் இந்த சங்கல்டம் நிறைந்துள்ளது. அதாவது நாம் முன்னேறிக் கொண்டே செல்ல வேண்டும். மற்றும் முன்னேறிக் கொண்டே இருக்கிறீர்கள். அதற்கு வாழ்த்துக்கள் அவ்வாறுதானே டீச்சர்களே. கை உயர்த்துங்கள். ஆஹா! மிக நன்று! சதா உங்களுடைய தைரியத்தில் பாப்தாதாவின் உதவியும் இருந்து கொண்டே இருக்கிறது மிக நன்றாக தைரியம் வைத்துள்ளீர்கள். மிக நல்ல நல்ல பாபாவின் குழந்தைகளை தயார் செய்துள்ளீர்கள். மேலும் முன்னேறச் செய்து கொண்டேயும் இருப்பீர்கள். பாப்தாதாவிற்கு மிகுந்த மகிழ்ச்சி இப்போது கூட

பாருங்கள், அரை வகுப்பு ஒரே மண்டலத்தில் உள்ளவர்கள் தென்படுகிறீர்கள்.

போபால் மண்டலம்: நல்லது. மிக தைரியத்தோடு இருக்கிறீர்கள். அனத்து மண்டலத்திலிருந்தும் வந்திருக்கக் கூடிய குழந்தைகளுக்கு பாபா முக்கியமாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார். இரண்டு மண்டலமும் மிகவும் தைரியம் வைத்துள்ளீர்கள். அதைப் பார்த்து பாபாவுக்கு மிகுந்த குஷி. நல்லது. இதனுடைய தலைமையில் உள்ளவர்கள் கை உயர்த்துங்கள். மிக நன்றாக வளர்ந்து கொண்டிருக்கிறீர்கள். மேலும் வளர்ந்து கொண்டும் இருப்பீர்கள். பாப்தாதா உங்களுடைய தைரியத்தைப் பார்த்து குஷியாக இருக்கின்றார். சேவையும் கூட வளர்ந்து கொண்டே இருக்கிறது. உற்சாகம், ஆர்வம் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. பாப்தாதா இரண்டு மண்டலத்தைப் பற்றியும் குஷியாக இருக்கிறார். மிகவும் அற்புதங்களை செய்து காண்பித்தும் கொண்டும் இருக்கிறார்கள். காண்பிக்கவும் செய்வார்கள். பாப்தாதாவுக்கு மிகுந்த குஷி. நல்லது, டீச்சர்கள் கை உயர்த்துங்கள். மிக நன்றாக கொடியை அசைக்கிறார்கள். ஆம் அசையுங்கள். நன்றக இருக்கிறது! ஏதேனும் தனித்தன்மை கொண்டு வருகிறார்கள் அல்லவா! அதனால் நன்றாக இருக்கிறது. அனைவரது கொடியும் முன்னால் பறந்து கொண்டு இருக்கின்றன. மேலும் பறந்து கொண்டே இருக்கும். நல்லது! பாண்டவர்களும் குறைந்தவர்கள் அல்ல. பாண்டவர்கள் கை உயர்த்துங்கள். மிக நன்று. தைரியமான குழந்தைகளுக்கு பாபாவின் உதவி என்றும் இருக்கின்றது.

**70-**நாடுகளிலிருந்து வெளி நாட்டு சகோதர, சகோதரிகள் வந்துள்ளனர்: பாப்தாதா இரட்டை வெளிநாட்டவர் என்பதற்குப் பதிலாக என்ன ஒரு பட்டத்தை வழங்கியுள்ளார். இரட்டை புருஷார்த்திகள் மேலும் முடிவிலும் முடிவில் கூட தென்படுகிறது. இப்பொழுது புருஷார்த்தத்திலும், சேவையிலும் கவனம் என்பது மிக நன்றாக அதிகரித்துக் கொண்டிருக்கிறது. பாப்தாதா இரட்டை வெளிநாட்டு குழந்தைகளைப் பார்த்து இரட்டை குஷி ஏற்படுகிறது. ஏனெனில் முதலில் பார்த்தபோது, வெளிநாட்டினர் முன்னேறத்தில் அப்பொழுது. கலாச்சாரத்தின் பக்கம் கவனம் சென்றது. இது இந்தியாவினுடையது. இது வெளிநாட்டினுடையது ஆனால் இப்பொழுது பாப்தாதா பார்த்தார்.

இப்பொழுதோ ஒரேயொரு பிராமண கலாச்சாரத்தில் சென்று கொண்டிருக் கின்றனர். அதுவும் மிகவும் எளிதாகச் சென்று கொண்டிருக்கின்றனர். அதற்காக பாப்தாதா வாழ்த்துக்களை தெரிவிக்கின்றார். ஆஹா! குழந்தைகளே ஆஹா மாற்றத்தை கொண்டு வருவதில் அற்புதங்கள் தென்படுகிறது. மேற்கொண்டும் காண்பித்துக் கொண்டிருப்பார்கள். இந்த எதிர்காலத்தையும் பாப்தாதா பார்க்கின்றார். இப்பொழுதோ மிக அற்புதம். சேவையினுடைய திட்டங்களை பாப்தாதா பார்க்கும்போது அனைவரும் அவைகளை ஒன்றாகக் இணைந்து செய்து கொண்டிருக்கின்றனர். அதுவும் மிக நன்றாக செய்கின்றனர். பாப்தாதா புருஷார்த்தம், திட்டங்கள் மற்றும் ரிசல்ட்டைப் பார்த்து மிக மிக மிக குஷியடைகிறார். பாப்தாதா பார்த்தார், தன் மீதும் சேவை மீதும் இரண்டு புறங்களிலிருந்தும் கவனத்தைக் கொடுப்பதற்கான திட்டங்களை நன்றாக செய்துள்ளனர். பாப்தாதாவிற்கு அனைத்தும் தெரியவருகிறது. எனவே பாபா வெளிநாட்டினர்களை புருஷார்த்தத்தினுடைய திட்டங்கள் மற்றும் நடைமுறையில் கொண்டு வருவதற்காக மிகவும் அதிகமான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றார். ரிசல்ட் மிக நன்றாக உள்ளது. மனதிற்கு பிடித்தமாக உள்ளது. முன்னேறச் செய்பவர்கள் மற்றும் முன்னேறுபவர்களுக்கும் பாப்தாதா வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றார். ஏனெனில் இரட்டை வெளிநாட்டினர்களால் மதுபன் கூட மிகவும் குதுகலமாக ஆகி விடுகிறது. ஆக, விசேஷமான புருஷார்த்தம் மற்றும் சேவை இரண்டிற்கும் பாப்தாதா வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறார். மேலும் முன்னேறி செல்வதையும் பார்த்துக் கொண்டிருக்கிறார், முன்னேறிக் கொண்டும் இருப்பார்கள். பிறரையும் முன்னேறச் செய்வார்கள்.

இன்று பாப்தாதாவிற்கு மதுபன் வாசிகள் கீழே உள்ளவர்களானாலும் சரி, மேலே உள்ளவர்களானாலும் சரி, மிகுந்த நினைவு வருகிறது. பெரும்பாலானோர் மிகவும் முயற்சியை இதய பூர்வமாகச் செய்துள்ளனர். ஆக மனமாற செய்பவர்களுக்கு மனதிற்கு ஓய்வளிக்கும் பாபாவின் (திலாராம்) மிக அதிகமான வாழ்த்துக்கள். நல்லது! மதுபன்வாசிகள் எழுந்திருங்கள். கீழே உள்ளவர்களாயினும் சரி, மேலே உள்ளவர்களானாலும் சரி ஆக இன்று விசேஷமாக ஒவ்வொரு மதுபன் வாசியும் அனுபவம் செய்ய வேண்டும். அதாவது பாப்தாதா ஒவ்வொருவருக்கும் பெயர் சகிதமாக வாழ்த்துக்களைத்

தெரிவித்துக் கொள்கிறார். இன்னும் போகப் போகவும் வாழ்த்துக்களை வாங்கிக் கொண்டு இருப்பீர்கள். இதுவும் கூட பாப்தாதாவிற்கு மிகுந்த நம்பிக்கை உள்ளது. வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்! !

தாதி ஜானகியோடு: மதுபனைச் சார்ந்தவராக இருக்கிறார்தான்! இருந்தாலும் இப்பொழுது கூட வெளியே சுற்றி வருகிறார். ஆனாலும் மதுபன் வாசி தான். நல்லது! பாப்தாதா பார்த்தார் மூன்று தாதிமார்களும் மிகவும் நல்லபடியாக கவனம் செலுத்தி சேவையில் சென்று கொண்டிருக் கின்றனர்ஆனால் எங்கே செல்கின்றனர். ஓடிக் கொண்டு அல்லவா இருக்கின்றனர். ஒவ்வொரு பாண்டவரும், ஒவ்வொரு சகோதரியும் தன் பொருட்டு வாழ்த்துக்களைக் குறிப்பாகப் பெற்றுக் கொள்ள வேண்டும். கூடவே சேவைக்கு நிமித்தமாக (பிராமணிகள்) உள்ளவர்களுக்கும் விசேஷமாக வாழ்த்துக்களோடு அன்புகளையும் வழங்குகிறார். மதுபன் என்றாலே மதுபன் தான்! பாருங்கள். எவ்வளவு நல்ல நல்ல சேவை செய்பவர்களாக இருக்கின்றனர். பாப்தாதா மிக மகிழ்ச்சியாக இருக்கின்றார். ஏதேனும் ஒன்று இரண்டு விசயங்கள் நடக்கலாம்ஆனால் ஒட்டு மொத்த ரிசல்ட்டைப் பார்க்கும் போது மிக நன்றாக உள்ளது. நல்லதிலும் நல்லதாகவும் இருக்கும். சரிதானே! மதுபன் வாசிகள் கூறுகின்றனர்: பாப்தாதா எங்களைப் பார்ப்பதே இல்லை. இன்று பார்த்தார் அல்லவா? உள்ளப் பூர்வமாக பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார். நல்லது இன்றைய பிறந்த நாளில் அனைவருக்கும் நல்வாழ்த்துக்கள்! நல்வாழ்த்துக்கள்! வெளி நாட்டினருக்கும் நல்வாழ்த்துக்கள். பாப்தாதா தினமும் பார்த்து கொண்டிருக்கிறார். ஏனெனில் மிகவும் அதிகமாக ஆகி விடுகின்றனர் இல்லையா? எனவே திருஷ்டியின் மூலமாகவே பார்த்துக் கொண்டிருக்கிறார். மிக நன்றாக சேவை செய்து கொண்டிருக்கின்றனர். பாப்தாதா பார்த்தார் பண்டாரா (புதிய சமையல் கூடம்) மிக நன்றாக உள்ளது. மிக நன்றாகக் கட்டியுள்ளனர். வாழ்த்துக்கள் நிர்வயருக்கும் வாழ்த்துக்கள். அவர் கூட இருப்பவர்களுக்கும் வாழ்த்துக்கள் யார் நிமித்தமாய் அந்த சேவையிலி ருக்கிறார்களோ அவர்களுக்கும் வாழ்த்துக்கள். மிக நன்றாக முயற்சி செய்துள்ளதையும் பாப்தாதா பார்த்தார். கூட்டத்திற்கு ஏற்றார்போல் ஒரு பெரிய தீர்வு நன்றாக உள்ளது. இன்று யாரெல்லாம் சபையில் அமர்ந்துள்ளனரோ அவர்கள் எங்கிருந்து வந்தாலும் சரி, ஒவ்வொருவருக்கும் சிறப்பான

வாழ்த்துக்களை வழங்குகிறார். மேலும் இரண்டு மண்டலத்தினருக்கும் கூட, அவை சிறிதாக இருந்தபோதிலும் மிக சக்தி வாய்ந்தவை. அற்புதமாக சேவை செய்கின்றனர். இரண்டு மண்டலங்களினாலும் பாபா குஷியாக இருக்கிறார். மேலும் குஷியாக இருப்பார்.

(நிர்வயர் சகோதரர் கூறினார், பீஸ் ஆப் மைன்ட் சேனலில் உங்களை அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்): மிக நல்லது. உடல் நலம் சரியா? நன்றாக முன்னேறிக் கொண்டு இருக்கிறீர்கள். முன்னேறிக் கொண்டே இருப்பீர்கள்.

பாப்தாதா ஒவ்வொருவருக்கும் காலை வணக்கம் கூறுகிறார். இரவு வணக்கம் கூட கூறுகிறார். வெறும் வெளிப்படையாக இல்லை. உள்ளப்பூர்வமாக கூறுகிறார். பாபாவிடம் அன்பில்லாமல் இருக்கக் கூடியதாக எந்த குழந்தையும் இல்லை. மேலும் பாபாவிற்கும் ஒவ்வொரு குழந்தையின் மீதும் அன்பு உள்ளது. சற்று தொய்வாக குழந்தைகள் ஆகி விட்டாலும் சரி ஆனால் பிறகு இங்கு அங்கு என்று ஒரு மாதிரி சரியாகி விடுகின்றார்கள். அவர்களுடைய அன்பும் நன்றாகத்தான் உள்ளது. பாப்தாதா பார்க்கின்றார், பாப்தாதாவோடு அனைவருக்கும் உள்ளப்பூர்வமான அன்பு இருக்கிறது. எனவே, அவர் நடத்தி கொண்டிருக்கிறார். மேலும் நடத்திக் கொண்டும் இருப்பார். ஒவ்வொருவரையும் பாப்தாதா நினைவு செய்கிறார். பெயரைக் கூறி அழைக்கவில்லை என்பதில்லை, ஆனால் மதுபனில் இருந்தாலும் சரி அவரவர்களின் மண்டலங்களில் இருந்தாலும் சரி, ஆனால் ஒவ்வொருவர் மீதும் அன்பு செலுத்துவதில் பாபாவுக்கு நேரம் எடுக்குமா என்ன? அனைவருக்கும் அன்பைக் கொடுப்பதில் நேரம் எடுப்பதில்லை எனவே, அனைவரும் அனுபவம் செய்யுங்கள். அனைவருக்கும் பாப்தாதா குட்நைட் கூறுகிறார். நீங்கள் கூறினாலும் சரி, கூறாவிட்டாலும் சரி. பாப்தாதா கூறுகின்றார். தந்தையின் அன்பு அல்லவா! பாப்தாதா என்ன ஆனாலும் சரி இரவில் அனைத்து குழந்தை களின் பக்கமும் சுற்றி வருகிறார். அவ்வாறு சுற்றி வருவதில் பாபாவிற்கு எவ்வளவு நேரம் எடுக்கிறது. மிகவும் சீக்கிரமாக சுற்றி வந்து விடுகிறார். ஃபரிஸ்தா ரூபத்தில் அல்லவா ஆக பாப்தாதா காலை வணக்கமும் கூறுகிறார். இரவு வணக்கமும் கூறுகிறார் என்று

ஒவ்வொருவரும் புரிந்து கொள்ளுங்கள். நீங்கள் கூறினாலும், கூறாவிட்டாலும் சரி, பாப்தாதா நிச்சயமாக கூறுகிறார். நல்லது

மதுபன்வாசிகள் கை உயர்த்துங்கள். மதுபன் வாசிகளுக்கு (என் மீது) எந்தவிதமாக புகாரும் இல்லையோ? பாப்தாதா கட்டாயமாக உங்களை நினைவு செய்கிறார். எவ்வளவு பேர் வந்தாலும் அவ்வளவு பேரையும் பாலனை செய்கிறீர்கள் அல்லவா? ஒவ்வொருவரையும் வெளிநாட்டினராக இருந்தாலும் சரி, பாரதவாசிகளாக இருந்தாலும் சரி. பாப்தாதா குழந்தைகள் மீது அன்பு செலுத்தாமல் இருக்க முடியாது. ஆக இன்று சிவஜெயந்தியின் நல்வாழ்த்துக்கள்! நல்வாழ்த்துக்கள்! நல்வாழ்த்துக்கள்!

இப்பொழுது பாப்தாதா 5-நிமிடங்கள் ஒவ்வொருவரும் மிகவும் சக்தி வாய்ந்த நினைவில் இருக்கக் கூறுகிறார். வேறு எந்த சங்கல்பமும் கூடாது. நல்லது! தினமும் இவ்வாறு இடை இடையே 5-நிமிடங்கள் முற்றிலும் அசரீரி நிலையின் அனுபவத்தை செய்து கொண்டே செல்லுங்கள். ஏனெனில் நேரமானது போகப்போக மோசமாக வர உள்ளது. அம்மாதிரி சமயங்களில் ஒருவேளை இம்மாதிரி பயிற்சி இல்லையென்றால் கட்டுப்பாட்டு சக்தி இருக்காது. ஆக வெற்றி அடைய முடியாது. எனவே இடை இடையே 2-நிமிடம், ஒரு நிமிடம், 5-நிமிடம் அசரீரி ஆவதற்கான அப்பிய உங்களது தினசரி நடவடிக்கைகளில் கட்டாயம் செய்து வாருங்கள். அப்பொழுது கட்டுப்பாடு சக்தியின் பிரேரணை கிட்டும். அனைத்து அருகாமையில் உள்ளவர்களும், பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்களானாலும் சரி, டாப்தாதா, பார்த்துக் கொண்டே இருக்கிறார். இந்த சமயத்தில் அனைவரது கவனமும் மதுபன் மீது உள்ளது. ஆக தினமும் உங்களது பயிற்சியை செய்து வாருங்கள். இப்பொழுது செய்கின்ற இந்த பயிற்சி மிக மிக அவசியமாக தேவைப்படும் அந்த நேரமும் வரும். எனவே, உங்களுடைய சமயத்திற்கு ஏற்றவாறு அசரீரி ஆகும் பயிற்சியை கட்டாயம் செய்து வாருங்கள்.

நாலா புறங்களிலுமுள்ள குழந்தைகள் எங்கிருந்தாலும் சரி பாப்தாதா அவர்களுக்கு நேரில் அன்பு நினைவுகளைக் கொடுத்து கொண்டிருக்கிறார். வாழ்த்துக்கள் வாழ்த்துக்கள் வாழ்த்துக்கள் நல்லது!

**மோகினி சகோதரி:** வாழ்த்துக்கள்! உங்களுக்கு உங்களை நன்கு நடத்திக் கொள்ளும் பயிற்சி வந்து விட்டது. நல்லது இவர்களை கவனித்து வருபவரும் நன்றாகவே சேவை செய்து வருகிறார். நல்லது மிக நல்லது! சேவை செய்து அதற்கான பரிசையும் நன்றாக வாங்கி வருகிறார். நல்லது!

**பிரிஜ்மோகன் சகோதரர்:** டெல்லியிலிருந்து மிகவும் நினைவு அனுப்பியுள்ளார். அங்கு நிர்மானித்துள்ள பெரிய மேளாவின் போட்டோக்களை பாப்தாதாவிற்கு காண்பிக்கின்றனர்).

**நிர்வயர் சகோதரர்:** அனைத்து மூன்று சகோதரர்களும் நன்றாக உள்ளனர். உங்களுக்கு துணையாக இருப்பவர்களும் நன்றாக உள்ளனர்.

**ரமேஷ் சகோதரருடன்:** உடல் நலம் நன்றாக உள்ளதா? மும்பையில் நிகழ்ச்சி நன்றாக இருந்ததா? உடல் நலத்தைப் பேணி நன்றாக நடத்தி வருகின்றீர்கள் நல்லது.

**பூபால் சகோதரருடன்:** ஒவ்வொரு அடியிலும் பாபாவின் கூடவே இருக்கிறார். மிக நல்லது வெளிநாட்டு மூத்த சகோதரிகளுன் - உங்கள் மூலம் இங்கே பிரகாசம் அதிகரித்துள்ளது இவ்வளவு பேர் வந்ததினால்! உங்களுடைய ஈர்ப்பினால் பிறரையும் அது இழுத்துக் கொண்டு வந்துள்ளது. நன்றாக சேவை நடந்து வருகிறது. வாழ்த்துக்கள்!

**சாந்தி சகோதரி:** அமெரிக்காவில் சுகமாக சேர்ந்துள்ளார். அவருக்கும் சரியாகிப் போய் விடும். (முரளி தாதா மருத்துவ மனையில் உள்ளார். அவருக்கு பழம் அனுப்பி வையுங்கள்.

**பரதாதியும்** மருத்துவ மனையில் உள்ளார். பாப்தாதா பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார். (யாரெல்லாம் நோயுற்று இருக்கிறார்களோ அவர்களுக்கு பழங்களை அனுப்பி வையுங்கள்).

குளோபல் ஹாஸ்பிடல் டாக்டர் வினையலட்சுமி சகோதரி இன்று சரீரத்தை விட்டுள்ளார். அவரது நினைவும் வந்து சேர்ந்துள்ளது.

பாப்தாதா தனது பூக்கரங்களால் கொடியை ஏற்றி அனைத்து குழந்தைகளுக்கும் வாழ்த்துக்கள் அளித்தார்! உங்கள் அனைவரது உள்ளத்திலும் பாப்தாதா அமர்ந்திருக்கிறார். கதா கூடவே அமர்ந்திருக்கிறார். ஒவ்வொருவரும் பாபாவினுடைய கொடியை இது என்னுடையது என்று அனுபவிக்கும் அந்த நாளும் விரைவில் வரும். அனைவரது வாயிலிருந்தும் வெளிவரும். என்னுடைய தந்தை இனிமையான தந்தை அன்பான தந்தை வந்து விட்டார் அனைவரும் நன்றாகவே அவர்களது உள்ளத்தில் பாபாவின் கொடியை ஏற்றி உள்ளனர். பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் பார்த்து கொண்டுதானிருக்கிறார். நான் பின்னால் அமர்ந்திருக்கின்றேன், மூலையில் அமர்ந்திருக்கின்றேன் என்பதில்லை. பாப்தாதா பார்த்துக் கொண்டு தானிருக்கின்றார். மேலும் ஒவ்வொருவருக்கும் உள்ளத்தின் ஆழமான அன்பை வழங்கி கொண்டிருக்கின்றார். கடைசியில் இருந்தாலும் அல்லது முன்னால் இருந்தாலும் சரி, பாபாவின் செல்லமானவர்கள்தானே. சரிதானே மதுபன் வாசிகள் அருகாமையில் உள்ளனர். இன்று மதுபன் வாசிகள் மிகவும் நன்றாக பறந்து கொண்டிருக்கிறார். இவர்கள் எல்லோரும் பாருங்கள்! நல்லது!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 22.03.2013 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பகவான் மற்றும் பாக்கியத்தினுடைய நினைவின் மூலமாக சதா மகிழ்ச்சியுடன் இருங்கள், பிறருக்கும் மகிழ்ச்சியூட்டுங்கள், வீணான விசயங்களை கடந்து (ஹோலி) போனவைகளாக்கி, ஹோலி கொண்டாடுங்கள்!

இன்று பாப்தாதா, அனைத்து குழந்தைகளின் பாக்கியத்தைப் பார்த்து புன்சிரித்துக் கொண்டிருக்கின்றார். அனைத்திலும் மிகப்பெரிய பாக்கியம் அனைவரது நெற்றியிலும் பிரகாசித்துக் கொண்டிருக்கும் நட்சத்திரம் ஜொலித்துக் கொண்டிருப்பதைப் பார்க்கின்றார். அனைவரது நெற்றியும் பிரகாசமாக மின்னிக் கொண்டிருக்கின்றது. கூடவே அனைவரது வாயிலிருந்தும் ஞானம் நிறைந்த சொற்கள் பிரகாசமாய் ஒலித்துக் கொண்டிருப்பது தென்பட்டது. அனைவரது உதட்டிலும் புன்னகை எவ்வளவு அழகாக பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது. ஒவ்வொருவரின் உள்ளத்திலும் திலாராம் பாபாவின் (உள்ளத்திற்கு ஓய்வு அளிப்பவர்) உடைய அன்பு நிறைந்த ஜொலிப்பு தென்பட்டுக் கொண்டிருக்கின்றது. அனைவரது கரங்களிலும் ஞான பொக்கிஷத்தினுடைய பிரகாசம் தென்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஒவ்வொருவரின் பாவனையிலும், ஒவ்வொரு அடியிலும் ஜொலிப்பு தென்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஆக சொல்லுங்கள் பார்க்கலாம். இவ்வளவு பெரிய பாக்கியம் எவ்வளவு பிரகாசமாய் ஜொலித்துக் கொண்டிருக்கின்றது. எண்ணிப் பாருங்கள், இவ்வளவு பெரிய பாக்கியம் எவ்வாறு ஏற்பட்டது? சுயம் பாக்கியத்தை குழந்தைகளின் வள்ளலான

பாபா பாக்கியத்தைத் தந்தருளினார். பாக்கியத்தின் வள்ளல் தாமாகவே உங்களது பாக்கியத்தை ஏற்படுத்தினார். ஆக பாக்கியத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறீர்கள்தானே ஆஹா, ஆஹா என்னே என் பாக்கியம்! தினமும் அமிர்த வேளையில் தனது பாக்கியத்தை பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்தானே! சங்கமயுகம் இருப்பதே பாக்கியத்தை ஏற்படுத்துவதற்காகத்தான்.

பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கின்றார், மேலும் ஒவ்வொரு குழந்தையின் பாக்கியத்தைப் பார்த்து புன்சிரித்துக் கொண்டிமிருக்கின்றார். எனவே தான் இந்த மகிமை பாடப்படுகிறது -பாக்கியத்தை காண வேண்டும் என்று சொன்னால் பரமாத்ம குழந்தைகளின் பாக்கியத்தைப் பார்த்துக் கொள்ளுங்கள். உங்கள் அனைவருக்கும் கூட தங்களது பாக்கியத்தைப் பார்த்து குஷி ஏற்படுகிறதா! உள்ளத்தில் இருந்து என்ன எழுகிறது? ஆஹா, ஆஹா எனது பாக்கியமே பாக்கியம்! உங்களது பாக்கியத்தைப் பார்த்து பிற ஆத்மாக்களுக்கும் உற்சாகம் ஏற்படுகிறது. மேலும் இரக்கமும் பிறக்கிறது ஆனால் இந்த ஒவ்வொரு ஆத்மாக்களின் பாக்கியமும் உன்னதமானதாக வேண்டும் என்ற ஆர்வமும் வருகிறது. பாப்தாதா பார்த்தார், பாக்கியம் என்னவோ அனைவருக்கும் ஏற்பட்டுள்ளது, ஆனால் பாக்கியத்தின் சுகம், ஆனந்தம் ஆகியவற்றை வரிசைக் கிரமமாக அனுபவம் செய்கின்றனர். அனைவரது முகத்திலும் பாக்கியத்தினுடைய முழுமை நிலை தென்பட்டுக் கொண்டிருக்கின்றது. இப்படிப்பட்ட குழந்தைகளை பாபாவும் கூட சினேகத்துடன் கூறுகின்றார், ஆஹா! பாக்கியவான் குழந்தைகளே! குஷி ஏற்படுகிறது. தலையை அசையுங்கள். ஏற்படுகிறதுதானே! நல்லது. கை அசையுங்கள். பாப்தாதா அநேக முறை கூறியுள்ளார். பாபா ஒவ்வொரு குழந்தையையும் சோதனை செய்கிறார், சதா பாக்கிய சொரூபம் இருக்கிறதா அல்லது அவ்வப்போதா? நாங்கள் சதா பாக்கியவானக இருக்கிறோம். மேலும் பிறரையும் அவ்வாறு ஆக்கிக் கொண்டிருக்கின்றோம் என்பவர்கள் கை உயர்த்துங்கள். பின்னால் இருப்பவர்கள் கூட கையை உயர்த்துகின்றார்கள், பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கின்றர், வாழ்த்துக்கள். பாக்கியவானுடைய முகம் சதா அதிர்ஷ்டம் நிறைந்து மகிழ்ச்சிக்கரமாக விளங்கும். ஆக ஒவ்வொருவரும் உங்களை நீங்களே சோதனை செய்து கொள்ளுங்கள்,

அமிர்தவேளையிலிருந்து இரவு வரை அதிர்ஷ்டம் நிறைந்த, குஷி நிறைந்த நிலை இருந்ததா? குஷி ஒருபோதும் குறைவாகக் கூடாது. பாப்தாதா பார்த்தார், அநேக குழந்தைகள் குஷி நிறைந்தவர்களாக இருக்கின்றனர். அவர்களது முகத்தைப் பார்த்து பிறரும் கூட மாறி விடுகின்றனர்.

இன்று பாப்தாதா ஒரு வார்த்தையை குழந்தைகளிடமிருந்து திரும்பப் பெற விரும்புகின்றனர். தயாரா? தயாராக இருக்கின்றீர்களா? கொடுப்பீர்கள், திரும்ப அதை வாபஸ் எடுக்கக்கூடாது. கை உயர்த்துங்கள். நன்றாக யோசித்து கை உயர்த்துங்கள். பாப்தாதாவிற்கு அநேக குழந்தைகள் கூறுகின்றனர், சாந்தி சொரூபம் அல்லது குஷி நிறைந்து விளங்குகின்றனர் என்றால், அது அவ்வப்போது தான், இந்த அவ்வப்போது பாப்தாதாவிற்குப் பிடிப்பதில்லை. ஏனெனில் ஒவ்வொரு குழந்தையிடமும் பாபாவிற்கு அதிகமான அன்பு உள்ளது. ஆக, அவ்வப்போது என்கிற இந்த வார்த்தை பாபாவிற்குப் பிடிக்கவில்லை. சதா பாபாவிற்குச் சமமாகத் தென்பட வேண்டும். இம் மாதிரி குழந்தைகளும் இருக்கின்றனர் ஆனால் பாபா விரும்புவதோ ஒவ்வொரு குழந்தையும் சதா குஷியில் பறந்து கொண்டே இருக்க வேண்டும். சதா ஆன்மீகத்தால் மலர்ந்திருக்க வேண்டும். பிறரையும் அவ்வாறு புன்சிரிக்க வைக்க வேண்டும். இது உங்களுக்கு பிடித்தமா, எப்பொழுதுமே பிடித்தமா, அல்லது அவ்வப்போதா? யாருக்கு சதா என்கிற வார்த்தை பிடித்திருக்கின்றதோ மேலும் நடைமுறையில் இருக்கிறதோ அவர்கள் கை உயர்த்துங்கள். பின்னால் இருக்கக் கூடியவர்கள் கை அசையுங்கள். ஏனென்றால் இன்று ஹோலி கொண்டாட வந்துள்ளீர்கள். ஹோலியின் அர்த்தமே எது நடந்து முடிந்து விட்டதோ அது ஹோலியாகும். எதிர்காலம் சதா சிரேஷ்டமானது, எப்பொழுதும் சிரேஷ்டமானதாகவே இருக்கும். நாம் பாபாவுடன் இருக்கிறோம் என்று ஒவ்வொரு குழந்தையும் சங்கல்பம் செய்துள்ளனர். எனவே பாபாவுடன் கூடவே இருப்பர். பாப்தாதாவும் கூட குஷி அடைகின்றார். பாப்தாதாவிற்கும் கூட தனியாக இருப்பது பிடிப்பதில்லை. அனைத்து குழந்தைளுடன் கூட இருப்பதே நன்றாக இருக்கிறது. பாப்தாதா அநேக முறை கூறியுள்ளார். குஷியை ஒருபோதும் இழக்கக்கூடாது. மேலும் கூட கூறியுள்ளார் குஷியைப் போன்ற நல்ல செயல் வேறு எதுவும் கிடையாது. தெரியுமல்லவா!

வேறு எந்தப் பொருளும் கொடுக்கக் கொடுக்க குறையும் ஆனால் குஷியை யாருக்குக் கொடுத்தாலும் அது குறையுமா? அல்லது வளருமா? ஆக, இந்த குஷி என்பது சதா அதிகரித்துக் கொண்டேயிருக்கும். எனவே அதை ஒருபோதும் விட்டு விடக்கூடாது. உங்களது முகத்தை யார் பார்த்தாலும் சதா குஷி நிறைந்திருக்க வேண்டும். பல்வேறு விசயங்கள் என்னவோ வந்து கொண்டுதானிருக்கும். கலியுகம் என்றாலே என்ன அர்த்தம், கலியுகம் என்று ஏன் கூறுகின்றீர்கள்? கலகங்களும், குழப்பங்களும் நடக்கத்தான் செய்யும். எனவே தான் கலியுகம் என்கிறீர்கள் இல்லையா? ஆனால் அதில் நாம் என்ன செய்ய வேண்டும்? பரிவர்த்தனை -மாற்றம்! விசயங்களில் மாட்டிக் கொள்ளக்கூடாது ஆனால் விசயங்களை மாற்றி அமைத்துக் கொண்டு, சேவைக்காக சதா எவரெடியாக இருக்க வேண்டும். சதா உங்களது பாக்கியம் நினைவில் உள்ளது அல்லவா? பகவான் மற்றும் பாக்கியம் இதன் மூலம் சதா மலர்ச்சியான முகம், அந்த மலர்ந்த முகத்தைப் பார்த்து பிறரும் கூட மகிழ்ச்சியுற வேண்டும்.

ஆக, பாப்தாதா இன்று அனைத்துக் குழந்தைகளுக்கும் இதை நினைவூட்டுகின்றார், சதா மகிழ்ச்சியுடன் இருங்கள் மற்றும் மகிழ்ச்சியுறச் செய்யுங்கள். அனைத்துக் குழந்தைகளும் மதுபன் வந்தடைந்திருக்கிறீர்கள். கூடாரத்திலும் கூட தங்க வேண்டியிருந்ததை பாப்தாதா பார்த்தார். கூடாரங்களில் தூங்கியவர்கள் கை உயர்த்துங்கள். மிகச் சிலரே உள்ளனர். பின்னால் இருக்கின்றனர். நல்லது, கூடாரத்தில் தங்கியதால் குஷி மறைந்து போனதா? அல்லது குஷியாக இருந்ததா? கூடாரவாசிகள் கை தூக்குங்கள். மகிழ்ச்சியாக இருந்தீர்களா? ஹாலுக்கு வெளியில் கூட அமர்ந்திருக்கிறார்கள். குழந்தை (தாதி) பார்வையிட்டபோது ஆங்காங்கு தங்கியிருந்ததைப் பார்த்தார் ஆனால் பாப்தாதா அவர்களுக்குக் கூறுகிறார், நீங்கள் பாப்தாதாவின் உள்ளத்தில் வசிக்கின்றீர்கள்! திலாராம் மற்றும் உங்களது உள்ளம், திலாராம் உங்கள் கூடவே உறங்கினார், யார் வரவேண்டுமோ அவர்களை நல்வரவு கூறி வரவேற்க வேண்டியுள்ளது ஆனால் கூடாரங்களில் இருப்போருக்கு ஏதேனும் கஷ்டம் ஏற்பட்டதா, அவ்வாறு கஷ்டம் ஏற்பட்டிருந்தால் கை உயர்த்துங்கள். எவருமே கை உயர்த்தவில்லை. ஆக அனைவரது தரப்பிலிருந்தும் கூடாரங்களில் இருப்போருக்கு பல மடங்கு சுகம் மற்றும் சாந்தியின் உலகத்தில் உரிமை கிடைக்கும்.

மிகவும் தைரியமானவர்கள்! பாப்தாதா பார்த்தார், பாபாவுடன் அன்பு உள்ளது. அந்த அன்பிலே கஷ்டம் தெரியவில்லை பாப்தாதாவிற்கும் குஷி வந்திருக்கிறார்கள் அவர்களது வீட்டிற்கு வரட்டும்!

தற்போது இந்த அற்புதத்தை செய்ய வேண்டும். இதுவும் கூட சகித்துக் கொள்ளும் சக்தியின் அற்புதம் ஆகும். அதற்காக நன்றி ஆனால் ஒவ்வொருவருக்கும் பாபா மீது அன்பு உள்ளது. பாபாவிற்கும் குழந்தைகள் மீது மிகுந்த அன்பு உள்ளது. ஒவ்வொரு குழந்தையும் குறைந்தபட்சம் பிரம்மாபாபாவிற்குச் சமமாக தியாகம், தபஸ்யா மற்றும் சேவை செய்ய வேண்டும் என்று பாபா நினைக்கின்றார். இது சம்மதமா? பிரம்மாபாபாவைப் பின்பற்ற வேண்டும். தயாரா? இதற்கு இரண்டு கைகளையும் உயர்த்துங்கள்! மிக நல்லது! வாழ்த்துக்கள்!

தற்போது அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து இந்த திட சங்கல்பத்தை செய்யுங்கள். தயாராகத்தானே இருக்கிறீர்கள். அடிக்கடி கை உயர்த்தச் செய்கிறார். பாப்தாதாவிற்கு நிச்சயம் உள்ளது, குழந்தைகள் மிக நல்லவர்கள், புருஷார்த்தத்தில் சற்று தடைகள் என்பது அவ்வப்போது வருகின்றதுதான் ஆனால் நானும் பாபாவும் இணைந்திருக்கிறோம், இணைந்தேயிருப்போம். இது உறுதியான நிச்சய புத்தியாகும். தலை அசையுங்கள். யாரெல்லாம் அவரவது இடங்களிலிருந்து வந்திருக்கிறீர்களோ அந்த ஒவ்வொரு குழந்தையையும் அவர்களது முகத்தை முன்னால் கொண்டு வந்து பாப்தாதா வரதானங்களை வழங்கிக் கொண்டிருக்கிறார் -சதா எந்த விசயம் வந்தாலும் சட்டப்பிரகாரம் நடக்கக்கூடாது, ஆனால் நடந்து விட்டது என்றால் அந்த சமயத்திலேயே உங்கள் உள்ளத்திலிருந்து நீக்கி விட்டு, பாப்தாதாவிடம் தந்து விடுங்கள். பாபா தாமாகவே அதைப் பார்த்துக் கொள்வார். அவ்வாறு கொடுக்கத் தெரியுமா? இதில் தலை அசையுங்கள். அவ்வாறு கொடுக்க வருகிறதா? எடுத்துக் கொள்ள வருகிறது என்றால் கொடுக்கவும் வருகிறது?

ஆக இன்று ஹோலி தினம். ஹோலி கொண்டாட வந்துள்ளீர்கள் இல்லையையா? ஹோலியின் அர்த்தம் என்ன? நடந்து முடிந்து போனது. அம்மாதிரி விசயங்கள் நடந்து முடிந்து போனது அதனை உள்ளத்தில் வைத்துக் கொள்ளாதீர்கள். ஹோலியினுடைய பரிசே இது தான்.

ஏதேனும் வீணான எண்ணங்கள் வந்தால் ஹோலியாக்கி (முடிந்து போனது) விட வேண்டும். சதா ஹோலி செய்ய வேண்டும், மற்றும் ஹோலி ஆக வேண்டும். முதலாவது ஹிந்தி, இரண்டாவது ஆங்கில வார்த்தை. இரண்டு வார்த்தைகள். ஹோலி ஆக்க வேண்டும், மற்றும் ஹோலி ஆக வேண்டும். உங்கள் உள்ளத்தில் உறுதி செய்யுங்கள் -நான் ஒருபோதும் குஷியை இழக்க மாட்டேன். அவ்வாறு செய்ய முடியுமா? குஷியை இழக்க மாட்டோம். இதனை யார் செய்ய முடியுமோ கை உயர்த்துங்கள். யாரெல்லாம் உறுதி அளித்துள்ளனரோ அவர்களுக்கு பாப்தாதாவின் தரப்பிலிருந்து இதயப்பூர்வமான வாழ்த்துக்கள் வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள். நல்லது, ஹோலிக்காக ஏதாவது ஏற்பாடு செய்துள்ளீர்களா?

சேவையின் முறை உத்திரபிரதேசம், பனராஸ், மேற்கு நேபாளம் உங்களது வீட்டிற்கு தாராளமாக வாருங்கள். அனைவரும் சதா இந்த சங்கல்பத்தையே எண்ண வேண்டும். நான் பிரம்மாபாபாவிற்குச் சமமாக ஆகியே தீர வேண்டும். பிரம்மாபாபாவைப் பின்பற்றுங்கள். எந்த ஒரு காரியமாக இருந்தாலும் இவ்வாறு பிரம்மாபாபா செய்துள்ளாரா என்று அதை சோதனைச் செய்யுங்கள்? அவரது 10-சிறப்பு அம்சங்கள் வெளி வந்துள்ளன. அதில் பிரம்மாபாபா என்னென்ன செய்துள்ளார் என்று பார்க்க வேண்டும். மற்றும் பிரம்மாபாபாவைப் பின்பற்ற வேண்டும். ஆக எந்தெந்த குரூப்கள் எல்லாம் வந்துள்ளனரோ, பாப்தாதா ஒவ்வொரு குரூப்பிற்கும் விசேஷமாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றார். ஒவ்வொரு குரூப்பிலும் உற்சாகம், ஆர்வம் மிகுதியாக உள்ளது. நாங்கள் செய்து காண்பிப்போம். மேலும் ஒவ்வொரு குரூப்பிலும் செய்து காண்பிக்கும் அந்த சக்தி உள்ளது என்பதையும் பாப்தாதா பார்த்தார். பாப்தாதா ஒவ்வொரு குரூப்பிற்கும் மிகமிக அதிகமான வாழ்த்துக்களை வழங்குகிறார். மேலும் இந்த வரதானத்தையும் தருகிறார். ஒவ்வொரு குரூப்பும் ஒவ்வொரு சேவையிலும், ஒவ்வொரு பாடத்திலும் முன்னேறிக் கொண்டே இருப்பர். இவ்வாறு முன்னேறிச் செல்லும் வரதானத்தை பாப்தாதா அனைத்து குரூப்பிற்கும் வழங்கிக் கொண்டிருக்கின்றார். கடைசியில் வந்துள்ளீர்கள் ஆனால் மிக வேகமாகச் செல்வீர்கள். தைரியம் உள்ளது அல்லவா? மிக நல்லவர்கள். பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கின்றார். உற்சாகம், ஆர்வம் நிறைந்தவர்கள் பாப்தாதாவிற்கு மகிழ்ச்சி

ஒவ்வொரு குரூப்பும் இங்கிருந்து விசேஷமான உற்சாகம், ஆர்வத்தை நிரப்பிக் கொண்டு செல்கின்றனர். மேலும் இந்த உற்சாகம் ஆர்வம் நிரந்தரமாக இருக்குமேயானால் அற்புதங்களை செய்து காண்பிப்பீர்கள். பாப்தாதா அனைத்து குரூப்பையும் வெற்றி நிறைந்த குரூப்பாக பார்த்துக் கொண்டிருக்கின்றார். ஒவ்வொருவருக்கும் பாப்தாதா தமது சுப பாவனை மற்றும் சுப ஆசைகளின் வரதானத்தை வழங்கிக் கொண்டிருக்கின்றார்.

ஐந்து துறையினர் -கிராம முன்னேற்றம், மருத்துவம், போக்குவரத்து, நிர்வாகம் மற்றும் இளைஞர்கள் ஆகியோர் வந்துள்ளனர். பாப்தாதா பார்த்தார், ஒவ்வொரு துறையினரும் மிகவும் உற்சாகம் ஆர்வத்துடன் சேவையில் முன்னேறிக் கொண்டிருக்கின்றனர், மேலும் சேவையில் வெற்றியும் கிடைத்துக் கொண்டிருக்கின்றது. எனவே மிகுந்த அன்புடன் எவ்வளவு சேவை செய்துள்ளனரோ, அவைகளை நன்றாகவே செய்துள்ளனர். ஆக மேலும் நல்ல உற்சாகம் ஆர்வத்தடன் நல்ல நல்ல வாரிசுகளைக் கொண்டு வாருங்கள். இன்னும் அந்த லிஸ்ட் வரவில்லை. எப்பொழுதிலிருந்து இந்த துறைகளின் சேவை ஆரம்பித்ததோ அப்போதிருந்து சம்மந்தம் தொடர்பில் நல்ல நல்லவர்கள் அதிகம் பேர் வந்துள்ளனர். அதற்காக பாப்தாதா வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றார் ஆனால் வாரிசு தரமானவர்கள் வந்திருந்தால் அவர்களை பாப்தாதாவின் முன்னால் கொண்டு வாருங்கள். சேவை நன்றாக உள்ளது. இதனை பாப்தாதா பார்க்கிறார். சேவையில் யாரும் பின்னோக்கிச் செல்வதில்லை. முன்னேறிக் கொண்டேயிருக்கின்றனர். மேலும் பாப்தாதாவிற்கும் மகிழ்ச்சி ஏற்படுகின்றது. மிகவும் பிஸியாக இருக்கிறார்கள். ஒவ்வொருவரும் தங்களது நிகழ்ச்சி நிரலை உருவாக்கிக் கொண்டேயிருக்கின்றனர். இப்பொழுது கூட சிவராத்திரியின் போது நல்ல நல்ல நிகழ்ச்சிகளைச் செய்துள்ளனர். அதன் முடிவும் நன்றாகவே உள்ளது. பெரியவர்களும் செய்துள்ளனர், சிறியவர்களும் செய்துள்ளனர். டில்லி மற்றும் மும்பையில் மிகப்பெரிய நிகழ்ச்சிகளை உளப்பூர்வமாகச் செய்துள்ளனர். பாப்தாதா அவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றார்.

நிஸார் சகோதரருடன்  நன்றாக செய்து கொண்டிருக்கின்றீர்கள். ரிசல்ட் பாபாவிற்கு மிக நன்றாக பிடித்துள்ளது. மேலும் என்னென்ன திட்டங்கள் தீட்டிக் கொண்டிருக்கின்றீர்களோ அதுவும் நல்லவைகளே! உற்சாகம் ஆர்வத்தோடு செய்து கொண்டிருக்கிறீர்கள், செய்து கொண்டே. போங்கள் செய்விக்கக் கூடியவர் பாபாவாக இருந்தாலும் நிமித்தமாகி இருப்பவர்களுக்கும் பாப்தாதாவின் அன்பு நினைவுகள் கிடைக்கின்றன.

இரட்டை வெளி நாட்டினர் 65-நாடுகளிலிருந்து 800-பேர் வந்துள்ளனர். இரட்டை வெளி நாட்டினருக்கு இரட்டை வாழ்த்துக்கள்! பாப்தாதாவிற்கு வெளிநாட்டினரின் ஒரு விசயத்தில் மிகுந்த மகிழ்ச்சி ஏற்படுகிறது. வெளிநாட்டினர் மதுபனில் வந்து லாபத்தை நன்கு எடுத்துக் கொள்கின்றனர். மிக தூரத்திலிருந்தாலும் மதுபனின் லாபத்தை எடுப்பதில் நன்றாக திட்டம் தீட்டுகின்றார்கள். அனைவரும் புத்துணர்ச்சிப் பெறுகிறார்கள். சேவைக்கான திட்டமும் தீட்டுகிறார்கள். சேவையில் உற்சாகம் ஆர்வத்தையும் நன்கு காண்பிக்கின்றார்கள். பாப்தாதா ரிசல்ட்டை நன்கு கேட்டறிந்தார். பாப்தாதாவிற்கு நன்றாகவே இருந்தது. ஒவ்வொரு குரூப்பின் மீதும் கவனம் வைத்து புத்துணர்வு செய்துள்ளனர். அவ்வாறே செய்து முன்னேறிச் செல்லுங்கள். வெவ்வேறு நாடுகளிலிருந்து மதுபன் வந்து சேவைக்கான திட்டம் மற்றும் சுய ஸ்திதியில் உற்சாகம் ஆர்வத்தின் சந்திப்பு மற்றும் சுய முன்னேற்றத்திற்கான அலைகள் ஆகியவை நன்கு தென்படுகின்றன. எனவே பாப்தாதாவிற்கு இரட்டை புருஷார்த்தி, இரட்டை வெளிநாட்டினர். மிக நன்றாகப் பிடித்திருக்கிறது. இவ்வாறு திட்டங்களைத் தீட்டி வெளிநாட்டில் வாழ்ந்து கொண்டிருந்தாலும் மதுபனிற்கு அருகாமையில் இருக்கக்கூடிய திட்டத்தைத் தீட்டுகின்றீர்கள். இது மிகவும் நல்லது. வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள். வெளிநாட்டினர் கூட சேவையில் குறைந்தவர் அல்ல என்பதை பாப்தாதா பார்க்கின்றார். இந்தியா எவ்வாறு விதவிதமான நிகழ்ச்சிகளின் மூலம் முன்னேறிக் கொண்டிருக்கிறதோ அவ்வாறே வெளிநாடுகளிலும் ஒவ்வொரு ஆண்டும் என்னென்ன நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்கின்றனரோ அவைகளை நன்றாகவே செய்கின்றனர். மேலும் தீட்டிய திட்டங்களை நடைமுறையிலும் கொண்டு வருகின்றனர். எனவே பாப்தாதா அனைத்து இந்திய சகோதர

சகோதரிகளின் சார்பில் உங்களுக்கு விசேஷமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றார்.

இந்த குரூப்பில் **2000-டீச்சர் சகோதரிகள்** வந்துள்ளனர். அனைவரும் பின்னால் திரும்பிப் பாருங்கள் கை அசையுங்கள். நல்லது. டீச்சர்கள் நிமித்தமாக இருக்கின்றனர். சேவைகளை முன்னேறச் செய்வதில்! பாப்தாதா பார்த்தார் பெரும்பாலான சேவைகளின் திட்டங்களை தீட்டவும் செய்கின்றனர் ஆனால் தினமும் சந்தித்து ஓரிரண்டு நிகழ்ச்சிகளை நிச்சயம் செய்ய வேண்டும். இதன் மூலம் என்ன ஏற்படுகிறது? ஒருவர் மற்றொருவரை சந்திக்கக்கூடிய வாய்ப்பும் நன்றாக அமைகிறது. மேலும் ஒருவர் மற்றவருக்கு உதவி கரமாக இருக்கும் வாய்ப்பும் கிடைக்கிறது. மற்றபடி சேவைகள் செய்து கொண்டிருக்கின்றனர். சேவை செய்யவில்லை என்பதில்லை, செய்து கொண்டு தான் இருக்கிறீர்கள், பாப்தாதா இப்போது இதனைக் கூறுகின்றார். ஒவ்வொரு மண்டலமும் ஒன்றாகச் சேர்ந்து பெரிய நிகழ்ச்சிகளை நடத்தவும்! சிறிய சிறிய நிகழ்ச்சிகளை என்னவோ செய்து கொண்டு தான் இருக்கின்றனர் ஆனால் அனைவருக்கும் தெரிய வரட்டும் இம்மாதிரி கூட சேவை நடக்கிறது என்று. ஏதேனும் நிகழ்ச்சிகளை நடத்திக் கொண்டே இருங்கள் மேலும் முன்னேறிக் கொண்டே செல்லுங்கள். டீச்சர்களை பாப்தாதா தனது துணையாளர் என கூறுகின்றார். எப்படி பாபாவோ அப்படியே டீச்சர்களும் பாபாவிற்குச் சமமாக முன்னேறிக் கொண்டே செல்லுங்கள் மற்றும் மற்றவரையும் முன்னேற்றுங்கள்.

சபையில் சில முக்கிய விருந்தினர்கள் அமர்ந்துள்ளனர், அவர்களின் விசேஷமாக சகோதரர் அன்னா ஹசாரே கூட வந்துள்ளார். தங்களுடைய வீட்டிற்கு வந்து சேர்ந்து விட்டார்கள். நல்லது. நேரில் வந்ததைப் பார்த்தேன். கேட்டேன், அருகாமையில் வந்திருக்கிறார்கள். இனி மேலும் அருகாமையில் வந்து கொண்டிருப்பார்கள். நல்லது செய்திருக்கிறார்கள். எல்லோருக்கும் சொன்னார்கள். கேட்டார்கள், பாப்தாதா விசேஷமாக நினைவுகளை எல்லோருக்கும் அளிக்கின்றார். இவர் நிமித்தமாக இருக்கின்றார், ஆனால் எல்லோருக்கும் பாப்தாதா உளப்பூர்வமான அன்பையும், தன்னுடைய வீட்டில் வந்திருப்பதற்காக வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றார். நல்லது.

நாலா பக்கமும் உள்ள எல்லா குழந்தைகளும் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள், கேட்டுக் கொண்டும் இருக்கின்றார்கள். பாப்தாதாவிற்கு மகிழ்ச்சியாக இருக்கின்றது. இந்த அறிவியலின் மூலமாக கிடைத்த கருவிகள் குழந்தைகளுக்கு சுக அனுபவத்தை கொடுத்துக் கொண்டிருக்கின்றது. ஆதலால் பாப்தாதா ஏற்கனவே தெரிவித்திருக்கின்றார், இந்த விஞ்ஞானம் உங்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும். ஆகவே கொடுத்துக் கொண்டிருக்கின்றது. இனி மேலும் கொடுத்துக் கொண்டேயிருக்கும். பாபா பார்க்கின்றார், எப்படி அருகாமையில் பர்க்க முயற்சி செய்து கொண்டிருக்கின்றார்களோ, அவர்களுக்கு அனுபவம் செய்து கொண்டிருக்கின்றது ஆதலால் விஞ்ஞானிகளுக்கும் நல்வாழ்த்துக்கள். குழந்தைகளாகிய உங்களுக்கு இந்த நிவாரணம் கிடைத்து விட்டது. எல்லோரும் பார்த்துக் கொண்டும் இருக்கின்றார்கள், கேட்டுக் கொண்டும் இருக்கின்றார்கள். அநேகர் இந்த லாபத்தை எடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆதலால் பாப்தாதா குழந்தைகளினுடைய உற்சாகம், ஆர்வத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைகின்றார். எல்லோரும் எங்கெல்லாம் குழந்தைகள் இருக்கின்றார்களோ இதில் எல்லோரும் மகிழ்ச்சியாக இருப்பார்கள். ஒவ்வொரு குழந்தையும் தூரத்தில் அமர்ந்திருந்தாலும் அருகாமையை அனுபவம் செய்து கொண்டிருக்ககக் கூடியவர்களுக்கு மிகவும் அன்பு நினைவுகளையும், விஞ்ஞான சாதனத்தில் இருந்து விடுவித்துக் கொண்டும் அமர்ந்திருக்கின்றார்கள். மேலும் வெவ்வேறு விதமான முறைகளை கடைப்பிடிக்கின்றார்கள். அவர்களுக்கும் கூட மிகுந்த அன்பான நினைவுகள். எல்லா குழந்தைகளும் தூரத்தில் அமர்ந்திருந்தாலும் தந்தைக்கு அருகாமையில் இருக்கின்றார்கள். பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். பாப்தாதாவும் பார்த்துக் கொண்டிருக்கின்றார், ஆதலால் ஹோலியினுடைய நல்வாழ்த்துக்கள், நல்வாழ்த்துக்கள், நல்வாழ்த்துக்கள்!

தாதிமார்களுடன் ஒவ்வொருவரும் செல்லமானவர்கள். ஒவ்வொருவரும் உள்ளத்தின் அதிகார உரிமை உள்ளவர்கள். உரிமையை எடுத்துக் கொண்டும் இருக்கின்றீர்கள். (தாதி ஜானகிஜி பாபாவை மெதுவாக வருடுகின்றார்) பதிலாக பாபா அனைவருக்கும் எனதன்புகள்!

மோகினி சகோதரியுடன் நன்றாக செய்கின்றீர்கள், தைரியம் நன்றாக உள்ளது. எங்கு தைரியம் உள்ளதோ அங்கு உதவி கிடைத்துக் கொண்டேயிருக்கும்.

ருக்மணி சகோதரியிடம் (நிர்மல் சாந்தா தாதியின் உதவியாளர்) நல்ல தைரியமாக இருந்து நன்றாகச் செய்தீர்கள். அவர்களை கவனித்துக் கொண்டதின் ரிசல்டும் நன்றாக இருக்கிறது. என்ன நடந்ததோ அது நாடகம், வயதும் அவருக்கு அதிகமாகி விட்டது.

வித்யா சகோதரி (கான்பூர் கங்கை தாதியின் உதவியாளர்) மிகவும் தைரியம் வைத்து வந்துள்ளீர்கள். கணக்கு வழக்கு முடிந்து விட்டது. சேவையின் நிமித்தமாகியுள்ளீர்கள். நல்லது. நடந்து நாடகம். நாடகத்தில் எந்த கவலையும் இல்லை. கவலையற்றவர்!

சுந்தர்லால் சகோதரர் தில்லி-ஹறிநகர் ஆதியில் இருந்தே நிமித்தமாகியுள்ளீர்கள். கவலைப்படாதீர்கள். கொஞ்சம் கவலை வருகிறது. இங்கு வந்து விட்டீர்கள், சோதனை செய்து கொள்ளுங்கள். ஆப்ரேஷன் செய்யாமல் கூட இருக்கலாம்.

மூன்று சகோதரர்களும் பாப்தாதாவிற்கு பூச்செண்டு கொடுத்தனர்.

பாப்தாதா மும்பை மற்றும் டில்லியில் சேவை நல்ல முறையில் நடந்ததைப் பார்த்தார். என்ன லட்சியம் இருந்ததோ அது சரியாக இருக்கிறது. (ஹைதராபாத்திலும் சேவை நன்றாக. நடந்தது) ஹைதராபாத்காரர்களுக்கு வாழ்த்துக்களும், டோலியும் அனுப்புங்கள். மேலும் யார் சேவாதாரி குழந்தையோ (நீதிபதி ஈஸ்வரய்யா சகோதரர்) அவரும் நன்றாக உள்ளார். அவரின் பெயர் கூட நன்றாக உள்ளது. (அறிவியலின் சாதனங்கள் நன்றாக உள்ளது. ஆனாலும் தடைகளும் வந்து கொண்டு தான் இருக்கின்றன). நமது இராஜ்யம் இல்லையல்லவா? இது சிறிய மற்றும் பெரியவையாக இருக்கிறது. ஒன்றாக இருந்து சாதனங்களை தயார் செய்யுங்கள். அவ்வாறு செய்யும் போது நிச்சயமாக முன்னேறுவீர்கள்.

அனைவரும் உற்சாகம், ஆர்வம் மற்றும் சேவையை அதிகப்படுத்துங்கள். சிறிய சென்டர்களும் உள்ளது. பெரிய சென்டர்களும் உள்ளது. (சேவையில் புதுமை என்ன இருக்கிறது). புதுமையாக இதைக் கொண்டு வாருங்கள். யார் வருகிறார்களோ அவர்களை அருகில் கொண்டு வாருங்கள், குறைந்த பட்சம் அவர்கள் மாணவர்களாகக் கூட ஆகட்டும். அவ்வபோது வருகிறவர்கள் தானாகவே தொடர்பில் வருவதை அதிகரியுங்கள். மனதில் வர வேண்டும் நான் போக வேண்டும் என்று. இந்த மாதிரி வரக்கூடியவர்களின் ரிசல்ட் இருக்க வேண்டும். இப்போது வருகிறவர்கள் நல்லவர்கள். நன்றாகவும் இருக்கின்றார்கள். இப்போது அருகில் கொண்டு வாருங்கள். குறைந்தது மாணவர்கள் ஆகாவிட்டாலும், சந்திப்பவர்களாயும், பிறருக்கு கூறுபவர்களாகவும் ஆகட்டும். குறைந்தது முரளியாவது கேட்கட்டும்.

(பரமாத்மா வந்து விட்டார். என்ன இந்த தலைப்பை பயன்படுத்திக் கொள்ளலாமா) ஆனால் சில விசயங்களைப் பிறகு பார்ப்போம். இப்படி அல்ல. தந்தை வந்து விட்டார் அப்படி அல்ல, தந்தை வந்து விட்டார். எந்த காரணத்தினால் சொல்கிறார்கள். (உள்ளார்ந்த அமைதி, நல்லிணக்கம்) ஆகிய தலைப்புகளை வைக்கலாம். உங்களுக்குள் அமர்ந்து முடிவு எடுங்கள். அநேக தலைப்புகளை அமர்ந்து நீங்கள் தேர்ந்தெடுக்க முடியும்.

புதியாக வெப் சைட் ஆரம்பித்துள்ளார்கள், இதில் இன்டர் நெட் மூலம் கோர்ஸ் செய்ய முடியும். எல்லோரும் பாஸாகி விட்டால் நீங்கள் ஆரம்பிக்கலாம். நன்றாக செய்துள்ளீர்கள். பாப்தாதா மகிழ்ச்சி அடைகின்றார். என்ன செய்தாலும் அதில் நன்மை உள்ளது.

✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳

## 05.04.2013 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## சுப பாவனையுடன் ஒருவர், மற்றவருக்கு உதவிகரமாக ஆகி, தடைகளற்று விளங்க வேண்டும் மேலும் அனைவரையும் தடைகளற்றவராக ஆக்கி, சதா குஷியோடு இருக்க வேண்டும், அனைவரையும் குஷி படுத்த வேண்டும்!

இன்று அனைத்து கஜானாக்களின் எஜமானர் தனது கஜானாக்களினால் நிரம்பி இருக்கும் குழந்தைகளைப் பார்த்து குஷி அடைகிறார். மேலும் உள்ளத்திலிருந்து எழுகிறது. ஆஹா, எனது அருமைக் குழந்தைகளே ஆஹா ஒவ்வொரு குழந்தையின் முகத்திலும் கஜானாக்களின் பிராப்தியினுடைய பிரகாசம் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது. பெரும்பாலான குழந்தைகளின் கஜானாக்களினால் நிரம்பி இருக்கும் அந்த பிரகாசம் தென்பட்டுக் கொண்டிருக்கிறது. பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் குணத்தையும் பாடிக் கொண்டிருக்கின்றார். ஆஹா எனது குழந்தாய் ஆஹா அப்படித்தானே! ஆஹா குழந்தைகளே ஆஹாதானே பாபா கூறினார்! குழந்தைகள் செய்து முடித்தனர். பாபா கூறுகிறார் -ஒவ்வொரு குழந்தைகளின் முகத்திலும், நெற்றியிலும் கஜானாவின் எஜமானன் நிலையின் ஜொலிப்பு தென்பட வேண்டும். அதனை பாப்தாதா இன்று ஒவ்வொரு கஜானாவின் அதிகாரியான குழந்தைகளைப் பார்த்து குஷி அடைந்து கொண்டிருக்கிறார். பார்த்து என்ன பாடலைப் பாடுகிறார்? ஆஹா, குழந்தாய் ஆஹா! எப்படி இன்று ஒவ்வொரு குழந்தையின் முகத்திலும் கஜானாவினால் நிரம்பிய பிரகாசம் உள்ளது அவ்வாறே சதா இருங்கள்! யார் பார்த்தாலும் உங்கள் முகம் பேசட்டும். நீங்கள் பேச வேண்டிய அவசியமே இல்லை, ஆக, சதா சோதனை செய்யுங்கள். எப்படி இப்பொழுது உங்களுடைய முகம்

பிரகாசித்துக் கொண்டி அவ்வாறு சதா பிரகாசிக்கிறதா? யார் பார்த்தாலும் உங்கள் முகம் காண்பிக்கட்டும்; வாய் மூலம் பேச வேண்டிய அவசியம் இல்லை. முகமே பேசட்டும். அவ்வாறே சதா கஜானாக்களினால் நிரம்பியவர்களாய், காரியங்களை செய்து கொண்டிருந்தாலும் சரி, யோகம் செய்தாலும் சரி, பாபாவினுடைய நினைவில் மூழ்கி இருந்தாலும் சரி, இவ்வாறே தென்படட்டும். ஒவ்வொருவரும் தனது பிரகாசிக்கும் முகம் எப்பொழுதும் சமமாய் இருக்க முடியும் அல்லவா? ஏனெனில் இன்று எப்படி சமயம் முன்னேறிக் கொண்டிருக்கிறதோ அவ்வாறே சூழ்நிலைகளைப் பொருத்து டென்ஷனும் அதிகரிக்கும். ஆக, உங்களது முகம் அவர்களை குஷிப்படுத்தும். இவ்வாறு சேவை செய்வதற்காக ஒவ்வொரு குழந்தையும் தயாராக வேண்டும். அப்படி என்ன கஜானா அது? அறிவீர்களா? விசேஷமான கஜானா ஞானம், யோகம், தாரணை ஆகியவற்றை உங்களிடம் சோதனை செய்யுங்கள்.

பாப்தாதா இன்றைய சபையில் விசேஷமாக கஜானாக்களினால் நிறைந்திருக்கும் குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். இருப்பினும் அனைத்திலும் சிரேஷ்ட கஜானா இன்றைய சங்கமயுகத்தின் சமயம் ஆகும். ஏனெனில் இன்றைய சமயத்தில் சுயம் தந்தை, பாபா மற்றும் குருவின் சம்மந்தத்தில் வந்திருக்கிறார். இன்றைய சமயத்தில் சுயம் பாபா குழந்தைகளை கஜானக்களினால் சம்பன்னம் (நிரப்பி) ஆக்கிக் கொண்டிருக்கின்றார். ஆக சமயத்தின் மூலம் உங்களுக்கு அன்பு உள்ளதல்லவா? அனைவருமே சோதனை செய்யுங்கள். என்னிடம் அனைத்து கஜானாக்களும் சேமிப்பு ஆகியுள்ளதா? பாபாவுக்கு சமமாக அனைத்து கஜானாக்களையும் வழங்கிக் கொண்டிருக்கிறேனா? பாபாவிற்குச் சமமாக கஜானாக்களின் அதிகாரியாக இருக்கிறேன் என்று உணருபவர்கள் கை உயர்த்துங்கள். பாப்தாதாவிற்கு குஷி, கையை பெரும்பாலானோர் உயர்த்திக் கொண்டிருக்கின்றனர். பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் கஜானாக்களினால் நிரம்பி இருப்பதற்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறார். நல்லது! பாப்தாதா தனது கஜானக்களினால் மூலம் நிறைந்திருக்கும் குழந்தைகளைப் பார்த்து குஷி அடைகிறார். ஆக அனைத்து தரப்பிலிருந்தும் வந்திருக்கக்கூடிய குழந்தைகளைப் பார்த்து பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் வரவேற்கவும் செய்கிறார்.

எப்படி இப்பொழுது அனைவரும் குஷியால் நிறைந்து தென்படுகிறீர்களோ அவ்வாறு சதா இருக்கிறீர்களா? ஏதேனும் விசயம் இருந்தால், அது தனது குஷியை எடுத்து கொண்டு போய் விடக்கூடாது. எப்படி இப்பொழுது குஷி நிறைந்த முகமாக உள்ளது, சிநேகம் மற்றும் அன்பின் முகமாக உள்ளது, அவ்வாறே எப்பொழுதும் இருக்க வேண்டும். சொல்லுங்கள்? அவ்வாறு இருக்க முடியுமா? சதா இருக்கும். கடந்தது கடந்து போனது. இப்பொழுது சதா இருக்கும் என்று நினைப்பவர்கள் கை உயர்த்துங்கள். பாருங்கள் கையை என்னமோ பெரும்பாலோர் உயர்த்துகின்றனர். ஆக ஏதேனும் விசயம் எப்பொழுதாவது வரும் பட்சத்தில் இவ்வாறு முகம் இருக்குமா? தலையை அசையுங்கள்! இருக்குமா? இருக்குமா? ஆக அனைவரும் பார்ப்பார்கள். யார் இவர்கள் வந்துள்ளார்கள். உங்களைப் பார்த்து பாதி குஷி அவர்களும் அடைந்து விடுவர். நல்லது! இன்று எந்த மண்டலம் வந்துள்ளது?

சேவை முறை இந்தூர் மண்டலம் இன்று, பாதி ஹாலுக்கு மேல் இந்தூர் மண்டலமே நிற்கின்றனர். ஆஹா குழந்தைகளே ஆஹா, நல்லது. பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் பார்த்து குஷியினுடைய கர ஒலியை எழுப்புகிறார் ஆனால் அங்கு திரும்பிச் சென்ற பிறகும் எப்படி இன்று குஷி நிறைந்த முகமாக இருக்கிறதோ, அவ்வாறே சதா இருக்க வேண்டும். அவ்வாறு உங்களோடு உறுதி மொழி செய்து கொள்ளுங்கள். இது நன்றாக இருக்கிறது அல்லவா? முகத்தை சோர்வாகவும் வைத்திருங்கள், புன்னகையோடும் வைத்திருங்கள், இவ்விரண்டில் எது நன்றாய் இருக்கும்? புன்சிரித்த முகமே நன்றாய் இருக்கும் அல்லவா! ஆக இன்றிலிருந்து அனைத்து குழந்தைகளும் இந்த மண்டலம் மட்டும் அல்ல அனைத்து குழந்தைகளும் தங்களது உள்ளத்தில் உறுதிமொழி எடுத்து கொள்ளுங்கள், சதா குஷியாய் இருப்போம் மேலும் அனைவரையும் குஷி படுத்துவோம். ஏனெனில் குஷியைப் போன்ற சத்துணவு வேறு எதுவமில்லை. பாப்தாதா அநேக முறை குஷியின் அற்புதத்தைப் பற்றி விளக்கியுள்ளார். ஒரே குஷியில் அவ்வளவு அதிசயம்! ஏதேனும் பொருளை விநியோகித்தால் அது நம்மிடம் குறைந்து கொண்டே போகும் ஆனால் குஷியை விநியோகித்தால் குறையுமா? அதிகரிக்கும் அல்லவா! ஆக பாப்தாதாவின் சுலோகன் இந்த நினைவை வைத்துக் கொள்ளுங்கள். இங்கே எழுதுங்கள் -குஷியோடு இருக்க வேண்டும்

மேலும் குஷிப்படுத்த வேண்டும்! இது பிடித்திருக்கிறதா? யாருக்குப் பிடித்திருக்கிறதோ அவர்கள் கை உயர்த்துங்கள். ஆக இவ்வளவு குஷி நிறைந்த குழந்தைளாகிய உங்களைப் பார்த்து எவ்வளவு குஷி அடைவார்கள். ஆக, மிக உறுதியாக உறுதிமொழி எடுத்து கொள்ளுங்கள். என்ன செய்வீர்கள்? குஷியாக இருப்போம் மேலும் குஷியை வழங்குவோம் இதில் உறுதியா? இங்கு கூட ஏதேனும் விசயம் வந்தால் குஷி மறைந்து போய் விடுகிறது. அப்படி கூடாது. குஷி மறைந்து போவதற்கான விசயமே இல்லை. இன்றிலிருந்து அனைவரும் சோதிக்க வேண்டும். குஷி விலகிச் சென்று விடக்கூடாது. அந்தளவு சக்தி இருக்கிறதா? கை உயர்த்துங்கள். நல்லது. பாருங்கள் உங்களது மண்டலத்தினுள் உள்ளவர்கள், உங்களது கிளையில் உள்ளவர்கள், உங்கள் கையை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். பாப்தாதாவும் குஷி அடைகிறார். தைரியமாக அடியெடுத்து வைத்துள்ளீர்கள், உங்களது தைரியத்துடன் பாபாவினுடைய உதவியும் கூடவே இருக்கும். அனைவருடைய போட்டோவையும் எடுக்கிறீர்கள் அல்லவா? இந்த போட்டோவை இந்த மண்டலத்திற்கும் கொடுங்கள். இனி வருபவர்களும் விரும்பினால் அவர்களுக்கும் போட்டோவைத் தாருங்கள். இன்றைய முகம் போன்று என்றும் இருக்கட்டும். அனைவருக்கும் சம்மதமா, சதா குஷியோடு இருப்போம், குஷியை வழங்குவோம். சம்மதமா? இரண்டு கைகளையும் உயர்த்துங்கள். நல்லது, இந்த போட்டோவை ஞாபகார்த்தமாக வையுங்கள்,

தற்போது பாப்தாதா இதனையே விரும்புகிறார். ஒவ்வொருவரையும் எவரேனும் தூரத்திலிருந்து பார்த்தாலும் தானும் புன்சிரிக்க வேண்டும். உங்களது குஷி நிறைந்த முகத்தைப் பார்த்து மகிழ்ச்சியால் நிரம்பி வழிய வேண்டும். இந்த சேவையை செய்வீர்களா? செய்வீர்களா? நல்லது. கை உயர்த்துங்கள். ஆஹா எனது அருமை குழந்தைகளே ஆஹா! செய்வார்கள் இன்றிலிருந்து அனைத்து இடங்களிலும் (கிளைகள்) திடீரென எவரேனும் வந்தால், (அவரை பாப்தாதாவே கூட அனுப்புவார்). ஏனெனில் பாப்தாதா குழந்தைகளின் அப்படி இப்படியான முகத்தைப் பார்க்க விரும்பவில்லை. ஆக பாப்தாதாவைக் குஷிப்படுத்த வேண்டும் அல்லவா? செய்வீர்களா? அனைவருமே உள்ளப்பூர்வமாக சரி பாபா என்று கூறுகின்றனர். தற்போது ஒவ்வொரு சென்டரும் தங்களது உடன் இருப்பவர்களையும் சோதனை செய்ய வேண்டும்.

ஒன்றும் வாயால் கூறத் தேவையில்லை. ஏன், எப்படி? என்று கேட்க வேண்டாம் ஆனால் உங்கள் முகத்தை அவ்வாறு அன்பாக வைத்திருக்க வேண்டும். அதைப் பார்த்து அவர்கள் அமைதியாகி விட வேண்டும். அவ்வாறு சேவை செய்வீர்கள்தானே? தானும் அவ்வாறு இருக்க வேண்டும் பிறரையும் உங்களைப் போல் ஆக்க வேண்டும். யாரேனும் திடீரென்று எந்த சென்டருக்கு வந்தாலும் அவ்வாறு அனுபவம் செய்ய வேண்டும். அதாவது குஷி நிறைந்த இடத்திற்கு தாங்கள் வந்துள்ளதாக எங்கு குஷி இருக்கிறதோ அங்கு அனைத்துமே இருக்கும். எப்போது வேண்டுமானாலும் பாருங்கள். யாரேனும் யாரிடமிருந்தாவது விடைபெறுகிறார்கள் என்றால் என்ன கூறுவார்கள்? குஷியாக இருங்கள். நீடுழி இருங்கள். ஆக இப்போது பாப்தாதா திடீரென யாரையாவது இரகசியமாய் அனுப்பி வைப்பார், பார்ப்பார். ஏனெனில், நீங்கள் அனைவரும் மிகப் பெரிய தந்தையின் குழந்தைகள், பாப்தாதாவும் குழந்தைகளைப் பார்த்து குவி அடைகிறார். மேலும் உள்ளப்பூர்வமாக வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றார். சதா குஷியாகவும், நீடுழியும் வாழுங்கள். மேலும் இன்று பாப்தாதா புதிது புதிதாய் நிறையபேர் வந்துள்ளதை பார்க்கிறார்.

இன்று முதல் முறையாக யாரெல்லாம் வந்துள்ளீர்களோ அவர்கள் கை உயர்த்துங்கள். பாருங்கள் எவ்வளவு பேர்! பாப்தாதா வருகிறவர்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறார். மிகவும் தாமதம் டூலேட் என்பதற்கு முன்பாகவே வந்துள்ளனர் ஆனால் அற்புதத்தை செய்து காண்பிக்க வேண்டும். தைரியம் உள்ளதா? முதல் முறையாக வந்துள்ளவர்கள் எழுந்திருங்கள் அனைவருமே பார்க்கின்றனர் எவ்வளவு பேர் வந்துள்ளனர் என்று. நல்லது

இந்தூர் விடுதியின் 150-குமாரிகள் வந்துள்ளனர். நல்லது, பாப்தாதாவிற்கு மிகவும் குஷி. ஒவ்வொரு குமாரியும் சேவா இரத்தினமாகி வெளியேறி செல்வார். அனைவரிடமும் அந்த தைரியம் உள்ளதா? தைரியும் இருப்பின் கை உயர்த்துங்கள். தைரியமான குழந்தைகளுக்கு பாப்தாதாவின் உதவி இருக்கவே இருக்கிறது. பாப்தாதாவிற்கும் குஷி, தைரியமானவர்களுக்கு அதிகப்படியான உதவியின், பாப்தாதாவினுடைய சங்கல்பம் கூடவே இருக்கும். ஆக இன்று யாரெல்லாம் வந்துள்ளீர்களோ அந்த ஒவ்வொரு குழந்தைக்கும்

பாப்தாதா விசேஷமான தைரியத்தை வழங்குகிறார். ஒருபொழுதும் பயப்படக் கூடாது. என்னுடைய தந்தை என்று கூறியவுடன் பாபா உடனே ஆஜர் ஆகி விடுவார் ஆனால் உள்ளத்தால் அழைக்க வேண்டும். என்னுடைய தந்தை என்று வாயால் மட்டும் கூறினால் போதாது. பாபாவிற்கும் குழந்தைகள் மீது மிகுந்த அன்பு உள்ளது. தைரியம் உங்களது, உதவி பாபாவினுடையது இருக்கவே இருக்கிறது!

இந்த வருடத்தில் இதுவே கடைசி சந்திப்பு ஆனால் அடுத்த சீசனுக்காக ஒவ்வொருவரும் இரண்டு காரியங்களைச் செய்ய வேண்டும். ஒன்று தங்களது கிளை நிலையத்தின் மீது சதா சுபபாவனை, சுபமான ஆசைகளின் மூலம் சதா தடைகளற்றதாக ஆக்க வேண்டும். தான் சுயம் தடைகளற்று விளங்க வேண்டும். மேலும் அனைவரையும் தடைகளற்றவர்களாக ஆக்க வேண்டும்! சம்மதமா? கை உயர்த்துங்கள். கை என்னவோ அழகாக உயர்த்துகிறீர்கள். பாப்தாதா கைகளைப் பார்த்து குஷியும் அடைகிறார் ஆனால் பாபாவை எப்பொழுதும் குஷியாக வைத்திருக்க வேண்டும். யோசிக்க வேண்டாம். யோசிக்க வைக்க வேண்டாம். பிறகும் பாபாவிற்கு எப்பொழுதுமே குஷிதான். எப்பொழுதும் ஒவ்வொரு குழந்தைக்கும் ஆசீர்வாதங்களை வழங்குகிறார். அமர பவ! ஆனால் அடுத்த சீசனுக்காக விசேஷமாக என்ன செய்யப் போகிறீர்கள். பாப்தாதாவினுடைய சங்கல்பமும் இதுவே. ஒவ்வொரு குழந்தையும் தனது பலஹீனத்தை அறியவே செய்யும். குறிப்பாக என்ன பலஹீனம் உள்ளதோ நீங்கள் அறிவீர்களா? அந்த பலஹீனத்தை முடித்து விட்டு வாருங்கள். அது வீனான சங்கல்பமாகவும் இருக்கலாம், கோபமாகவும் இருக்கலாம், சிறு சிறு கோபதாபங்கள் கூட தன்னையும் தங்களது நிலையத்தையும் கூட தொந்தரவு செய்கிறது. ஆக என்ன குறைவு இருந்தாலும் முடித்து விட்டு வர வேண்டும், விருப்பமா? விருப்பமாக இருந்தால் இரண்டு கைகளையும் உயர்த்துங்கள். ஆஹா, குழந்தைகளே ஆஹா! எப்படி கை உயர்த்துவதில் எவரெடியாக இருக்கிறீர்களோ அவ்வாறு தியாகம் செய்வதிலும் எவரெடியாக இருக்க வேண்டும். ஆக அடுத்த சீசனில் எந்த மாதிரி சபை இருக்கும். தடைகளற்ற பாபாவினுடைய உள்ளத்திற்குப் பிடித்தமான சபையாக இருக்கும். தாதிமார்களுக்கு பிடித்துள்ளதா? கை உயர்த்துங்கள். இனிமேல் பார்ப்போம்! சென்டரில் இருப்பவர்கள் தினமும் இரவில் இந்த நினைவை ஞாபகம் ஊட்ட

வேண்டும். என்ன உறுதிமொழி எடுத்தீர்கள் என்று? உறுதிமொழி எடுத்தவாறு நடக்கிறோமோ? அது சுப பாவனையின் மூலமாக இருக்க வேண்டும், திட்டுவது போன்று கேட்க வேண்டாம். சுப பாவனையின் மூலம் ஒருவர் மற்றவருக்கு உதவிகரமாக ஆகி, ஒருவர் மற்றவரை முன்னேறச் செய்யும் சுப பாவனையுடன் சைகை அளிக்க வேண்டும். ஆக, இன்றைய சுலோகன் என்ன? குஷியாய் இருப்போம் குஷிப்படுத்துவோம்! இது பிடித்திருக்கிறதா? பிடித்திருந்தால் கை உயர்த்துங்கள். புகைப்படக்காரர் இதனை படம் எடுங்கள்! ஆக இன்று கூட என்ன பலவீனம் இருக்கிறதோ அதனை இந்த ஹாலிலேயே விட்டுச் செல்ல வேண்டும். கூடவே எடுத்துச் செல்ல வேண்டாம். செய்ய முடியுமா? இதற்கு கை உயர்த்துங்கள். வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள்! நல்லது.

இரட்டை வெளிநாட்டினர் பாப்தாதா இரட்டை வெளிநாட்டினர் என்று கூறுவதில்லை, இரட்டை புருஷார்த்தி என்று கூறுகிறார். இது பிடித்திருக்கிறதா? பாப்தாதா பார்த்தார். இரட்டை வெளிநாட்டினரும். உள்ளுக்குள்ளேயே மாறிக் கொண்டிருக்கும் விதியை நன்கு பின்பற்றுகிறார்கள். பாப்தாதா குஷி அடைகிறார். இரட்டை வெளிநாட்டினர் நன்கு முன்னேறிச் செல்கின்றனர். புருஷார்த்தத்தின் உற்சாகம், ஆர்வத்தை அதிகரித்துக் கொண்டே இருக்கின்றனர். இந்த உறுதிமொழி எடுத்துக் கொண்டு செல்கின்றனர். அப்படித்தானே உறுதிமொழி எடுக்கிறீர்கள் அல்லவா! இம்முறை பார்த்தார். இந்த இரட்டை வெளிநாட்டினர் ரிசல்ட்டில் தங்களுக்குள் நன்றாகச் சந்தித்து கொள்கின்றனர். மேலும் சங்கல்பமும் மிக சிரேஷ்டமாக வைக்கின்றனர் ஆனால் இந்த சங்கல்பங்களை அங்கு திரும்பிச் சென்ற பிறகு தினமும் நினைவில் கொண்டு வர வேண்டும். இரவு சமயத்தில் உறங்கப் போவதற்கு முன் சோதனை செய்யுங்கள். என்ன சங்கல்பம் செய்தோமோ அது நடந்து கொண்டிருக்கிறதா? ஒருவேளை நடக்கவில்லையென்றால் இரவு உறங்கச் செல்லும் முன்பே அடுத்த தினத்திற்கான உற்சாகம் ஆர்வத்தை வெளிக் கொணர்ந்து பின்பு உறங்குங்கள். மேலும் மறுநாள் காலையில் எழுந்து பார்க்க வேண்டும். நேற்று செய்த சங்கல்பம் இன்று கூட வெளிப்படையாக உள்ளதா? அல்லது சற்று உள்ளேயே இருந்து விட்டதா? ஒருவேளை அவ்வாறு உள்ளேயே இருந்தால் வெளி உற்சாகத்தில் கொண்டு வாருங்கள்.

பாப்தாதா பார்த்தார். வெளிநாட்டினரிடம் மிகுந்த வித்தியாசம் உள்ளது. மேலும் பாப்தாதா உள்ளப்பூர்வமான வாழ்த்துக்களையும் தெரிவிக்கிறார். ஆஹா பாபா ஆஹா! ஒரு குழந்தையும் குறைவாக இருக்கக் கூடாது என்றே பாப்தாதா நினைக்கின்றனர். ஒருவர் மற்றவரை விட முன்னால் இருக்க வேண்டும். அது வெளிநாட்டினர் இருந்தாலும் சரி, உள்நாட்டினராக இருந்தாலும் சரி பாப்தாதாவிற்கு மிகுந்த குஷி. வெளிநாட்டினர் மதுபனில் வந்து முன்னேற்றத்திற்கான சாதனங்கள் வைத்துள்ளனர். மதுபனின் லாபத்தையும் நன்கு எடுத்து கொள்கின்றனர். அதனைப் பார்த்து பாபா மிகுந்த குஷி அடைகின்றார். ஏனெனில் வெளிநாட்டிலோ இவ்வளவு பேர் ஒரே இடத்தில் குழுமி இருக்க முடியாது ஆனால் மதுபனில் வந்து அனைத்து வெளிநாட்டினரும் மதுபனின் லாபத்தை எடுப்பதில் மிகுந்த ஆர்வமாக உள்ளனர். இதனைப் பார்த்து பாப்தாதாவிற்கும் குஷி. நீங்கள் உள்நாட்டினரும் கூட வெளிநாட்டினரின் புருஷர்த்தத்தைப் பார்த்து குஷி அடைகின்றீர்கள் அல்லவா. எல்லோரும் உங்கள் மீது குஷியாக இருக்கிறார்கள். பாருங்கள். நல்லது. பாப்தாதாவின் விசேஷமான வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்!

**2000-டீச்சர்ஸ் சகோதரிகள்** வந்துள்ளனர். கை உயர்த்துங்கள். அதிகமாக உள்ளனர். டீச்சர்கள் என்றாலே தங்களது முகத்தின் (features ஃபீச்சர்ஸ்) மூலம் எதிர்காலத்தை (future ப்யூச்சர்) காண்பிக்கக் கூடியவர்கள். பாப்தாதா டீச்சர்கள் மீது மிக மிக மனதார அன்பு செலுத்துகிறார். ஏனெனில், டீச்சர்கள் பாபாவுக்குச் சமமான சேவையில் உள்ளனர். பாப்தாதாவிற்கு மிகுந்த குஷி ஆனால்...ஆனால்... தற்போது ஆனால் என்பதை கூறுவதில்லை. ஒவ்வொரு டீச்சரும் முகத்தின் மூலம் பாபாவை. வெளிப்படுத்தக் கூடியவர்கள். நல்லது. முயற்சி செய்கிறீர்கள் அதையும் பாப்தாதா பார்க்கின்றார் ஆனால் சென்டரை தடைகளற்று வைத்திருப்பது. இவ்விஷயத்தில் தற்போது பாப்தாதாவினுடைய உள்ளத்தை முழுமை செய்வதாக இல்லை. தற்போது இந்த ஆண்டு இந்த முயற்சி செய்ய வேண்டும். ஒவ்வொருவரின் தரப்பிலிருந்து இந்த கடிதம் வர வேண்டும், எங்களது மண்டலம் தடைகளற்றது. இவ்வாறு நடக்க முடியுமா? இது நடக்குமா? குறைவான தைரியமே வைக்கின்றனர். தற்போது இந்த ஆண்டு அற்புதம் செய்து காண்பிக்க வேண்டும். தைரியம் உள்ளது அல்லவா?

தைரியம் இருந்தால் அது நடந்து விடும். பாப்தாதா கூடவே இருக்கிறார். பிறகும் கூட பாப்தாதா உங்களது பாக்கியத்தைப் பார்த்து குஷி அடைகிறார். தற்போது மேலும் குஷிப் படுத்த வேண்டும். புரிந்து கொண்டீர்கள்! நல்லது. வரும் சீசனில் என்ன செய்வீர்கள். திட சங்கல்பம் எனும் மாலையை அணியுங்கள். பாப்தாதா என்ன விரும்புகிறாரோ அதனைக் கூற வேண்டிய அவசியம் இல்லை. பாப்தாதா என்ன விரும்புகிறாரோ அதனை நீங்களும் விரும்புகிறீர்கள். அதனை நடைமுறையில் கொண்டு வாருங்கள். சரியா? சரிதானே டீச்சர்களே! கை உயர்த்துங்கள். அதிகம் டீச்சர்கள் வந்துள்ளனர். ஆஹா டீச்சர்களே ஆஹா! நல்லது. அடுத்த சீசனில் என்ன செய்ய வேண்டுமென்று கூறி இருக்கிறோம், செய்தே ஆக வேண்டும். அனைவரும் சப்தமாகக் கூறுங்கள். செய்தே ஆக வேண்டும். பாப்தாதா எவ்வளவு குஷி அடைவார். ஆஹா குழந்தைகளே ஆஹா! என்னென்ன குறை இருக்கிறதோ அதை விட்டே ஆக வேண்டும். இது உறுதியா? யாருக்கு உறுதியான சங்கல்பம் உள்ளதோ, செய்தே ஆக வேண்டும். அவர்கள் கை உயர்த்துங்கள். நல்லது கையை நன்றாக உயர்த்துகின்றார்கள். பாப்தாதா கைகளைப் பார்த்து குஷி அடைகின்றார் ஆனால் இப்பொழுதோ நடைமுறையில் செய்வதில் முன்னால் வர வேண்டும். ஆக இந்த சீசனில் என்ன சங்கல்பம் செய்கிறீர்களோ அது சங்கல்பமாக அல்ல, நடைமுறையில் செய்து ஆக வேண்டும். என்ன ஆனாலும் சரி, மாறியே தீர வேண்டும். இவ்வாறு திட சங்கல்பம் செய்யுங்கள். கடைசியில் சமயத்தை அருகாமையில் கொண்டு வரத்தானே செய்ய வேண்டும். உங்களது இராஜ்யத்திற்குச் செல்ல வேண்டும் அல்லவா! கை உயர்த்துங்கள். செல்ல வேண்டும் அல்லவா? ஆக, பார்ப்போம். திரும்பிச் செல்வதற்கான ஏற்பாடுகளை செய்தே ஆக வேண்டும். நல்லது.

அனைவருக்கும் மிக மிக பாப்தாதாவின் அன்பு நினைவுகள்! இந்நாட்களிலோ அனைவரும் அறிவியலின் சாதனையின் மூலம் அருகாமையிலேயே பார்க்க கூடியவர்கள். ஆக பார்த்துக் கொண்டிருக்கக் கூடிய அனைவருக்கும் மேலும் எதிரிலேயே அமர்ந்திருக்கக்கூடிய அனைவருக்கும் பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் உள்ளத்தின் மாலையை பாப்தாதா அணிவிக்கிறார். நல்லது. ஓம் சாந்தி.

தாதிகளுடன் பாப்தாதாவோ கூடவே இருக்கவே இருக்கிறார். (கூடவே இருக்கிறோம், கூடவே இருப்போம், கூடவே செல்வோம்) திடமான உறுதிமொழி இது எதுவரை இருக்கிறோமோ அதுவரை நன்றாகவே இருப்போம்.

மோகினி சகோதரி பாருங்கள் இவர் மறுபிறவி எடுத்துள்ளார். நல்லது (ஆசீர்வாதத்துடன்). ஆசீர்வாதம் அனைவருக்கும் உள்ளது (குல்ஜார் தாதிக்கும்). ஆதலால் நன்றாக இருக்கிறார். (நிர்வயர் சகோதரர் பாபாவிற்கு நன்றி பாபா என்று கூறுகிறார். நன்றி குழந்தாய்) (டில்லியில் நடந்த பெரு விழாவின் செய்திகளை பாபாவிற்கு காண்பிக்கிறார்கள்) நல்ல ரிசல்ட் ஏற்பட்டுள்ளது.

கோலக் சகோதரருடன் தன்னை குஷியாக வைத்திருங்கள். என்ன விசயம் வந்தாலும் சரி அதனை பாபாவிடம் கொடுத்து விடுங்கள்.

ருக்மனி தாதியுடன் சரியாய் போய் விடும், அனைவருடைய அன்பும் உள்ளதல்லவா? அனைவருடைய அன்பும் இருக்கிறது. பாபாவினுடைய அன்பும் உள்ளது. அன்பு அனைத்தையும் சரியாக்கி விடும். (கடனை தீர்ப்பதற்காக வந்திருக்கின்றேன் என்று நேற்று கூறினார்) கடன் ஒன்றும் இல்லை. விசயத்தை சிறிதாக்கு பெரிதாக்காதே. அனைத்தும் சரியாகி விடும். அனைவருக்கும் அன்பு, நினைவுகள்.

வந்திருக்கும் முக்கியஸ்தர்களுடன் தற்போது நீங்கள் விருந்தினர்கள் அல்ல. வீட்டில் உள்ளவர்களோ கூறுங்கள், வீட்டில் உள்ளவர்கள்தானே கை உயர்த்துங்கள். பாபாவின் உள்ளத்தில் உள்ளீர்கள். பாபாவை உங்கள் உள்ளத்தில் இருத்தியுள்ளீர்களா? உள்ளத்திற்கு ஓய்வு அளிப்பவர் அல்லவா? ஆக அவரை உள்ளத்தில் அமரச் செய்யுங்கள். என்ன நடந்தாலும் திலாராம் (உள்ளத்திற்கு ஓய்வு அளிப்பவர்) உதவி செய்வார். அனைவரும் வந்திருக்கிறீர்கள். திலாராமினுடைய இடத்திற்கு வந்திருக்கின்றீர்கள். உள்ளத்தின் ஆசை என்னென்னவோ இங்கே வந்தவுடன் அவைகளை முடித்து விடுங்கள். குழந்தைகளை சந்தித்து கொடுத்து வங்கி உள்ளத்தில் என்னென்ன உள்ளதோ அவைகளை அழித்து விட்டுச் செல்லுங்கள். மேலும் உள்ளத்தில்

மகிழ்ச்சியை நிரப்பிக் கொண்டும் செல்லுங்கள். மகிழ்ச்சியே மகிழ்ச்சி. பாப்தாதா வாழ்த்துக்களைக் கூறிக் கொள்கிறார். வந்து விட்டீர்கள். பாப்தாதாவிற்கு மிகுந்த மகிழ்ச்சி உங்களது வீட்டை அடைந்து விட்டீர்கள். வழியைத் தெரிந்து கொண்டீர்கள். இன்னும் வந்து கொண்டே இருங்கள். தொடர்பு சம்மந்தத்தில் இருங்கள். நல்லது. நீங்கள் வந்தது நல்லதே. பாப்தாதா அன்பு நினைவுகளை கூறிக் கொள்கிறார்.

துபாயில் புதிய பவனம் கட்டடப்பட்டுள்ளது. அதனை ரிமோட் கட்டுப்பாடு மூலம் பாப்தாதா ஆரம்பித்து வைக்கிறார். (ஜோதி சகோதரி, துபாய்) சேவையின் உடனிருப்போர், நன்றாக உள்ளார்களா? அதிகரியுங்கள் அருகாமையில்தானே. ஆக அருகாமையில் என்னென்ன சக்தி இருக்கிறதோ அவை உங்களுக்கு கிடைத்து விடுகிறது. சந்தோஷத்தில் திளைத்திருங்கள். என்ன காரியம் இருக்கிறதோ, பாபா உங்களுடைய காரியத்தை நீங்களே செய்யுங்கள். பாப்தாதா உதவியாளர் ஆவார் !

ஜெய்ப்பூரிலும் புதிய ஆடிட்டோரியம் கட்டப்பட்டுள்ளது. அதனுடைய ஆரம்பத்தையும் பாப்தாதா ரிமோட் கட்டுப்பாட்டில் மூலம் செய்து வைக்கின்றார். வாழ்த்துக்கள்! நல்லது. அனைவரும் பகலில் மூழ்கிப் போய் உள்ளனர். கூடவே இருக்கிறோம், கூடவே இருப்போம். கூடவே திரும்பிச் செல்வோம். கூடவே இராஜ்யமும் செலுத்துவோம். நல்லது. ஓம் சாந்தி. ஓம் சாந்தி.

✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳

## 24.10.2013 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தற்கால சூழ்நிலைக்கு ஏற்ப மனதின் சக்தியால் சக்திவாய்ந்த ஒளிக்கதிர்களை உலகிற்கு வழங்கும் சேவை செய்யுங்கள் -தன்னுடைய உள்ளுணர்வு மூலமாக பிறருடைய உள்ளுணர்வுகளை மாற்றம் செய்யுங்கள்!

ஒவ்வொரு குழந்தையின் அன்பு பாபாவிற்கு கிடைத்துக் கொண்டிருக்கின்றது. அந்த அன்பிற்குப் பதிலாக பாப்தாதாவும் ஒவ்வொரு குழந்தைக்கும் பல மடங்கு அன்பை வழங்கிக் கொண்டிருக்கின்றார். ஒவ்வொரு குழந்தையும் அன்பில் மூழ்கியிருக்கின்றனர். பாப்தாதாவும் குழந்தைகளின் அன்பைப் பார்த்து மனதில் மீண்டும், மீண்டும் ஆஹா! என் குழந்தைகளே என்று உளப்பூர்வமாகக் கூறிக் கொண்டிருக்கின்றார். பாபாவிற்கு குழந்தைகள் இல்லாமலும், குழந்தைகளுக்கு பாபா இல்லாமலும் சூனியமாகத் தென்படுகின்றது.

இன்று ஒவ்வொரு குழந்தையின் நெற்றியிலும் பாபாவின் அன்பு கலந்திருக்கின்றது. பாபாவின் உள்ளம் சொல்கிறது. ஒவ்வொரு குழந்தையைப் பார்க்கும் பொழுதும் ஆஹா, என் குழந்தையே இன்று விசேஷமாக இரட்டை அயல் நாட்டு குழந்தைகளைச் சந்திக்கும் நாளாகும். பாப்தாதாவிற்கு இரட்டை அயல் நாட்டவரின் சேவையில் மிகவும் திருப்தி உள்ளது. பாரதத்தின் சேவையும் குறைந்தது அல்ல ஆனால் இன்றைய நாளில் பாப்தாதா அயல் நாட்டு குழந்தைகளின் சேவையை விசேஷமாகப் பார்க்கின்றார் - மிகவும் விருத்தி அடைந்துக் கொண்டே செல்கின்றது. காணாமல் போயிருந்த நல்ல குழந்தைகளும்

தந்தையின் ஆஸ்தியைப் பெற வந்து விட்டார்கள். காலம் தன்னுடைய அடையாளத்தைக் காண்பித்துக் கொண்டிருக்கின்றது ஆனால் சேவையில் முன்னேற்றம் அடைந்துக் கொண்டேயிருக் கின்றார்கள். உள்நாட்டவர்களானாலும் சரி, அபல் நாட்டவர்களானாலும் சரி! பாப்தாதா குழந்தை களின் சேவையில் மகிழ்ச்சி அடைகின்றார். ஒவ்வொரு உன்னத சேவையின் நல்ல ரிசல்ட்டைப் பார்த்து உளமாற ஆஹா, ஆஹா! என்று குழந்தைகளை பெருமை பாடுகின்றார். இரட்டை அயல் நாட்டவர்கள் நாலா புறமும் செய்திகளைத்தருவதில், தந்தையின் அறிமுகத்தைத் தருவதில் குறைந்தவர்கள் அல்ல. பாரதத்தின் குழந்தைகளும் சேவையில் குறைந்தவர்கள் அல்ல. பாப்தாதா இருவரின் சேவையையும் பார்த்து மனம் மகிழ்க்கின்றார். அத்துடன் மனோ நிலையில் நம்பர்வாராக இருக்கின்றார்கள். இப்பொழுது பாப்தாதாவின் விருப்பம் என்னவென்றால், தன் சுய நிலையில் மற்றும் சேவையில் தீவிர நிலை அடைய வேண்டும். பாப்தாதாவின் எதிர்பார்ப்பு இது தான். ஒவ்வொரு குழந்தையும் எப்பொழுதும் உறுதியாக, மேலும் மேலும் முன்னேறிக் கொண்டேயிருக்க வேண்டும். உலகின் சூழ்நிலைக்கு ஏற்ப இப்பொழுது குழந்தைகள் பெரும்பாலும் சக்தி வாய்ந்த ஒளிக்கதிர்களால் வாயுமண்டலத்தை மாற்றம் செய்வதற்கான மனோ சக்தியை பெறுவது மிக அவசியமாகும். மனதின் சக்தியை மேலும் சக்திவாய்ந்ததாக மாற்றி அந்த மனோ சக்தியால் இன்றைய சூழ்நிலையை மாற்றி அமைப்பதில் குழந்தைகள் இன்னும் அதிகமாகக் கவனம் செலுத்துவது மிக அவசியமாகும். இப்போதெல்லாம் சூழ்நிலைகளுக்கு ஏற்ப கேட்பது மற்றும் சொல்வதற்கான சக்திக்குப் பதிலாக தன்னுடைய உள்ளுணர்வு மூலமாக பிறரது உள்ளுணர்வுகளை மாற்றம் செய்வது மிக அவசியமாகும். பாப்தாதா பார்க்கின்றார் குழந்தைகள் உள்ளுணர்வுகளை மாற்றுகின்ற சக்தியை அதிகமாக சேவையில் ஈடுபடுத்த வேண்டும்.

இன்று விசேஷமாக இரட்டை அயல்நாட்டவர்களுக்கான நாளாகும். பாப்தாதா விசேஷமாக இரட்டை அயல் நாட்டுக் குழந்தைகளுக்கு பல மடங்கு சபாஷ் தெரிவிக்கின்றார். ஏன்? தேசத்து (பாரதம்) குழந்தைகளும் குறைந்தவர்கள் அல்ல ஆனால் வெளி நாடுகளின் சூழ் நிலைக்கு ஏற்ப சேவையில் மிக நன்றாக வளர்ச்சி அடைந்து

கொண்டிருக்கின்றனர். எனவே இன்று விசேஷமாக அவர்களுக்கு உரிய நாளாகும். பாப்தாதாவும் உள்நாடு மற்றும் அயல் நாடுகளில் வலம் வரும் போது பார்த்தது என்னவென்றால், பெரும்பாலும் சேவையில் நன்றாகக் கவனம் வைக்கின்றனர். பாரதமும் குறைந்தது அல்ல. பாரதத்தைச் சார்ந்தவர்களும் விதவிதமான நிகழ்ச்சிகள் செய்வதில், விதவிதமான ஊக்கம் உற்சாகத்திற்கான சாதனைகளை அமைத்துக் கொண்டிருக்கின்றார்கள். பாப்தாதாவிற்கு இரு புறமும் சேவையைப் பார்த்து மகிழ்ச்சி தான் ஆனால் இப்போது சூழ்நிலைக்கு ஏற்ப மனோசக்தி மூலமாக வாயுமண்டலத்தை மாற்றுவது தான் மிக அவசியமாகும். மற்றபடி பாப்தாதாவிற்கு குழந்தைகளின் ஊக்கத்தைப் பார்த்து மகிழ்ச்சிதான்!

நீங்கள் அனைவரும் கூட பாரதத்தினர் ஆனாலும் சரி அயல் நாட்டைச் சார்ந்தவர்களாயினும் சரி, ஒவ்வொரு குழந்தையும் தன்னுடைய சுய முன்னேற்றம் மற்றும் சேவையின் முன்னேற்றம் கண்டு மகிழ்ச்சிதானே அடைகின்றீர்கள். இப்போது மனோ சக்தி மூலமாக சூழ்நிலைகளை மாற்றம் செய்ய வேண்டும். சூழ்நிலைகளை மாற்றம் செய்வது தான் மிக அவசியம் ஆகும். இது கேட்பதாலோ, சொல்வதாலோ ஏற்படாது ஆனால் தன்னுடைய மனதின் சுப காம்னா (நல்விருப்பங்கள்) தான் மனிதர்களின் உள்ளுணர்வை, பார்வையை, செயலை மாற்றம் செய்ய முடியும். எனவே இன்று பாப்தாதா ஒவ்வொரு குழந்தைகளுக்கும் உள்நாடு மற்றும் அயல் நாட்டின் அனைத்து குழந்தைளின் சேவைகளைப் பார்த்து வளர்ச்சிக்கான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றார். நல்லது.

அயல் நாட்டு குழந்தைகளும் தங்களுக்குள் நல்லமுறையில் குழுவாக இருந்து சேவைகளைப் பரிமாற்றிக் கொண்டு நன்றாக முன்னேறிக் கொண்டிருக்கின்றார்கள். மதுபனில் நல்ல வாய்ப்புகிடைக்கின்றது. தங்களுக்குள் நல்லதொரு சந்திப்பை ஏற்படுத்திக் கொள்வதற்காக, ஆன்மீக உரையாடல் செய்வதற்காக, சேவைக்கான திட்டங்கள் போடுவதற்காக! பாப்தாதா குழந்தைகள் எப்படி நல்ல முறையில் தங்களுக்குள் கூட்டாக இருந்து சேவையில் முன்னேறிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதனைத்தையும் பார்க்கின்றார். பாப்தாதா வாழ்த்துக்களும் தெரிவிக்கின்றார். பாரதமும் குறைந்தது அல்ல.

பாப்தாதா இருவரையும் பார்க்கின்றார். சேவைக்கான ஊக்கம் உற்சாகம் நன்றாகவே உள்ளது. சேவைக்கான ரிசல்ட்டும் நன்றாக உள்ளது. பாப்தாதா விற்கு மகழ்ச்சி தான் இப்போது சுய இராஜ்ய அதிகாரி ஆவதற்கான விதி மற்றும் அந்த விதியினை நடைமுறையில் அனுபவம் செய்வது, இதிலும் சிறிது கவனம் தர வேண்டும். மனதின்சக்தி மூலமாக மாற்றத்தைக் கொண்டு வருவது மற்றும் மனதில் உள்ளுணர்வுகளை மாற்றம் செய்வது மிக அவசியமாகும். இப்போது நாலா புறமும் எங்கு பார்த்தாலும் இழிநிலைகளின் (குணக்கேடு) விஷயங்களே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையை மனோ சக்தி மூலமாக மாற்றம் செய்து அனைவரது மனதிலும் பரமாத்மாவின் நினைவிற்கான ஊக்கம் உற்சாகத்தை உருவாக்க வேண்டும். நல்லது. இப்போது என்ன செய்ய வேண்டும்?

யு.கே., ஐரோப்பா, மத்திய கிழக்கு நாடுகள்: ஒவ்வொரு ரத்தினமும் மகான் மற்றும் மகாவீர். பாப்தாதா ஒவ்வொரு மகாவீர் குழந்தைக்கும் விசேஷமாக உளமார்ந்த அன்பு நினைவுகளை வழங்குகின்றார். நல்லது உங்களது குழுவின் வளர்ச்சி அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. அதற்கு வாழ்த்துக்கள்! நல்லது.

ஆஸ்திரேலியா, ஆசியா: நல்ல ஒற்றுமையான குழு பாப்தாதா ஒவ்வொரு குழந்தைகயையும் பார்த்து ஒவ்வொரு குழந்தைகளின் குணத்தைப் பார்த்து, உள்ளத்தில் பாடிக் கொண்டிருக்கின்றார் - ஆஹா குழந்தைகளே ஆஹார்.

அமெரிக்கா, கரிபியன் நாடுகள்: பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் பார்த்து, அவர்களின் பாக்கியத்தைப் பார்த்து ஆஹா! ஆஹா குழந்தைகளின் பாக்கியமே பாக்கியம்! என்று மகிழ்ச்சி அடைகின்றார். ஒவ்வொருவரின் மகிமையும் ஒருவர் மற்றொருவரை விட உயர்வாகவே இருக்கின்றது. நல்ல குழுவாக சேர்ந்து வந்திருக்கின்றார்கள். எவ்வளவு முயற்சிகள் செய்து வந்துள்ளார்களோ, எவ்வளவு பேர் வந்துள்ளார்களோ உள்நாடு மற்றும் அயல் நாட்டு குழந்தைகளுக்கு பாப்தாதா பலகோடி மடங்கு வாழ்த்துக்களை வழங்கிக் கொண்டிருக்கின்றார்.

ஆப்ரிக்கா, மொரிஷீயஸ்: கை அசையுங்கள். சதா தானும் முன்னேறி பிறரையும் முன்னேற்றம் செய்யும் ஆத்மாக்கள்! பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் நிகழ்காலம் மற்றும் வருங்காலத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்துக் கொண்டு இருக்கின்றார். எப்போதும் முன்னேறிக் கொண்டேயிருங்கள். யாராவது சிறிதேனும் பலவீனம் அடைந்தால், அவர்களுக்கு தன்னுடைய சகயோகத்தின் மூலமாக அல்லது பெரியவர்களுடைய உதவியை பெறச் செய்யுங்கள். பரோ உபகாரியாக (மற்றவர்களுக்கு உதவி செய்வது) மாறி தனது உபகாரம் (உதவி) மற்றும் பிறருடைய உபகாரத்தைப் பெற்று தருவது இரண்டிலுமே விசேஷமான கவனம் வைத்து மென் மேலும் முன்னேறிக் கொண்டிருக்கின்றீர்கள், இதை சோதனை செய்து முன்னேறிக் கொண்டேயிருங்கள், மேலும் முன்னேறச் செய்து கொண்டேயிருங்கள். மற்றபடி பாப்தாதா அயல் நாடுகளின் பல்வேறு குழுக்களின் அனைத்துக் குழந்தைகளையும் பார்த்து மகிழ்ச்சி அடைகின்றார். மேலும் வளர்ச்சி அடைந்து விதிப்பூர்வமாக பறந்து கொண்டிருக்கின்றார்கள், பறந்து கொண்டேயிருப்பீர்கள்.

ரஷ்யா: ஆசிரியர்கள் இவர்களுக்காக கை தட்டுங்கள். ஆசிரியர்கள் என்றாலே தனது மூகத்தின் மூலமாக பாப்தாதாவை வெளிப்படுத்துபவர்கள். அவர்களது கண்கள் மூலமாக ஒவ்வொரு சொல்லின் மூலமாக மேரா பாபா, பியாரா பாபா (எனது பாபா! அன்பான பாபா) இதனை அனுபவம் செய்ய வேண்டும். ஆசிரியர்களைப் பார்க்க கூடாது ஆனால் அவர்களுக்குள் பாப்தாதாவைப் பார்க்க வேண்டும். இப்போதும் அப்படித்தான் இருக்கிறார்கள். மேலும் பாப்தாதா ஒவ்வொரு ஆசிரியருக்கும் சொல்வது என்னவென்றால், மேலும் முன்னேறுங்கள் பிறரையும் முன்னேற்றுங்கள். பாப்சமான் மாறிக் கொண்டே செல்லுங்கள். ஆஹா ஆசிரியர்களே ஆஹா! உங்களுடைய முயற்சிக்கான பலன் தென்படுகிறது. மிகவும் நல்லது. இப்போது ஒவ்வொரு வரிடமும் இதையே முயற்சியை செய்யுங்கள். ஒவ்வொருவருடைய முகத்திலும் எதிர்காலம் தென்பட வேண்டும். ஆசை தீபம் தென்பட வேண்டும். இப்போது நமது இராஜ்யம் வந்தே வந்து விட்டது. இந்த ஊக்கம் உற்சாகம் ஒவ்வொருவரின் முகத்திலும் தென்பட வேண்டும். மிக நல்லது.

முதல் முறையாக வந்துள்ள அயல் நாட்டு குழந்தைகள்: தன் வீட்டிற்கு வந்துள்ளீர்கள். நல்லது. பாப்தாதாவிற்கு மகிழ்ச்சி. காணாமல் போன குழந்தைகள் வந்து விட்டீர்கள். தந்தையிடம் தனது ஆஸ்தியைப் பெற தனது வீட்டிற்கு வந்துள்ளீர்கள். அனைவரது சார்பாகவும், பரிவாரத்தின் சார்பாகவும் உங்கள் அனைவருக்கும் லட்சம் மடங்கு வாழ்த்துக்கள் வாழ்த்துக்கள் ஆசிரியர்களுக்கு ஆசிரியர் யார்? பாப்தாதா இருக்கின்றார். ஆனாலும் பாப்தாதாவுடன் நீங்களும் (தாதி ஜானகிஜி) துணையாக இருக்கின்றீர்கள். நன்கு கவனம் தருகின்றீர்கள், உள்நாட்டு ஆசிரியர்கள் மற்றும் அயல் நாட்டு அசிரியர்கள் மீதும் கவனம் வைத்துள்ளீர்கள். அனைத்து ஆசிரியர்களுக்கும் இன்று பாப்தாதா மனமார்ந்த அன்பு நினைவுகளை வழங்குகின்றார். நல்லது.

இன்று அயல் நாட்டவரிகளின் நாளாகும். பாப்தாதாவிற்கும் மகழ்ச்சி தான். சதா மகிழ்ச்சியாக தான் இருக்கின்றது. ஆனாலும் மகிழ்ச்சியிலும் மகிழ்ச்சி. நீங்கள் பாரத வாசி குழந்தைகளும் அயல் நாட்டவரின் சேவையைப் பார்த்து மகிழ்ச்சி அடைகின்றீர்கள் அல்லவா மகிழ்ச்சிதானே! பாப்தாதாவிற்கு மகிழ்ச்சி உலகின் தந்தை அல்லவா பாரதத்திற்கு மட்டும் தந்தை அல்ல. முழு உலகத்திற்கும் தந்தை, விஷ்வ பிதா உலகத் தந்தையை உலக மக்களுக்கு பிரத்யக்ஷம் செய்வதில் நிமித்தமாக இந்த அனைத்து அயல் நாட்டு குழந்தைகளும் விதவிதமாக இருக்கின்றார்கள். எனவே இன்று பாப்தாதா ஒவ்வொரு குழந்தைகளுக்கும் வாழ்த்துக்களை வழங்கிக் கொண்டிருக்கின்றார். ஆஹா சேவாதாரி குழந்தைகளே! ஆஹா! நல்லது. (பாப்தாதா திருஷ்டி கொடுத்தப்படியே சென்று விட்டார். மீண்டும் பாபாவை அழைக்கின்றார்கள்)

**தாதிகளிடம்:** மட்டற்ற மகிழ்ச்சியில் கண்கள் பூரித்தது. (ஜானகி தாதி சொல்கின்றார்) பாபா நீங்கள் இவ்வளவு குஷி கொடுத்தீர்கள். உங்களுக்கு நான் என்ன தருவது? நீங்கள் எல்லாமே கொடுத்து விட்டீர்கள், மீதம் எதுவும் இல்லை.

**அயல் நாட்டு சகோதரிகளிடம்:** நல்ல மலர் தோட்டத்தை அமைத்துள்ளீர்கள். பாப்தாதாவிற்கு நன்கு பிடித்திருக்கிறது. நல்ல

ஊக்கம் உற்சாகத்தோடு செயல் படுத்தி சென்றுக் கொண்டிருக்கின்றீர்கள். உங்கள் அனைவருடைய முயற்சிக்கான பலனும் நன்றாக கிடைத்துக் கொண்டிருக் கின்றது. அனைவருக்கும் விசேஷமான அன்பு நினைவுகள். சேவைக்கான வாழ்த்துக்கள். சதா எப்போழுதும் முன்னேறிக் கொண்டேயிருங்கள். முன்னேற்றிக் கொண்டேயிருங்கள்.

கமல்மணி தாதியிடம்: நலமா இப்போது எழுந்து விடுங்கள். இப்போது படுக்கைக்கு செல்ல வேண்டாம். அமர்ந்தபடியே சேவை செய்யுங்கள்.

ருக்மணி தாதியிடம்: நலமா! முடிந்த வரையில் உடல் நலத்தை பேணிச் செல்லுங்கள். அதிமாக வேலை வாங்க வேண்டாம். இடையிடையே ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் மீதம் உள்ள சில காலத்திற்கு நீங்கள் சேவை செய்ய வேண்டும். ஆரோக்கியத்தை பார்த்துக் கொள்ளுங்கள் சேவையும் செய்ய வேண்டும். நன்றாகப்பார்த்துக் கொள்ளுங்கள்.

மொரிஷீயஸ் சந்திரா சகோதரியிடம்: தனது பங்கை நன்றாகச் செய்துள்ளீர்கள். நலம்தானா! தினமும் அமிர்தவேளையில் எழுந்து ஆஹா பாபா ஆஹா என்னுடைய பாபா! என்று சொல்லிக் கொண்டேயிருங்கள். உடலில் சக்தி உள்ளவரை அமர்ந்த நிலையில் இருந்துக் கொண்டே சேவை செய்யுங்கள். வகுப்பு எடுக்க வேண்டாம் ஆனால் சுய சேவை செய்யுங்கள். நிர்விக்னமாக இருங்கள்.

மோகினி சகோதரியிடம்: இன்னும் வயதிருக்கிறது. எனவே நன்றாக இருப்பீர்கள்.

சார்லி சகோதரர்: நன்கு சேவை செய்கின்றீர்கள். (காயத்திரி சகோதரி ஆண்டி மற்றும் அவரது பரிவாரத்தின் நினைவுகளை கூறினார்) பாப்தாதாவினுடைய அன்பும் அவர்களுக்கு வழங்கப்பட்டது. நல்லது. எவ்வளவு சக்தியிருக்கிறதோ அந்தளவிற்கு தன்னை நடத்தி செல்கின்றீர்கள். சக்தி உள்ள மட்டிலும் மனதின் சேவையும் நன்றாக செய்து கொண்டிருக்கிறார்கள். சேவையில்லாமல் இருக்க மாட்டடீர்கள். நன்றாக உள்ளீர்கள். நல்லது.

தீபாவளி நிமித்தமாக பாப்தாதா அனைவருக்கும் வாழ்த்துக்களை வழங்குகின்றார்! உலகின் நாலா புறமும் இருக்கின்ற இனிமையிலும் இனிமையான தேடிக் கண்டுபிடிக்கப் பட்ட குழந்தைகளுக்கு அன்பு நினைவுகளும் இரவு வணக்கமும்! வரயிருக்கின்ற தீபாவளி, நீங்களே சைத்தன்ய தீபங்கள் தான். எனவே தீபாவளியை மிளிரச் செய்கின்ற சுடர்விடும் தீபங்களாகிய உங்களுக்கு மிகமிக அதிகமான வாழ்த்துக்கள் நாலா புறம் உள்ள குழந்கைளுக்கு, உள் நாடு. மற்றும் அயல் நாட்டு ஒவ்வொரு குழந்தைக்கும் பாப்தாதா தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றார். ஓ.கே. ஓ.கே. சதா ஒ.கே. என்ன கவலை. கவலை வந்தால் பாபாவிற்குக் கொடுத்து விடுங்கள். சதா ஓ.கே. அனைவரது லட்சியமும் இது தான்! தீபாவளியின் தீபங்களாகிய நான் சதா சுடர்விட்டு பிரகாசித்துக் கொண்டிருக்கும், பிறகு தனது இராஜ்யத்திலும் சென்று தீபாவளி கொண்டாடுவோம். உங்களுடைய இராஜ்யம் நினைவிருக்கிறதா? வந்தே வந்து விட்டது.

(இந்த தீபாவளிக்கும் அங்கே உள்ள தீபாவளிக்கும் வேறுபாடு என்ன இருக்கும்?) அங்குள்ள அலங்காரங்கள் முற்றிலும் தனிப்பட்டதாக மிகவும், அழகுள்ளதாக இருக்கும். இங்கே உள்ளத்தின் அன்பும் இருக்கின்றது, அலங்காரமும் நன்றாக இருக்கின்றது ஆனால் அங்கே எல்லோருமே குஷி குஷியான தீபமாக சுடர்விட்டுப் பிரகாசிப்பார்கள். ஆனந்தத்தில் இருப்பார்கள். ஆனந்தமான இராஜ்யம் அது. இங்கு வலுக்கட்டாயமாக தீபம் ஏற்றுகின்றார்கள். (அங்கே தீபாவளி கொண்டாட உங்களை அழைக்கின்றோம்) பார்க்கலாம். பாபா கொண்டாட மாட்டார். தூரத்தில் இருப்பார். நீங்கள் தீபம் ஏற்றுவீர்கள் பாபா பார்ப்பார். (பாப்தாதாவும் அங்கு தீபாவளி கொண்டாடினால் மிக நன்றாக இருக்கும்). அங்கு குழந்தைகளின் நடிப்பு தான் நல்லது.

நாலா புறமும் உள்ள அனைத்து இனிமையிலும் இனிமையான தேடிக்கண்டு எடுக்கப்பட்ட குழந்தைகளுக்கு அன்பு நினைவுகளும் தீபாவளி வாழ்த்துக்களும்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 15.11.2013 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# எந்தவொரு விஷயம் (சோதனை) வந்தாலும் அதை பாபாவிடம் கொடுத்து விட்டு புன்சிரிப்புடன் இருங்கள்!

அனைத்து அதிர்ஷ்டசாலி குழந்தைகளையும் பார்த்து பாப்தாதா மிகுந்த மகிழ்ச்சி அடைகிறார். ஆஹா! எனது அதிர்ஷ்டமுள்ள குஷி நிறைந்த குழந்தைகளே! ஆஹா! அனைவரது உள்ளத்திலும் பாப்தாதா நிறைந்துள்ளார். ஒவ்வொரு குழந்தையின் முகத்திலிருந்தும் நறுமணம் கமழ்கிறது. சதா ஒவ்வொரு குழந்தையும் குஷியோடும். செழிப்போடும் நீடுழி வாழும் ஆத்மாக்கள். எப்பொழுதும் ஒவ்வொரு குழந்தையும் குஷி நிறைந்துள்ள ஆத்மாக்கள். பாப்தாதா ஒவ்வொரு குழந்தையினுடைய புன்சிரிப்பான முகத்தைப் பார்த்து அடைகிறார். எப்போதுமே இதேபோல புன்சிரிப்புடன் குஷியால் நடனமாடிக் கொண்டே முன்னேறிச் செல்லுங்கள், மற்றவர்களையும் முனனேற்றமடையச் செய்யுங்கள். ஒவ்வொரு குழந்தையின் நெற்றியில் பிரகாசிக்கும் நட்சத்திரத்தைப் பாப்தாதா பார்க்கின்றார். நல்லது.

இன்று அனைத்து குழந்தைகளுடைய நினைவின் ஈர்ப்பு பாப்தாதாவிடம் வந்து கொண்டிருந்தது. சதா மேலும் அதிக குஷியுடன் இருங்கள். எந்வொரு விசயம் வந்தாலும் அதை பாபாவிடம் கொடுத்து விடுங்கள். மற்றும் புன்முறுவலுடன் இருங்கள். நல்லது. இன்று உடல் நிலை காரணமிருப்பினும் குழந்தைகளின் அழைப்பிற்கிணங்க பாப்தாதா அனைவரோடும் சந்திப்பை கொண்டாடுகிறார். நல்லது. உடல் நிலை காரணத்தால் இன்று மிகச் சிறிய சந்திப்பு நடந்தது கொண்டிருக்கிறது.

நாலா பக்கங்களிலுமுள்ள குழந்தைகள் கேட்டுக் கொண்டு இருக்கின்றார்கள். கண்களால் சந்திப்பை கொண்டாடுகின்றனர். நல்லது. பாப்தாதாவிற்கு குழந்தைகளோடு சந்திப்பதைப் பார்த்து மிகுந்த குஷி ஏற்படுகிறது. இதை ஒவ்வொரு குழந்தையும் அறிய முடிகிறது. நல்லது. இன்றைய குருப்பில் விஷேசமாக வந்துள்ளவர்கள் கை உயர்த்துங்கள்.. (கர்நாடக மண்டலத்திலிருந்து சேவாதாரிகளையும் சேர்த்து 15-ஆயிரம் சகோதர சகோதரிகள் வந்துள்ளனர்) வந்துள்ள அனைவருக்கும் வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்! நல்லது.

நாலா புறங்களிலுமுள்ள சாதக குழந்தைகள், கேட்டுக் கொண்டிருக் கின்றனரோ அவர்கள் அனைவருககும் பாப்தாதாவின் அன்பு நினைவைக் கூறுகின்றார். உங்கள் எல்லோருக்கும் நேரடியாகவே அன்பு நினைவு கிடைக்கின்றது ஆனால் நாலா புறங்களிலுமுள்ள குழந்தைகள் மிகுந்த சிநேகம் நிறைந்த ஆசையுடன் அமர்ந்துள்ளனர். நம்பிக்கை வைத்துள்ள அந்த குழந்தைகளுக்கு அவர்கள் எப்படிப் பார்க்கின்றனரோ அவ்வாறே பாப்தாதாவும் கூட பார்க்கின்றார். அனைவரோடும் பாப்தாதா தன் கண்களால் சந்திப்பைக் கொண்டாடுகிறார். நல்லது. நிமித்தமாகியுள்ள பாண்டவர்கள் ஆனாலும், சக்திகள் ஆனாலும் அனைவரும் சகயோகம் மற்றும் சிநேகத்துடன் தத்தமது காரியங்களை செய்து வருகின்றனர் மேலும் செய்து கொண்டேயிருப்பார்கள்.

(மோகினி சகோதிரி, முன்னி சகோதரி 7-நாட்கள் துபாய் செல்கின்றனர்) ஏற்பாடாகியுள்ளது என்றால் செல்லத்தான் வேண்டும். (தங்களுடைய உதவி தேவை) உதவி செய்வதற்காக கட்டுப்பட்டுள்ளேன்.

(தாதி ஜானகிஜி வெளிநாட்டு சகோதரிகளுடைய நினைவுகளைக் கூறுகிறார். யாரெல்லாம் நினைவை அனுப்பியுள்ளார்களோ அவர்கள் அனைவருக்கும் பாப்தாதா திருஷ்டி கொடுத்துக் கொண்டே அன்பு நினைவும் அளிக்கின்றார்.

✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳

# 30.11.2013 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# வீடியோ கான்ஃபரன்ஸ்'ங்

குல்ஸார் தாதி (ரதம்) உடல் பலஹீனத்தால் மும்பையிலிருந்து மதுபன் வர இயலவில்லை. ஆதலால் வீடியோ கான்ஃபரன்ஸ்'ங் மூலம் மிலன் நடைபெற்றது!

உயிருக்கு உயிரான அவ்யத்த பாப்தாதாவின் மிகவும் சிநேகமான சதா அவ்யக்த சந்திப்பிற்காக ஏங்கிக் கொண்டிருக்கும் ஆத்மாக்கள் பாப்தாதாவின் அன்பில் மூழ்கி இருக்கக் கூடிய சங்கமயுகத்தின் மிகவும் சிரேஷ்டமான பிராமண குலத்தின் பாக்கியவான் ஆத்மாக்களுக்கு ஈஸ்வரிய சிநேகம் நிறைந்த இளிமையான அன்பு நினைவுகளை ஏற்றுக கொள்வீர்களாக.

அடுத்து செய்தி யாதெனில் இன்று 30, நவம்பர். 2013 அவ்யக்த சந்திப்பிற்காக உத்திர பிரதேச மண்டலத்தில் சேவை முறையில் பாரதம் மற்றும் வெளிநாடுகளிலிருந்து சுமார் 15000-சகோதர சகோதரிகள் நமது சாந்தி வனத்தில் வந்தடைந்துள்ளனர். ஒவ்வொரு கல்பத்திலும் நாடகத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ளபடி இன்று அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு சாகாரத்தில் தாதி குல்ஜார் அவர்களின் மூலம் நடக்கவிருந்தது ஆனால் மருத்துவ அறுவை சிகிச்சைக்குப் பிறகு தாதிஜி பலவீனமாக இருந்தபடியால், மும்பையிலிருந்து அபுவிற்கு வர முடியவில்லை.

இன்று அனைவரும் அமிர்தவேளையிலிருந்து பாப்தாதாவின் நினைவில் மூழ்கிப் போயிருந்தனர். மிகவும் நல்ல, அமைதியான அவ்யக்த சூழ்நிலை இருந்தது. மாலை 4-மணியிலிருந்து டைமண்ட் ஹாலில் அனைவரும் அவ்யக்த ஸ்திதியின் மூலம் அவ்யக்தமாக சந்திப்பின் அனுபவத்தைப் பெற வந்தடைந்தனர். முதலில் சூரஜ் சகோதரர் விசேஷமாக யோக வர்ணனையுடன் அவ்யக்த

அனுபவங்களுக்கான பிரேரணைகளை தந்தார். பிறகு 6-மணியிலிருந்து 7-மணி வரை மிகவும் சக்திசாலியான யோகா நடைபெற்றது. பிறகு அவ்யக்த பாப்தாதாவின் ரிவைஸ் முரளியை வீடியோ காட்சி மூலம் அனைவரும் கண்டு களித்தனர். 7-மணிக்கு அனைத்து தாதிமார்களும், முக்கிய சகோதர சகோதரிகளும் மேடைக்கு வந்தனர். அதன் பிறகு மும்பையில் குல்ஜார் தாதி பாப்தாதாவிற்கு 'போக்' ஸ்வீகாரம் செய்வித்தார். (வீடியோ கான்ஃபரன்ஸ் மூலமாக அனைவரும் காட்சியினைக் கண்டனர்) பிறகு அனைவருக்காகவும் குல்ஜார் தாதி பாப்தாதாவின் செய்தியைக் கூறினார்:

ஓம் சாந்தி, உங்கள் அனைவரது அன்பு நினைவுகளை எடுத்துக் கொண்டு வதனத்திற்கு பாப்தாதாவின் அருகில் சென்றேன். பாபா தன் அறையில் இருக்கையில் அமர்ந்திருந்தார். மேலும் பாபாவின் அருகில் சென்ற போது பாப்தாதா புன்முறுவலுடன் சந்தித்தார். மேலும் கூறினார், எனது உள்ளத்தின் மாலையை, இன்று யாருடைய நினைவில் கொண்டு வந்துள்ளாய்? நான் கூறினேன், பாபா இன்று உங்களது செல்லமான உத்திர பிரதேச குழந்தைகள் உங்களை சந்திப்பதாற்காக வந்துள்ளனர். பாப்தாதா அவரது அறையில் இருந்தபோதும் இல்லாத மாதிரி இருந்தது. பாபா அனைத்து குழந்தைகளுக்கும் மிக மிக இனிமையிலும் இனிமையாள திருஷ்டி கொடுத்து சந்தித்துக் கொண்டிருந்தார். மேலும் குழந்தைகளும் மிக மிக அன்போடு சந்தித்துக் கொண்டிருந்தனர். மேலும் பாபா கூறினார், அனைத்து குழந்தைகளும் உள்ளத்து மாலைகளாவீர்கள். ஒவ்வொருக்கும் பாபா திருஷ்டி வழங்கிய போது யாரையெல்லாம் அவ்வாறு ஒவ்வொருவராகப் பார்த்துக் கொண்டிருந்தாரோ அவர்களிடமெல்லாம் பாபா ஏதோ பேசியது போல் இருந்தது. அதை என்னால் கேட்க முடியவில்லை ஆனால் பாபாவினுடைய முகம் மற்றும் நடவடிக்கை இரண்டும் ஒவ்வொருவரையும் கட்டி அணைத்து சேர்த்துக் கொள்வது போல் இருந்தது. பாபா கூறினார், குழந்தைகளுக்கு பாபா மீது அன்பு உள்ளது மேலும் பாபா மீது குழந்தைகள் மேல் அன்பு உள்ளது. இதுவும் சங்கமயுகத்தின் ஒரு விசேஷ பாக்கியமாகும்.

பாபா ஒவ்வொரு குழந்தையையும் பார்த்து, அது கடைசியாக இருந்தாலும் முதலில் இருந்தாலும் சரி ஆனால் பாப்தாதா ஒவ்வொரு

குழந்தையையும் தனதாகக் கொண்டு மிக அன்போடு பார்த்தார். கை மூலம் வருடி அன்பை வெளிப்படுத்தினார். பாபா இவ்வாறு ஒவ்வொருவரையும் திருஷ்டி முலும் அன்பு செலுத்தினார். அது நேருக்கு நேர் அள்பு செய்வது போலிருந்தது; மேலும் அனைவருக்கும் பாபா தனக்காகவே நேருக்கு நேர் வந்து சந்திப்பது போல் அனுபயம் ஏற்பட்டது. அனைவரது கண்களிலும் அன்பு கண்ணீர் நிரம்பி இருந்தது. கீழே விழவில்லை ஆனால் நிரம்பியிருந்தது. நானும் பார்த்துக் கொண்டிருந்தேன் பாபா எவ்வாறு ஒவ்வொரு குழத்தையையும் சந்தித்துக் கொண்டிருந்தார் என்று.

அதன் பிறகு பாபா பேசினார். அதில் பார் குழந்தாய் சங்கமயுகத்தில் பாபாவினுடைய பாகம் நடந்து கொண்டிருக்கிறது ஆனால் அதை உணர்வது பாபாவின் குழந்தைகளாகிய நீங்கள் ஆவீர்கள். மேலும், ஒவ்வொருவருக்கும் பாபா நம்பர் பிரகாரம் வரிசைக்கிரமமாக அம்மாதிரியான பார்வை ஒவ்வொருவரோடும் பேசுவது போன்று பார்த்துக் கொண்டிருந்தார். நான் பாபாவிடம் கூறினேன், பாபா! நீங்களோ பேசிக் கொண்டிருக்கிறீர்கள் ஆனால் நாங்கள் கேட்பதில்லை. ஆக பாபா கூறினார். வந்திருக்கக் கூடிய இந்த குழந்தைகள் அவர்களின் உள்ளத்தின் வார்த்தைகளை, மனதின் ஆசைகளை பாபா அறிவார். ஒவ்வொரு குழந்தையையும் பார், பாபாவை எவ்வளவு ஆர்வத்தோடும், தாகத்தோடும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். பாபா கூறினார், டிராமாவில் இது கூட நிர்ணயமாகியுள்ளது ஆனால் ஒவ்வொரு குழந்தையினுடைய உள்ளத்தின் விசேஷங்களை பாபா அறிவார். மேலும் வேறு எவரும் அறிய முடியாது. ஒவ்வொரு குழந்தையின் உள்ளத்திலும் தற்போது என்ன ஓடிக் கொண்டிருக்கிறது என்பதை பாபா அறிவார். ஒவ்வொரு குழந்தைக்கும் பாபா மீது எவ்வளவு நெருக்கமான அன்பு உள்ளது. மேலும் பாபாவினுடைய அன்போ இருக்கவே செய்கிறது என்பதை பார்க்கும்போது, பாபாவும் குஷி அடைகிறார். பாபாவிற்கு அன்பு இல்லையென்றால் உங்களை எங்கிருந்து தேடிக் கண்டு பிடித்தார். சிலர் வெளிநாட்டிலிருந்து வந்துள்ளனர் சிலர் பாரதத்தின் பல பாகங்களிலிருந்து வந்துள்ளனர். அனைவரையும் பாபா தேடிக் கண்டுள்ளார் அல்லவா -தொலைந்து போன தனது குழந்தைகளைத் தேடிக் கண்டுபிடித்து தன் பக்கம் அழைத்துக் கொண்டார். ஆக எவ்வளவு பாபாவின் அன்பு உள்ளதல்லவா! இவ்வாறு

கூறி பாபா திருஷ்டி வழங்கிக் கொண்டே இருந்தார். அனைவரும் கேட்டுக் கொண்டிருந்தபடியே அன்பில் மூழ்கிப் போயிருந்தனர். அதன் பிறகு பாபா கூறினார், குழந்தாய்! நான் வந்திக்கக் கூடிய குழுவின் ஒவ்வொரு குழந்தைக்கும் (உபி.) திருஷ்டியும் வழங்கினேன். தேவதை ஆகக் கூடிய குழந்தைகளே என்று கூறி அன்பு நினைவுகளையும் வழங்கினேன் எப்படி குழந்தைகள் பாபாவை வீட்டு விடுவதில்லையோ அப்படி பாபாவும் குழந்தைகளை விட்டு விடுவதில்லை. பாபா மேலும் பார்த்தார், வந்திருக்கக் கூடிய குழந்தைகள் அவர்களுடைய உள்ளத்தில் இரண்டு விஷயங்கள் இருந்து கொண்டிருக்கிறது. ஒற்று - பாபா கிடைத்து விட்டார். பாபா கிடைத்து விட்டார் என்று அன்பு பெருகுகிறது ஏனெனில் காட்சியைப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். மேலும் இரண்டாவது விஷயம், நாம் வந்துள்ளோம் என்பதை புரியவும் செய்கின்றனர். பாபா எங்கிருக்கிறார், நான் எங்கிருக்கிறேன் என்பதையும் அறிகின்றனர் ஆனால் ஒவ்வொருவரின் அன்பும் பாபாவின் உள்ளத்தை வந்து சேர்ந்துள்ளது. பிறகு பாபா எனக்கு கூறினார். குழந்தாய் தற்போது நேரமாகி விட்டது எனவே திரும்பச் செல்லத்தான் வேண்டும்.

பிறகு பாபா தனது ஒவ்வொரு செல்லமான குழந்தையும் பட்டியில் வந்திருப்பதாக கூறினார். எனவே ஒவ்வொருவருக்கும் பட்டியின் திலகத்தை இடுகிறார். ஆக பாபா திலகத்தை கையில் ஏந்தி நின்று கொண்டு ஒவ்வொருவருடைய நெற்றியிலும் திலகமிடுகின்றார். உங்களது பட்டி ஆரம்பமாகி விட்டது என்றார். பிறகு யாரெல்லாம் புதிதாக வந்துள்ளார்களோ அவர்களுக்கும் விசேஷ அன்பை தெரிவித்தார். இன்று யார் புதிதாக வந்துள்ளார்கள்? புதிதாக வந்தவர்கள் எழுந்து நிற்கின்றனர். புதிய குழந்தைகள் பாபாவுக்கு மிகவும் செல்லமானவர்கள். பாபா அவர்களை செல்லங்களே! செல்லங்களே என்றழைக்கின்றார். பாபா அவர்கள் ஒவ்வொரு குழந்தைக்கும் மிகவும் இனிமையான திருஷ்டியின் அன்பு நினைவையும் வழங்கினார். மேலும் கூறினார் ஒவ்வொரு குழந்தைக்கும் இவ்வாறு என் சார்பில் கட்டி அரவணைத்து அன்பு நினைவைக் கூறவும். அனைவருக்கும் பாபாவின் சார்பில் அணைத்துக் கொள்கின்றனர். ஏனெனில், நான் அங்கு பார்த்தேன் எனில், இங்கும் செய்ய முடியும். ஆக அனைவருக்கும் பாபாவின் சார்பில் இனிமையான அணைப்பு!

ஹலோ! நமது இனிமையான தாதி ஜானகி கூட அமர்ந்துள்ளார், இரத்தன் மோகினி தாதியும் அமர்ந்துள்ளார். மதுபன் வாசிகள் கூட மிக சிநேகத்துடன் அமர்ந்துள்ளனர். அவர்களது முகமே பேசுகிறது.

(தாதி ஜானகி கூறினார்) என்ன சொல்லட்டும்! பாபா மிக அற்புதமானவர். நீங்களும் குறைந்தவர் அல்ல. எப்படியோ தாங்கள் எங்களது மனோபாவனையை, அன்பை பாபாவிடம் எடுத்துச் சென்றுள்ளீர்கள் பாபாவும் மிக அன்போடு சந்தித்தார். பாபா கூறினார்: டிராமாவில் என்ன நடக்கிறதோ அதில் நன்மையே. பாபா நீங்கள் எவ்வளவு இனிமை மற்றும் அன்பானவர் என்று நாம் கூறுகிறோம். பாபா இனிமையானவர், நம்மை இளிமையாக்கு வதற்காக இவ்வளவு இனிமையான விஷயங்களை நமக்கு அளித்து, அமைதியாக்கி விடுகிறார். தாதி! தாங்கள் பாபாவின் செய்தியைக் கூற, எமது உள்ளங்களுக்கு சக்தியை வழங்கி விட்டீர்கள்! உள்ளத்தின் நிலையை என்னவென்று சொல்வது. தாதி, தாங்கள் மும்பையிலிருக்கிறீர்கள் அங்கிருந்தும் கூட பாபாவை விட்டு விடவில்லை நாங்களும் விட்டு விடவில்லை. பாபாவை அன்பால் கட்டிக் போடுங்களேன்.

(குல்ஸார் தாதி பேசுகிறார்). எல்லோரும் அன்பு செலுத்துகின்றனர். அதை பாபா பார்த்துச் கொண்டிருக்கிறார். பாபாவின் கூடவே உங்களது நினைவுகளும் இருக்கிறது. மோகினி சகோதரி உங்களை சரியாக வைத்துக் கொண்டு அமர்த்திருக்கிறீர்கள். உங்களது ஆரோக்கிய முன்னேறிக் கொண்டே வருவதைப் பார்க்க பார்க்க மிகவும் குஷியாக இருக்கிறது. நீடுழி வாழ்ந்திருங்கள்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 15.12.2013 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அன்பான நினைவுகள்!

மதுபன் சபைக்கு (டைமண்ட் ) வந்தபின் உடல்நிலை ஒத்துழைக்காததால் தாதிஜி (ரதம்) திரும்பிச் சென்று விட்டார். பின்னர் வீடியோ மூலம் பழைய முரளி காட்டப்பட்டது. சிறிது நேரம் கழித்து மீண்டும் சபைக்கு வந்தார். அனைவரும் மகிழ்ச்சி பொங்க கைதட்டி வரவேற்றனர். திருஷ்டி அனைவருக்கும் அளித்த பின்னர் பாப்தாதா கூறியதாவது: சதா மகிழ்ச்சியாக இருக்கும் அதிர்ஷ்டக் குழந்தைகளுக்கு மிக-மிக-மிக-மிக அன்பான நினைவுகள்! எப்போதும் மகிழ்ச்சியாக இருங்கள் மற்றும் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளுங்கள். பாப்தாதா ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக அன்பை அளிக்கின்றார்; மேலும் அனைவருக்கும் பிரியமான தேகாபிமானத்திலிருந்து விலகியிருக்கும் தந்தையை இதயத்தில் இருத்தியபடியே ஒவ்வொரு அடியையும் எடுத்து வையுங்கள். உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் உள்ள எல்லாக் குழந்தைகளும் பாப்தாதாவின் அன்பு நினைவை ஏற்றுக்கொள்ளுங்கள். குஜராத் வாசிகளுக்கும் உலகிலுள்ள அனைத்து ஆத்மாக்களுடன் சேர்த்து அன்பான நினைவுகள்! ஓம் சாந்தி.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

**31.12.2013 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்**

## பழைய வருடத்திற்கு விடை கொடுத்து விட்டு கூடவே சொப்பனத்தில் கூட என்ன பலவினம் இருந்ததோ அதனை விடுவது மற்றும் உற்சாகம், ஆர்வத்தோடு நற்குணங்களை தாரணை செய்வதற்கான மன உறுதி நிறைந்த சங்கல்பம் செய்து எப்பொழுதும் ஆஹா! ஆஹா! என்று வாழ வேண்டும், தினமும் அந்த சங்கல்பத்தை அமிர்தவேளையில் மீண்டும் மீண்டும், நினைத்து வந்தால் பாப்தாதாவினுடைய அதிகபட்ச உதவி கிடைக்கும்!

இன்று பாப்தாதா அனைத்து குழந்தைகளையும் பார்த்து குஷி அடைந்து கொண்டிருக்கின்றார் பெரும்பாலான அனைத்து குழந்தைகள் மிகவும் மகிழ்ச்சியாக தென்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் பாப்தாதா நிறைந்திருக்கிறார். எப்படி குழந்தைகள் சிநேகம் என்னும் விமானத்தின் மூலம் வந்தடைந்திருக்கின்றனர். பாப்தாதாவும் ஒவ்வொரு குழந்தையின் சிநேகம் நிறைந்த தன்மையைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார். ஆஹா!

எனது சிநேகமான குழந்தைகளே ஆஹா! ஒவ்வொரு குழந்தைகளின் நெற்றியிலும் மகிழ்ச்சியானது பிரகாசமாக தென்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஆக, ஒவ்வொரு மகிழ்ச்சி நிறைந்த குழந்தையையும் பார்த்து பாபாவும் உள்ளத்தில் கீதத்தை பாடிக் கொண்டிருக்கின்றார். ஆஹா! குழந்தாய் ஆஹா! ஒவ்வொரு குழந்தையின் நெற்றியிலும் பிரகாசித்துக் கொண்டிருக்கின்ற பிந்தியான ஆத்மா தென்பட்டுக் கொண்டிருக்கின்றது, ஒவ்வொருவரின் உள்ளத்திலும் உள்ளத்திற்கு ஒய்வளிப்பவர் (திலாராம்) தென்பட்டுக் கொண்டிருக்கின்றார். பாப்தாதாவும் ஒவ்வொரு குழந்தையையும் பார்த்து குஷி அடைந்துக் கொண்டிருக்கின்றார். மேலும் உள்ளத்தில் ஆஹா! குழந்தாய் ஆஹா! என்னும் பாடலையும் பாடிக் கொண்டிருக்கின்றார். ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் சிநேகம் நிறைந்திருக்கின்றது.

இன்று அனைவரும் பழைய வருடத்திற்கு விடை அளித்து விட்டு புதிய ஆண்டை கண்ணிலே நிறைத்துக் கொண்டுள்ளீர்கள். அனைவரும் இன்றைய தினம் உங்களிடம் ஏதேனும் விசேஷ தன்மையை தாரணை செய்து, சாதாரண தன்மை ஏதையெனும் விட்டு விட்டீர்களா? என்று பாப்தாதா கேட்கின்றார். புதிய வருடத்தில் தன்னில் புருஷார்த்த வாழ்க்கையில் தேவைப்படக்கூடிய ஏதேனும் ஒரு விசேஷத்தை சங்கல்பத்தில் நினைவில் கொண்டு வந்துள்ளீர்களா? பழையதை விட்டு புதியதை தாரணை செய்து இருக்கிறீர்களா? ஒவ்வொருவரும் தங்களது சம்ஸ்காரத்தில் ஏதேனும் புதுமையைக் கொண்டுவர நினைத்துள்ளீர்களா? அல்லது தாரணை செய்துள்ளீர்களா? விட்டுவிடவும் வருகிறது. தாரணை செய்யவும் வருகிறது.

பாப்தாதாவிற்கு ஒவ்வொருவருடைய முகத்திலும் தற்போது இந்த சமயத்தில் சிநேகத்தின், சந்திப்பின் ஜொலிப்பு தென்பட்டுக் கொண்டிருக்கின்றது. நீங்கள் அனைவரும் கூட இன்றைய முழு நாளிலும் எதையேனும் விட்டு விட்டு, எதையேனும் தாரணை செய்துள்ளீர்களா? பாப்தாதா பெரும்பான்மையான குழந்தைகளை இந்த சமயத்தில் மிக மகிழ்ச்சியாக இருப்பதாகப் பார்க்கிறார். மேலும் எந்த பாடலைப் பாடிக் கொண்டிருக்கிறார்? ஆஹா! குழந்தைகளே ஆஹா! இன்றைய தினம் ஒவ்வொரு குழந்தையும் எதையேனும் விடவும்

வேண்டும். எதையேனும் புதிதாக குணத்தை தாரணை செய்ய வேண்டும் எண்ணிப் பாருங்கள், எதை விட வேண்டும். எதை எடுத்துக் கொள்ள வேண்டும்? பாப்தாதா அனைத்து குழந்தைகளின் முகத்தில் சதா கவலையில்லாத ராஜாவின் ஜொலிப்பைப் பார்க்க விரும்புகின்றார். கவனம் உள்ளதா? ஆனால் இன்றைய விசேஷ தினத்தில் உள்ளத்திலிருந்து சிலதை வெளியேற்ற வேண்டும். ஏதேனும் சிலதை தாரணையும் செய்ய வேண்டும் முடியுமா? முடியும் என்பவர்கள் கை உயர்த்துங்கள். தற்போதிலிருந்தே அனைவரது நெற்றியிலும் உற்சாகத்தின் அலைகள் தென்பட்டுக் கொண்டு இருக்கின்றன. தற்போது இந்த உற்சாகம் சதா இருக்கட்டும் இதனை விசேஷமாக கவனத்தில் கொள்ள வேண்டும். உங்களது உள்ளத்தில் ஏதேனும் விசேஷமான உற்சாகத்தைக் கொண்டு வாருங்கள். மேலும் அந்த உற்சாகத்தை சோதித்திட வேண்டும், அந்த உற்சாகம் இருக்கிறதா அல்லது மாறிவிட்டதா? எப்பொழுதும் பாப்தாதா இதையே விரும்புகின்றார். அதாவது ஒவ்வொரு குழந்தையின் முகத்திலும் உற்சாகம் ஏதேனும் குணத்தை தாரணை செய்வதில் இருக்க வேண்டும். குணத்தை தாரணை செய்தால்தான் அவகுணங்கள் அழிந்து போகும் இல்லையா! ஆக, பாப்தாதாவிற்கு குஷி, அனைத்து குழந்தைகளும் ஏதேனும் விசேஷ பலஹீனங்கள், தாம் விரும்பாவிட்டாலும் வந்து விடக் கூடிய அந்த சங்கல்பத்தை மற்றும் தாரணையை இன்றைய தினம் திட சங்கல்பத்தின் மூலம் விட்டு விட முடியுமா? யார் விட்டு விடமுடியுமோ அவர்கள் கையை உயர்த்துங்கள். நல்லது கையை என்னவோ உயர்த்துகிறீர்கள். தைரியம் வைத்திருக்கிறீர்கள். மேலும் பாபாவினுடைய உதவி கூடவே இருக்கும் அனைவரும் தங்களது உள்ளத்தில் எதை விட வேண்டும் என நினைக்கின்றீர்கள் ஆனால் அது சங்கல்ப்பமாக மட்டுமே இருந்து விடுகிறது. அவற்றை இன்று திட சங்கல்பத்தின் மூலம் பாபாவிற்கு கொடுத்து விட முடியுமா? கையை உயர்த்துங்கள்.! கொடுக்க முடியுமா? கொடுத்து விட்டு திரும்ப வாங்க கூடாது. அதற்கு பாப்தாதா விசேஷமாக அமிர்த வேளையில் விசேஷமான உதவியைத் தருவார். ஏனெனில் பாப்தாதாவிற்கு ஒவ்வொரு குழந்தையிலும் தெரிகிறது. ஏதேனும் ஒன்றை விட்டு விட விரும்புகின்றனர் ஆனால், இந்த ஆனால் என்பதில் நிறைய விசயங்கள் உள்ளன ஆனால் இன்று யாரிடம் என்னென்ன பலவீனங்கள் உள்ளனவோ, அவை இல்லையென்றால் வாழ்த்துக்கள்! ஒருவேளை

சிறிதாவது சொப்பனத்தில் வந்தால் கூட இன்றைய தினத்தில் திட சங்கல்பத்தின் மூலம் பாபாவிற்கு கொடுத்து விடுங்கள். அவ்வாறு கொடுத்து விட வருகிறது அல்லவா! சங்கல்பம் செய்யுங்கள். இந்த திட சங்கல்பத்தை இன்று செய்தீர்கள் என்றால் இன்று திட சங்கல்பம் செய்வதில் உங்கள் ஒவ்வொருவருக்கும். அதிகப்படியான உதவி பாபாவிடமிருந்து கிடைக்கும். அதிகாலை அமிர்தவேளை, யோகம் செய்த பிறகு சங்கல்பங்களை சோதிக்க வேண்டும். மேலும் மனப்பூர்வமாக திட சங்கல்பம் கொள்ள வேண்டும். அப்பொழுது பாப்தாதாவின் அதிகப்படியான உதவி கிடைக்கும் உண்மையான உள்ளத்தோடு, நடக்கிறதா இல்லையா? என்று நான் பார்ப்பதில்லை. உண்மையான உள்ளத்துடன் சங்கல்பம் செய்தால் அதிகப்படியான உதவி நிச்சயம் கிடைக்கும். ஏனெனில் புது வருடம் ஆரம்பம் ஆகிறது. பாப்தாதா விரும்புகிறார். ஒவ்வொரு குழந்தையும் புதிய ஆண்டு ஆரம்பம் ஆன உடனேயே அதிகாலை எழுந்து தனது உள்ளத்தில் வெறும் சொல்வதால் மட்டும் அல்ல, உளபூர்வமான புருஷார்த்தம் செய்தீர்கள் என்றால் உதவியும் கிடைத்து விடும். திடசங்கல்பம் செய்யுங்கள். நாளை அதிகாலை மன உறுதியோடு விட்டுவிடுவதற்கான (பலஹீனத்தை) சங்கல்பம் செய்ய வேண்டும். ஏனெனில் பாப்தாதா பார்க்கிறார். சங்கல்பம் என்னவோ அனைவரும் செய்கின்றனர் ஆனால் சங்கல்பத்தில் கூடவே தினமும் அந்த பலஹீனத்தை பாபாவிற்குக் கொடுத்து பிறகு திட சங்கல்பம் செய்ய வேண்டும் உற்சாகம் மற்றும் உல்லாசத்தில் குணத்தை தாரணை செய்து முடிக்க வேண்டும். செய்தே காண்பிப்பேன் செய்து தான் ஆக வேண்டும். என்ற திட சங்கல்பம் செய்ய வேண்டும். இதில் எவருடைய உதவியாவது தேவைப்பட்டால் மகாரதிகளின் உதவியை நாடலாம்.

இன்றைய தினத்தை மன உறுதியின் (திட தன்மை) தினமாக கொண்டாடுங்கள். நடந்தே ஆக வேண்டும். செய்தே ஆக வேண்டும் செய்வோம் என்பதல்ல. செய்யத் தான் வேண்டும், இதில் பாப்தாதா உங்களது உதவியாளராக இருக்கிறார். உற்சாகத்தை தளர விட்டுவிடாதீர்கள். தினமும் மீண்டும் மீண்டும் எண்ணிப் பார்க்க வேண்டும். பலஹீனத்தை பாபாவிற்குக் கொடுத்து விடுங்கள். கொடுத்து விட்ட பொருள் திரும்ப வாங்குவது கிடையாது. பெரும்பாலான குழந்தைகள் விரும்புகின்றனர் ஆனால் தனது பலஹீனத்தை

பாபாவிற்கு கொடுத்து விடுங்கள். கொடுக்கப்பட்ட பொருளை ஒருபொழுதும் திரும்ப வாங்கப்படுவதில்லை. இதனையும் பாபா பார்த்துக் கொண்டிருக்கின்றார். பாபாவிற்கு மிகவும் மகிழ்ச்சி, ஏனெனில் அனைத்து குழந்தைகளின் பெரும்பாலானோர் விரும்புகின்றனர் ஆனால் அந்த விருப்பத்தின் கூடவே என்ன சக்தி வேண்டுமோ அந்த சக்தியின் மீது குறைவான கவனத்தையே வைக்கின்றனர். எப்படியோ ஆகி விடும். இந்த விசயம் தான் இடையில் தடையை ஏற்படுத்துகிறது. மன உறுதியை சங்கல்பத்தின் கூடவே வையுங்கள். ஆக, இன்றைய தினம் பழைய வருடம் சென்று கொண்டிருக்கின்றது. புதிது வந்து கொண்டிருக்கிறது. ஆக, ஒவ்வொருவரும் ஏதேனும் உங்கள் திட சங்கல்பத்தை உங்களது உள்ளத்தில் நினையுங்கள். விட்டு விட வேண்டும் என்று உள்ளத்தால் நினையுங்கள் ஆனால் தினமும் அமிர்தவேளைக்குப் பிறகு அதனை சோதித்துப் பாருங்கள். என்ன சங்கல்பம் செய்தேனோ அது திடமானதுதானா? ஏனெனில் இதில் சோம்பேறித்தனம் வந்து விடுகிறது. ஆக இன்றைய தினம் சிரேஷ்ட தாரணையை உங்கள் உள்ளத்தில் செய்யுங்கள். மேலும் தினமும் அமிர்தவேளை அதனை மீண்டும் மீண்டும் எண்ணிப் பாருங்கள். கொடுத்ததைத் திரும்ப வாங்கக் கூடாது ஏனெனில் பாப்தாதா தற்போது போக எம்மாதிரி சமயம் வரப்போகிறதோ அதனைப் பார்த்து ஒவ்வொரு சங்கல்பத் திலும் ஒவ்வாரு நாளும் திடத் தன்மைகொள்ள வேண்டும் என்ன சங்கல்பம் செய்தேனோ அது எந்தளவு முடிவடைந்துள்ளது என்று ரிசல்ட்டைப் பாருங்கள். ஒருவேளை சிறிதளவு தளர்ந்திருந்தாலும் முதலில் உற்சாகம் நிறைந்திருந்தது. பின்னால் கொஞ்சம் கொஞ்சமாக தளர்ந்து போய்விடுகிறது அவ்வாறு தளர்ந்து போகவிடக்கூடாது. செய்தே காண்பிக்க வேண்டும். என்னும் சங்கல்பத்தை வைக்க வேண்டும். மாஸ்டர் சர்வ சக்திவான் சாதாரணமானதல்ல. ஆக நாளைய தினம் ஏதேனும் திட சங்கல்பத்தை எதிரில் கொண்டு வர வேண்டும். மேலும் தினமும் அமிர்தவேளை எண்ணிப் பார்க்க வேண்டும். சோதனை செய்ய வேண்டும். பாப்தாதாவின் உதவியை வாங்கிக் கொள்ள வேண்டும்.

ஆக அனைவரும் மிகவும் மகிழ்ச்சியாக இப்பொழுது தென்பட்டுக் கொண்டிருக்கின்றீர்கள். தற்போது மிகவும் குஷி நிறைந்துள்ளவர்கள் கை உயர்த்துங்கள். தற்போது எப்படி ஸ்திதி உள்ளதோ அவ்வாறே

மீண்டும் மீண்டும் ஸ்திதியை எண்ணிப் பாருங்கள். தற்போது பாப்தாதா உடன் இருக்கின்றார். அவ்வாறு உள்ளத்தில் அவரை சதா கூடவே வைத்திருக்க வேண்டும். உள்ளத்தின் காவலர் அவர். ஆக அனைவரும் இன்று ஏதேனும் சுய முன்னேற்றத்தை உங்கள் கணக்கு படி சோதனை செய்து சங்கல்பத்தில் வையுங்கள் தினமும் அதனை அதிகாலை அமிர்தவேளைக்குப் பிறகு மீண்டும் மீண்டும் எண்ணிப் பார்க்க வேண்டும். நல்லது!

இப்பொழுது எல்லோரும் குஷியாய் இருக்கிறீர்களா! கை உயர்த்துங்கள்! ஆக இந்த சமயத்தை சதா நினைவில் கொள்ள வேண்டும். எப்படி இப்பொழுது உள்ளத்தால் குஷியாய் நிறைந்துள்ளீர்களோ, இந்த சமயத்தை மீண்டும் மீண்டும் மனதில் எண்ணிப் பாருங்கள். பாபா அனைத்து குழந்தைகளின் போட்டோ எடுப்பார். அந்த போட்டோ சாதாரணமானதல்ல, அது சதா குஷி நிறைந்தது உறுதிதானே? எந்தளவு உறுதி? குஷியை ஒருபோதும் விட்டு விடக்கூடாது. குஷியாய் இருக்க வேண்டும் குஷியை பிறருக்கும் வழங்க வேண்டும். பிரம்மா குமார், பிரம்மா குமாரிகள் நீங்கள் உங்களது பட்டம் என்ன? ஆக இதை நினைவில் செய்ய வேண்டும் நான் பிரம்மா குமார் அல்லது பிரம்மா குமாரிகள் என்பதை சதா நினைவில் கொள்ள வேண்டும். நான் சாதாரணமானவன் அல்ல. பிரம்மாபாபாவை அறிந்துள்ளேன். ஒருவேளை நான் அவரை பார்க்காமல் இருக்கலாம் ஆனால் அவரை அறிந்துள்ளேன் அல்லவா! என்னுடைய பாபா, எந்தளவிற்கு பாபாவின் மீது என்னுடையவர் என்பதைக் கொண்டு வருவீர்களோ, என்னுடைய பாபா. என்னுடைய பாபா அந்தளவு எளிதாக நினைவு ஏற்படும். ஏனெனில் எனது என்பது ஒருபோதும் மறந்து போவதில்லை. ஆக பாபாவை உங்களுடையவர் ஆக்கிக் கொள்ளுங்கள். இந்த எனது என்பதை மறக்கவே கூடாது. ஆக பாப்தாதா இதனையே விரும்புகிறார். அதிகாலையில் எழுந்து உங்களது முகத்தைப் பார்க்க வேண்டும். மனதின் முகத்தை. இந்த ஸ்தூல முகத்தைப் அல்ல. மனதின் முகத்தை பார்க்க வேண்டும். பாபாவின் உள்ளத்திற்குப் பிடித்தமாக இருக்கிறதா? நல்லது!

அனைத்து குழந்தைகளையும் பார்த்து பாப்தாதாவிற்கும் மகிழ்ச்சி ஏற்படுகிறது. ஆஹா குழந்தைகளே ஆஹா! அனைவருமே ஆஹா!

ஆஹா தானே! அப்படியிருக்கிறீர்களா! ஆஹா! ஆஹா என்று இருக்கிறீர்களா? இரண்டு கைகளை உயர்த்துங்கள். சதா எப்பொழுதும் இருப்பீர்களா அல்லது இப்பொழுது மட்டுமா? சதா ஆஹா! ஆஹா! பாபா எப்பொழுதும் உங்களுக்கு ஆஹா! ஆஹா! என்று இருக்கிறார் அல்லவா: எனவேதானே அவரை நினைக்கிறீர்கள். பாபா இவ்வாறு ஆஹா! ஆஹா! என்றால் குழந்தைகள் நீங்களும் ஆஹா! ஆஹா! அதிகாலையில் எழுந்து நான் எந்த குழந்தை என்று எண்ணிப் பார்க்க வேண்டும் -ஆஹா ஆஹா குழந்தையா! நல்லது. சதா இவ்வாறு ஆஹா! ஆஹா! என்று இருப்பீர்களா? இதில் கவனம் செலுத்த வேண்டும். இதற்கு கையை உயர்த்துங்கள். காலையில் எழுந்த உடனேயே இந்த ஆஹா! ஆஹா! என்னும் வார்த்தையை நினைவு செய்ய வேண்டும் ஆஹா! ஆஹா! என்று அதனை பாபா பார்க்க வேண்டும். நல்லது!

இன்று வந்திருக்கக் கூடிய அனைத்து குழந்தைகளுக்கும் பாபா விசேஷமான திருஷ்டியை வழங்கிக் கொண்டிருக்கின்றார். எதற்காக? ஆஹா! ஆஹா! என்று வாழ்வதற்காக அவ்வாறு இருப்பீர்களா கையை உயர்த்துங்கள். இருப்பீர்களா? ஆக, ஆஹா! ஆஹா என்ற இந்த வார்த்தைகளை மறக்கக் கூடாது. சபையில் என்னவோ கையை உயர்த்திவிட்டீர்கள் இதனை மறந்து விடக்கூடாது. நான் யார்? ஆஹா! ஆஹா! மிகவும் எளிதுதானே! ஆஹா! ஆஹா! என்று இருந்தால் என்னவாகும்? மகிழ்ச்சி என்ன விசயம் நடந்தாலும் சரி வந்தது வந்த மாதிரியே போய் விட்டது. நீங்கள் ஏன் அதைப் பிடித்துக் கொண்டிருக்கின்றீர்கள். எந்த விசயமும் தங்குவதே இல்லை. போய்விடுகிறது. நீங்கள் பிடித்துக் கொள்கிறீர்கள். நாளையிலிருந்து தினமும் அமிர்தவேளையில் உங்கள் முகத்தைப் பார்க்க வேண்டும். உள் முகத்தை வெளி முகத்தை அல்ல ஆஹா! ஆஹா! என்பதை சோதிக்க வேண்டும் ஏன்? பாபா ஆஹா! ஆஹா! என்றிருந்தால் குழந்தைகள் என்ன ஆவார்கள். ஆஹா! ஆஹா! தானே இந்த ஆஹா! ஆஹா! என்ற வார்த்தையை மட்டும் நினைவில் கொள்ள வேண்டும். அவ்வளவே. ஒருவேளை எப்பொழுதாவது மன நிலை சோர்வாகி விட்டால் ஆஹா! ஆஹா! இந்த வார்த்தையை நினைத்துப் பார்க்க வேண்டும். நல்லது!

பாப்தாதா இன்று கிடைத்தார் அல்லவா! பாபாவிற்கும் குழந்தைகள் இல்லாது நிம்மதியாகவே இல்லை. பாப்தாதா முழு குடும்பத்திற்கும் அமிர்தவேளையில் சுற்றி வந்து திருஷ்டி கொடுக்கிறார். பாப்தாதா அம்மாதிரி சுற்றி வர எவ்வளவு நேரம் வேண்டும்? ஏனெனில் குழந்தைகள் மீது அவ்வளவு அன்பு இருக்கிறது அல்லவா! ஆக தினமும் அமிர்தவேளைக்குப் பிறகு பார்க்க வேண்டும் பாப்தாதா சுற்றி வந்து கொண்டிருப்பார். அனைவரையும் பார்ப்பார். அப்படியென்றால் எப்படி தென்படுவீர்கள்? ஆஹா! ஆஹா! இந்த ஆஹா! ஆஹா என்னும் வார்த்தையை மறக்கக் கூடாது. ஆஹா! ஆஹா! நல்லது! எந்த குழந்தைகள் எங்கிருந்தாலும் சரி, பாப்தாதா அனைவருக்கும் ஆஹா! ஆஹா! குழந்தைகளே என்று கூறி சுற்றி வந்து கொண்டு பார்க்கிறார். எனவே அமிர்த வேளை எழுந்து சதா நினைவில் கொள் வேண்டும். நான் யார்? ஆஹா! ஆஹா! குழந்தைகள் ஏதேனும் விசயம் இருப்பின் அதனை இந்த ஆஹா! ஆஹா! என்பதில் இனைத்து விடுங்கள். விசயத்தை வைத்துக் கொண்டிருக்கக் கூடாது. பாபா மற்றும் நீங்கள் அவ்வளவே நல்லது! குட் நைட்.!

இன்று பாப்தாதா குட் நைட் கூறினார். நீங்களும் உங்களுக்குள் குட் நைட் என்று கூறிக் கொண்டு உறங்கி விட வேண்டும். அனைத்து குழந்தைகளும் யார் எங்கிருந்தாலும் சரி, அனைவரையுமே பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கிறார். எவ்வளவு நேரத்தில் சுற்றி வர முடியும் அனைவரும் நாலா புறங்களிலும் உள்ள குழந்தைகளுக்கு பாப்தாதா குட் நைட் கூறிக் கொண்டிருக்கின்றார்.

**சேவை முறை மகாராஷ்டிரா: மஹாராஷ்டிரா, ஆந்திரா, மும்பை, 13000-வந்துள்ளனர்:** நல்லது! பெயரே மகாராஷ்டிரம் என்று உள்ளது ஆக மகானாகத்தானே இருப்பீர்கள் ஆனால் கொஞ்சம், கொஞ்சம் மறந்து விடுகின்றனர். நல்லது! குட் நைட் இப்பொழுது நீங்கள் சாப்பிட்டு விட்டு தூங்கி விடுங்கள். மற்றபடி குட் நைட் வார்த்தையை நினைவில் கொள்ளுங்கள். இரண்டை வெளிநாட்டு சகோதரர்கள் மற்றும் சிந்தி சகோதர சகோதரிகள் 500-பேர் வந்துள்ளனர். பார்த்தோம், மிகவும் நன்கு சிநேகிகளாக உள்ளனர். சகயோகிகளாகவும் இருக்கின்றனர். முதன் முறையாக மிக அதிகம் பேர் வந்துள்ளனர் -பாப்தாதா கை அசைத்து அனைவருக்கும் திருஷ்டி வழங்கினார்!

நல்லது, நாலா புறத்திலிருந்தும் மற்றும் உள்நாடு, வெளிநாடுகளிலிருந்து வந்துள்ள அனைவருக்கும் பாப்தாதா எதிரிலேயே அன்பு நினைவுகளை வழங்கிக் கொண்டிருக்கிறார். பாப்தாதாவின் முன்னர் ஒரே வினாடியில் அனைவரும் எமர்ஜ் (வெளிப்படுதல்) ஆகி விடுகின்றனர். ஆக, அனைத்து பாகங்களுக்கும் பாப்தாதா வலம் வந்து முழு பிராமண குடும்பத்திற்கு அன்பு நினைவுகளை வழங்குகிறார்.

**நீலு சகோதரியிடம் (குல்ஜார் தாதியின் உதவியாளர்):** இவர் நன்கு சேவை செய்துள்ளார். இவரது சேவையின் லாபம் அனைவருக்கும் கிடைத்துக் கொண்டிருக்கிறது. அனைத்து சென்டர்களின் பிராமணர்களுக்கும் கிடைத்துக் கொண்டிருக்கிறது. மேலும் மிக அன்போடு சேவை செய்கிறார் அனைவருக்கும் இவரது உள்ளத்திலிருந்து அன்பு பிறக்கிறது. (நீங்கள் அடிக்கடி வாருங்கள். நாங்களும் அன்போடு சேவை செய்து கொண்டிருப்போம் என்று நீலு சகோதரி கூறுகிறார்) சரி, மகிழ்ச்சியாக இருக்கிறாய் அல்லவா! சதா குஷிதானே!

**நாளை மோகினி சகோதரியின் பிறந்த நாள்:** வாழ்த்துக்கள். மேலும் முன்னேறிச் செல்வதற்கு வாழ்த்துக்கள்! யாரெல்லாம் வந்துள்ளனரோ அவர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள்!

**நிர்வயர் சகோதரருடன்:** அனைவரும் நன்கு சேவை செய்தனர். சேவையினுடைய பரிசு அனைவருக்கும் கிடைத்துக் கொண்டிருக்கின்றது.

**ரமேஷ் சகோதரருடன்:** நாரி (பெண்கள் சக்திகள்) இவ்விசயத்தில் சீரியல் ஒன்று தயாரித்துள்ளார்) மிக நன்று பார்க்கலாம். (உங்களுக்கு அநேகம் பேர் அன்பு நினைவுகளைத் தந்துள்ளனர்) யாரெல்லாம் அன்பு நினைவுகளைத் தந்திருக்கின்றார்களோ அவர்கள் அனைவருக்கும் பெயர் ரீதியாக பாப்தாதாவின் அன்பு நினைவுகளைக் கூறவும்,

<u>டாக்டர் பனாரஸி சகோதரருடன்:</u> இவர் ரதத்திற்கு நன்றாக சேவை செய்துள்ளார். உள்ளப்பூர்வமாக சேவை செய்கிறாய். இதுவும் அநேகரது உணர்வில் தெரிய வருகிறது. நோயாளிகளுக்கும் (உளப்பூர்வமாக சேவை செய்வது) அந்த அனுபவம் ஏற்படுகிறது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# தனிப்பட்ட சந்திப்புகள் -பார்ட்டிகளுடன் etc

**1) டீச்சர்களுடன் தனிப்பட்ட சந்திப்பு: அனைத்து டீச்சர்களுக்கும் விசேஷமாக ஒரு விஷயத்தின் கவனம் வைக்க வேண்டும் -ஒருபொழுதும் யார் மேலேயும் இராயல் ரூபத்தில் அடிபணிதல் இருக்கக்கூடாது!**

எந்த ஒரு ஆத்மாவின் குணங்களின் பக்கம், கேவை, சகயோகத்தின் பக்கம், புத்தியின் பக்கம், திட்டமிடுதலின் பக்கம் அடிபணிதல் இருக்க வேண்டாம். அவரையே தன்னுடைய ஆதாரமாக ஆக்குவதினால் அடிபணிதல் ஏற்படுகிறது. ஏதாவது ஆத்மாவின் ஆதாரம் ஏற்பட்டு விடுகிறது என்றால், தந்தையின் ஆதாரம் இயல்பாகவே அகன்று விடுகிறது. மேலும் சில காலங்களுக்குப் பிறகு அந்த அற்ப காலத்து ஆதாரம் ஆடுகின்றபோது அலைக்கழிந்து விடுகிறார்கள். எனவே ஒருபொழுதும் இந்த ஆத்மா இந்த விசேஷ சிறப்பியல்பின் காரணமாக பிரபாவம் அடைவது மிகப் பெரிய தவறு ஆகும். வெறும் தவறு அல்ல. மிகப் பெரிய தவறாகும். சேவை நன்றாக வளர்ந்து கொண்டிருக்கிறது என்று இந்த குஷி அடைந்து விடக்கூடாது. இது அற்ப காலத்தின் வெளிப்பாடு ஆகும். அஸ்திவாரம் ஆடியது என்றால் சேவை ஆடி விடும். எனவே ஒருபொழுதும் எந்த ஆத்மாவையும் ஆதாரமாக ஆக்காதீர்கள். இவர் காரணமாக சேவை வளர்ச்சி அடையாது, முன்னேற்றம் அடையாது என்று அப்படி இது காரணம் அல்ல, இது கருமை ஆகும். இது சுத்தமான ஆத்மாவை கருப்பாக்கி விடுகிறது. மிகப் பெரிய தரை ஆகும். எந்த ஆத்மாவையும் ஆதாரமாக ஆக்குவது மிகப் பெரிய குறை ஆகும். அதனால் குறையற்றவராக ஆக முடியாது. மற்றபடி கடுமையாக உழைக்கிறீர்கள். கடின உழைப்புக்கு பாப்தாதா வாழ்த்துக்கள் கூறுகிறார். சாஸ்திரங்களின் கதைகள் மிக அதிகமாக இருக்கின்றன. அதற்கு எந்தவொரு ஆதாரமும் கிடையாது என்று ஏற்கனவே கூறியிருந்தோம் இல்லையா? எனவே டீச்சர் என்றால் எப்பொழுதும் சேவையில் பிஸியாக இருப்பவர். எண்ணத்திலும் கூட தந்தையுடன் பிஸியாக இருந்தீர்கள் என்றால் வேறு ஆத்மாவுடன் பிஸியாக ஆக மாட்டீர்கள். யார் பிஸியாக இருப்பாரோ அவர் எங்கும்

அடிபணிய மாட்டார். ஒன்றும் சேவையற்ற நிலை ஆனதால் பின் மனமகிழ்ச்சிக்கான சாதனம், அன்பு, சகயோகத்தின் பக்கம் அடிபணிதல் இருக்கிறது. யார் பிஸியாக இருப்பாரோ, அவருக்கு இந்த விஷயங்களுக்காக நேரமே இருப்பதில்லை. பாப்தாதா டீச்சர்களை பார்த்து குஷியடைகிறார். தைரியம், ஊக்கம், உற்சாகமும் மிக நன்றான இருக்கிறது. முன்னே சென்று கொண்டிருக்கிறீர்கள் ஆனால் தன்னுடைய காரியங்களின் கதைகளை சாஸ்திரமாக ஆக்காதீர்கள். கர்மத்தின் ரேகை மூலமாக உயர்ந்த அதிர்ஷ்டத்தை உருவாக்க வேண்டும். எதனுடைய ஜென்மமே தவறாக இருக்கிறது என்றால் கதையும் தவறாக இருக்கும், அந்த மாதிரி கதையை உருவாக்காதீர்கள். மாணவர்களுக்கு படிப்பிப்பது என்பது தனக்கும் படிப்பிப்பதாகும். டீச்சர்களுடன் ஆன்மீக உரையாடல் செய்வது பாப்தாதாவிற்கும் பிடித்திருக்கிறது. பின்பற்றி நடப்பவர்கள் மற்றும் சமமாக இருப்பவர்கள் மேல் அதிக அன்பு ஏற்படும். யார் மேல் அன்பு இருக்கிறதோ அவருடைய சிறு பலஹீனம் கூட பெரியதாக அனுபவம் ஆகும். எனவே சமிக்ஞை கொடுக்கிறோம். நாம் எவ்வளவு நெருக்கமாக இருக்கிறோம் என்பதைப் பார்க்க வேண்டும் என்றால் அமிர்தவேளையில் கண்ணாடி தெளிவாக இருக்க வேண்டும். டீச்சர்கள் மற்றவர்களுக்கு ஆறுதல் கொடுப்பவராக ஆகி விட்டீர்கள் இல்லையா? ஆறுதல் பெறுபவராக இல்லையே! டீச்சர்களிடம் குஷியாக, திருப்தியாக இருக்கிறீர்களா என்று கேட்பதற்கான அவசியம் இல்லை. எப்பொழுதும் குஷியாக இருங்கள். மேலும் சேவையில் வளர்ச்சி செய்து கொண்டே இருங்கள். எப்பொழுது கைகளை பிசைகிறீர்கள் என்றால் இந்தக் காட்சியும் நன்றாக இருக்கிறது. அலங்காரத்தை எடுக்கிறீர்கள் என்றால், இன்னொன்று விழுந்து விடுகிறது. சுயதரிசன சக்கரத்தை சரி செய்கிறீர்கள் என்றால் சங்கு விழுந்து விடுகிறது. சங்கை பிடித்துக் கொள்கிறீர்கள் தாமரை மலர் விழுந்து விடுகிறது. இப்பொழுது டீச்சர்களுக்கு சாஸ்திரங்களின் கதையை இல்லாமல் ஆக்க வேண்டும். ஒவ்வொரு எண்ணம், ஒவ்வொரு விநாடியில் அதிர்ஷ்டத்தை உருவாக்குங்கள். சிலர் கதை கேட்பவர்களாக சொல்பவர்களாக மேலும் உருவாக்குபவர்களாகவும் இருக்கிறார்கள். எப்படி வியாசர் அதிசயம் செய்தார். அதே போல் இங்கேயும் அதிசயம் செய்கிறார்கள். ஜென்மம் கொடுக்கிறார்கள், பாலனை செய்கிறார்கள் பின்பு அழிக்க

முடிவதில்லை என்றால் வேதனை அடைகிறார்கள். மேலும் பிறகு உதவி செய்யுங்கள் என்று கூறுகிறார்கள். நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

## பொருளடக்கம்

☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂